# உதயன்

30℃ – 25℃

மழைக்கான சாத்தியம் உண்டு

சுடர் 30 கதிர் 338 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 13, வெள்ளிக்கிழமை 30.10.2015


## அரசியல் கைதிகளுக்காக இந்துக்கள் பிரார்த்தனை

*இன்று நடத்த ஏற்பாடு*

யாழ்ப்பாணம், ஒக். 30

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர் - யுவதிகளின் விடுதலை வேண்டி இன்று இந்து ஆலயங்களில் வழிபாடுகளில் ஈடுபடுமாறு இந்து குருமார் அமைப்பின் தலைவர் க.வைத்தீஸ்வரக் குருக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் இந்து குருமார் அமைப்பினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில், தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்ற துயர நிலை நீங்கிச் சுமுகமான நிலைமை இன்றுவரை ஏற்படாதது மனவருத்தத்துக்குரியது. இதிலும் சிறைகளில் வாடும் எமது இளைஞர் - யுவதிகளின் நிலை மோசமானது. எழுத்தில் அவர்களின் துயரங்களை வடிக்க முடியாது.

இவற்றை மனதில் வைத்து, எமது இளைஞர் - யுவதிகள் விரைவில் தமது குடும்பத்தாருடன் இணைவதற்கு இறைவன் துணைநிற்க வேண்டும் என்று பிரார்த்தித்து இன்றையதினம் பூசை வேளையில் ஒருமனதுடன் பிரார்த்தனை வழி பாட்டில் ஈடுபடுமாறு மக்களை வேண்டிக் கொள்கின்றோம்.

இதற்குரிய ஏற்பாடுகளை ஆலய தர்மகர்த்தாக்கள், குருமார்கள், நிர்வாக சபையினர் மேற்கொள்ளுமாறு வேண்டிக்கொள்வதுடன், பொது மக்களையும் இதில் பங்கெடுக்குமாறு வேண்டிக் கொள்வதாக - அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# மகிந்த, கோத்தா தண்டிக்கப்படார்

## படையினர் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும் என்கிறது மைத்திரிபாலவின் நல்லாட்சி அரசு

கொழும்பு, ஒக்ரோபர் 30

ஜெனிவாத் தீர்மானத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், அதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் பாதுகாப்புப் படையினர் ஆகியோர் தண்டிக்கப்படமாட்டார்கள் என அரசு நேற்று அறிவித்துள்ளது.

அவர்களது பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என அமைச்சர் மகிந்த அமரவீர நேற்றுத் தெரிவித்தார்.

அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேறிய பின்னர் முதல்முறையாகத் தேசிய அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இதனைத் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் மகிந்த அமரவீர கருத்து வெளியிடுகையில்:-



இலங்கை அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்தாலும், அதிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ச, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும்

பக். 24



## கண்ணீர்க் குளமானது நேற்று மீரியபெத்தை

### உயிரிழந்த உறவுகளுக்கு சுடரேற்றி அஞ்சலி

கொழும்பு, ஒக்.30

ஒட்டுமொத்த மலையகத்தையும் பெரும் சோகத்தில் ஆழ்த்திய மீரியபெத்தை மண்சரிவும் அவலமும் நிகழ்ந்து நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியானது.

இந்த நிலையில், மண்ணுக்குள் புதையுண்டு உயிரிழந்த தமது உறவுகளை மீரியபெத்தை மக்கள் சுடரேற்றி விழிநீர் வடித்த படியே நினைவு கூர்ந்தனர்.

மண்சரிவு இடர் இடம்பெற்ற பகுதிக்குள் வந்த மக்கள், உயிரிழந்த தமது உறவுகளின் பெயர்களைக் கூறி மண்ணில் மண்டியிட்டபடி கதறி அழுதனர். சிலர் ஒப்பாரி வைத்தனர். இதனால், மீரியபெத்தை கண்

பக். 24

## இன அழிப்பை மறைக்கிறது பரணகம குழுவின் அறிக்கை

### பான் கீ மூனுக்குக் கடிதம்

சென்னை, ஒக்.30

காணாமற்போதல்கள் மற்றும் போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக முன்னாள் நீதிபதி மக்ஸ்வெல் பரணகம தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிராக ஐ. நா பொதுச் செயலாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அணு சக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் அழைப் பாளர் மற்றும் பச்சைத் தமிழகம் அமைப்பின் உறுப்பினருமான எஸ்.பி. உதயகுமாரினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்ஸ்வெல் பரணகம அறிக்கை உண்மைத் தன்மையையும் நீதியையும் நிலை நாட்டத் தவறி

பக். 24

## கண்டாவளை பிரதேச செயலகத்தை இடம்மாற்ற மக்கள் கடும் எதிர்ப்பு



கிளிநொச்சி, ஒக்.30

பள்ளத்தை நிரப்பிக் கட்டடம் கட்டுவதால் வெள்ளத்தில் மிதக்கின்றது விளை நிலம் என்று தெரிவித்து, கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தை இடம்மாற்றும் முயற்சிக்கு எதிராகக் கண்டாவளை பிரதேச மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கண்டாவளைப் பகுதியில் அமைந்துள்ள கண்டாவளைப் பிரதேச செயலகத்தைப் புளியம்பொக்கணைச் சந்திக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டுக் கட்டட நிர்மாணப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு

பக். 24

## அரசியல் கைதிகளில் 70 பேருக்கே பிணை

### சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

நாடு முழுவதிலும் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் 60 தொடக்கம் 70 பேர் வரையிலேயே பிணையில் விடுவிக்கப்படக் கூடிய சாத்தியம் உள்ளதாகச் சட்டமா அதிபர் திணைக்களத்தினர், அரசியல் கைதிகளின் சட்டத்தரணிகளிடம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் புதன்கிழமை, சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுக்கும், தமிழ் அரசியல் கைதிகளின் சட்டத்தரணிகளுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 169 புலிச் சந்தேக நபர்கள் மற்றும் நீதிவான் நீதிமன்றத்தின் வழக்கு மூலம் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 48 நபர்கள் உட்பட்ட 217 பேரில் அவர்களின் குற்றத்தின் தன்மை மற்றும் சாட்சிகளின் அடிப்படையில் பார்க்கும்போது 60 தொடக்கம் 70 பேர் வரையே பிணையில் செல்லக் கூடிய வாய்ப்பு

பக். 24

## இளவாலை பொலிஸாரின் வசமுள்ள காணிகள் மார்ச்சுக்கு முன் விடுவிப்பு

### நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், ஒக். 30

இளவாலைப் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள தனியார் காணியை அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் விடுவிப்பதற்கு பொலிஸார் இணக்கம் தெரிவித்துள்ளனர். இந்த விடயத்தை தமது அரச தரப்புச் சட்டத்தரணி ஊடாக, நீதிமன்றில் நேற்று வாய்மொழி மூலம் தெரியப்படுத்தியுள்ளனர்.

இளவாலையில் தனியார் காணியைக் கையகப்படுத்திப் பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது. குறித்த தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி, காணி

பக். 24

## குற்றச்சாட்டின்றி ஒருவரையேனும் சிறைகளில் தடுத்து வைக்கவில்லை

### சிறைச்சாலை ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு, ஒக்.30

குற்றச்சாட்டுகளின்றி ஒரு கைதியேனும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கவில்லை என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் ரோகண புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இந்திய ஆங்கில ஊடகமான நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குற்றச்சாட்டுகளின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றும், நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள, தமிழ்க் கைதிகளை பிணையில் விடுவிக்கப் பிரதமர் தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தகவல் வெளியிட்டுள்ள சிறைச்சாலைகள் ஆணையாளர் ரோகண புஷ்பகுமார,

குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாத கைதிகள் எவரும் தற்போது சிறைகளில் இல்லை. தண்டனை விதிக்கப்பட்ட 48 தமிழ்க் கைதிகள் உள்ளனர். 116 பேருக்கு எதிராக மேல் நீதிமன்றங்

பக். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ்.போதனா வைத்தியசாலை பார்வையாளர் நேரத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 30
யாழ்.போதனா வைத்தியசாலையில் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிடச் செல்லும் பார்வையாளர்களின் நேரம் மாற்றப்பட்டுள்ளது. இந்த மாற்றம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வருகின்றது என்று வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறுபவர்களை காலை 6 மணி தொடக்கம் காலை 6.30 மணிவரையும், மதியம் 12 தொடக்கம் ஒரு மணி வரையும், பிற்பகல் 5 மணி தொடக்கம் 6 மணி வரைக்கும் பார்வையிட முடியும். காலையில் உணவு வழங்க மாத்திரம் அனுமதி வழங்கப்படும்.
அதனைவிட விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களைப் பார்வையிட இதுவரை காலமும் இருந்து வந்த அனுமதி நடைமுறை தற்காலிகமாகத் தளர்த்தப்பட்டுள்ளதோடு ஒரே நேரத்தில் ஒரு நோயாளியின் அருகே இரு பார்வையாளர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
வைத்தியசாலைக்குள் பிரவேசிக்கும் பொதுமக்கள் தமது தேவைக்கும் நோயாளர்களின தேவைக்குமென எடுத்துவரும் பொலித்தீன் பைகள், பிளாஸ்டிக் பொருள்கள், இளநீர்க் கோம்பைகள் மற்றும் கழிவுப் பொருள்களை வைத்தியசாலை வளாகத்தில் விட்டுச் செல்லாது தம்முடன் எடுத்துச் செல்லுமாறு கேட்கப்படுகின்றனர்.
வைத்தியசாலை வளாகத்தினுள் வெற்றிலை, சிகரெட், மதுபானம் உள்ளடங்கிய போதைப் பொருள்களை எடுத்து வருவது, பாவிப்பது, நோயாளர்களுக்கு வழங்குவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதுடன் அதுபற்றித் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படும்.
சிறுவர்கள் முதியவர்கள் மிக இலகுவில் நோய்த்தொற்றுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் உள்ளதனால் இவர்கள் இயன்றவரை விடுதிகளில் பார்வையாளர்களாக வருவதனைத் தவிர்த்துக் கொள்ளவும்.
தீவிர சிகிச்சைப் பிரிவு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, பிரசவ விடுதிகள், குழந்தை விடுதிகள் என்பனவற்றில் சிகிச்சை பெறுபவர்கள் தீவிர மருத்துவக் கண்காணிப்புக்குள் உள்ளதனால் இயன்றவரை குறித்த பகுதிகளுக்குள் பார்வையாளர்களாக வருவதனைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.- என்றுள்ளது. (ற-4)



பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்பாக நேற்று பிற்பகல் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காக பொலிஸார் நீர்த் தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் நடத்தினர். இந்தச் சம்பவத்தில் இரண்டு தேரர்கள் மற்றும் ஐந்து மாணவர்கள் காயமடைந்துள்ளனர் என்று பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர்.
ஆர்ப்பாட்டத்தின் போது அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட 39 பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# வட மாகாண அரச, தனியார் பஸ்களுக்கு புதிய நேரசூசி

## முதலாம் திகதியில் இருந்து நடைமுறை



யாழ்ப்பாணம், ஒக்.30
வடக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபடும் தனியார், அரச பஸ்களுக்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல் புதிய நேரசூசி நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.
யாழ்ப்பாணம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற வடக்கு மாகாண தனியார் பஸ் உரிமையாளர்கள், அரச பஸ் சாலை முகாமையாளர்களுக்கு இடையிலான கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணத்தில் அரச மற்றும் தனியார் பஸ் சேவைகள் இடையே கடந்த காலங்களில் முரண்பாடான நிலைமை காணப்படுகின்றது. இது குறித்து இரு தரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் மாறிமாறிக் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.
பஸ்களை இடை நடுவில் நிறுத்தி விட்டு சாரதிகள் சண்டையிடுதல், நேரக் கணிப்பை பேணாது தன்னிச்சையாக சேவையில் ஈடுபடுதல், 60க்கு 40 என்ற விகிதாசாரத்தை பேணாமை போன்ற பல குற்றச்சாட்டு பொதுமக்களாலும், பல தரப்பினராலும் பல சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்டிருந்தன.
அதையடுத்து வடக்கில் உள்ள 5 மாவட்டங்களில் உள்ள தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும், அரசபஸ்சாலை முகாமையாளர்களுக்கும் இடையே ஒவ்வொரு மாவட்டமாக போக்குவரத்து அமைச்சால் கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.
அதையடுத்து கடந்த வாரம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் வட இலங்கை தனியார் பஸ் சங்கம் புதிதாக உருவாக்கப்பட்டது. இதற்கு 5 மாவட்டங்களில் இருந்தும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.
தொடர்ந்து அரச பஸ், தனியார் பஸ்களுக்கிடையே நேர சூசியை 60க்கு 40 என்ற விகிதாசாரத்தில் அறிமுகப்படுத்தும் வகையிலேயே நேற்று குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.
இக்கலந்துரையாடலின் போது அரச மற்றும் தனியார் பஸ்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் புறப்படும் நேரம், பஸ்கள் செலுத்த வேண்டிய வேகம், ஒரு மாவட்டத்தில் இருந்து ஒரு நாளைக்கு எத்தனை பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது, அதில் அரச பஸ்கள் எத்தனை, தனியார் பஸ்கள் எத்தனை போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டு அவர்களுக்கான நேர சூசியும் அறிமுகப்படுத்தப்பட்டது.
இதனடிப்படையில் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து வடக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள், அரச பஸ்கள் புதிய நேரசூசிக்கு ஏற்றவாறே சேவையில் ஈடுபடவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)

# காணாமற்போனோரின் உறவுகளை திசை திருப்புவதற்குச் சிலர் முயற்சி

## காணாமற் போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 30
காணாமற் போனோரின் உறவுகளை திசை திருப்பும் நடவடிக்கையில் தென்னிலங்கை மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சிலர் ஈடுபட்டுள்ளனர் என்று காணாமற் போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் சு.மகேந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
காணாமற் போனோர் தொடர்பாக சில தென்னிலங்கை மனித உரிமை செயற்பாட்டாளர்கள் காணாமற் போன குடும்ப உறவுகளை வேறு திசைக்கு கொண்டு செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது. இவர்கள் வடபகுதி காணாமற் போனோரின் குடும்பங்களை கொழும்புக்கு வரவழைத்து அவர்களது மன நிலையை மாற்றும் முயற்சியில் ஈடுபடுவதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.
காணாமற் போனவர்களின் உறவுகள் வறுமையில் வாடுவதை அவதானித்த அமைப்புகள் அவர்களை ஏமாற்றும் செயற்பாட்டைச் செய்வது கவலைக்குரியதாகும். ஐ.நா. சபையின் மனித உரிமைகள் சபையின் காணாமற் போனவர்கள் தொடர்பான அறிக்கையை மையமாக வைத்து அதனை அரசுக்கு சாதகமான முறையில் மாற்ற தமிழ் உறவுகளை திசைதிருப்பும் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றனர்.
இதற்கு முக்கிய காரணம் தமிழ்த் தலைமைகள் காணாமற் போனவர்கள் தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்காததனாலும், இவர்களும் அரசின் திட்டத்தை வரவேற்கின்ற காரணத்தாலும், தென்னிலங்கை அமைப்புகளுக்கும் பணத்தை வாரி வழங்கி தமிழ் மக்களின் மன நிலையை மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். எவ்வளவு வறுமையில் இருந்தாலும் தமது உறவுகள் மீளும்வரை - அரசு பொறுப்பான பதிலை வழங்கும் வரை காணாமற்போன உறவுகளின் குடும்பத்தினர் தமது போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை. இந்த மக்கள் நிவாரணத்தை கோரவில்லை. இதில் இவர்கள் தெளிவாக உள்ளனர். அவர்கள் கேட்பது தமது உறவுகள் எங்கே என்பது மட்டும்தான்.
தற்போது இந்த போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்ய சர்வதேச மட்டத்திலும், உள்ளூர் மட்டத்திலும் விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றுக்கு பலியாக வேண்டாம். போராட்டத்தை தொடர்வதே உண்மையை கண்டறிய [illegible] யாகும் - என்று தெரிவித்தார். (ற)

# கிளி. வைத்தியசாலையில் பற்றாக்குறைகள் அதிகம்

## மாவட்ட செயலக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன

கிளிநொச்சி, ஒக்.30
கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்களுடைய எண்ணிக்கையை காட்டிலும் வைத்தியர்களுடைய எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஆயினும் வைத்தியர்கள், தாதியர் கள் உட்பட சுகாதார தேவைகள் பற்றாக்குறைகள் அதிகமாக உள்ளது என்று கிளிநொச்சி மாவட்டச் செயலக புள்ளி விவர தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அண்மையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட புள்ளிவிவரவியல் சார்ந்த கலந்துரையாடலிலேயே குறித்த தகவல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அந்தப் புள்ளிவிவரத்தின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 96 வைத்தியர்கள் கடமையாற்றுகின்றனர். ஆனால் தாதியர்களாக 81 பேர் கடமையில் உள்ளனர். மாவட்டத்தில் 120 வைத்தியர்களுடைய தேவை இருந்த போதும் இது வரையில் 96 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டு கடமையில் உள்ளனர். இன்னும் 24 வைத்தியர்கள் தேவையாகவுள்ளனர். அதேபோன்று கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் 144 தாதியர்களுடைய தேவை இருந்த போதும் இதுவரை 81 தாதியர்களே கடமைகளில் ஈடுபடுகின்றனர். இன்னும் 63 தாதியர்கள் தேவை என்று புள்ளிவிவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அத்துடன் மாவட்டத்தில் சுகாதார தேவைகளாக 2 வெளிநோயாளர் பிரிவுகளும், 23 நோயாளர் விடுதிகளும், 2 சத்திரசிகிச்சை கூடமும், 2 விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவும், 1 இரத்த வங்கியும், 2 பிரேத அறையும், 8 பொது சுகாதார நிலையங்களும், 10 பராமெடிக்கல் விடுதிகளும், 8 மருத்துவ அதிகாரி விடுதிகளும், 2 மருத்துவ நிபுணர்களுக்கான விடுதிகளும், 2 மருத்துவ ஆவண காப்பகமும், 12 அலுவலகங்களும், 8 நோயாளர் காவு வண்டிகளும் தேவை என்றும் அந்த புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-21,ரி3)

# பம்பலபிட்டியில் யாழ். அங்காடி

யாழ்ப்பாணம், ஒக்.30
தீபாவளியை முன்னிட்டு அகில இலங்கை இந்து மாமன்றமும் கொழும்பு மகளிர் இந்து மன்றமும் இணைந்து யாழ் அங்காடி என்ற நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.
பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் அனுசரணையில் நாளை 31ஆம் திகதி மு.ப. 10 மணிமுதல் மாலை 6.30 மணிவரை இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.
அதில் யாழ்ப்பாண உணவு வகைகள், உற்பத்திப் பொருள்கள், புடைவை - ஆடை வகைகள் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன் விற்பனையும் செய்யப்படவுள்ளன.
இதன்மூலம் பெறப்படும் நிதி வடக்கு நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு உதவிகள் வழங்கப் பயன்படுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கை இடரை எதிர்கொள்ள குழுக்கள் அமைக்கத் தீர்மானம்

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஒக்.30

நாட்டில் தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக ஏற்படும் இடர்களில் இருந்து மக்களைப்பாதுகாப்பதற்காகவும், விரைந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவும் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட செயலகம் தீர்மானித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இடர் பாதிப்புக்களும் அவற்றிற்கான செயற்திட்டங்களும் தொடர்பான கலந்துரையாடலில் மாவட்ட அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் பெய்துவரும் கடும் மழையால் பல மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் மக்கள் பெரும் துன்பப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை எந்தப் பாதிப்புக்களும் ஏற்படாத போதிலும் இனி அவ்வாறான இடர்கள் இடம்பெறாமல் தவிர்ப்பதற்காகவே இந்தக் குழுக்கள் நியமிக்கப்பட உள்ளன. - என்றும் அவர் தெரிவித்தார்.

நடைபெறப் போகும் பேரழிவுகளை முன்னெச்சரிக்கை செய்வதற்கு என ஒரு குழுவும், பாதிப்பு ஏற்பட்டால் அவற்றை நீக்குவதற்கும், அப்புறப்படுத்துவதற்கும் என ஒரு குழுவும், பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கான தற்காலிக வசிப்பிடம், உணவு, பாதுகாப்புககான குழு, அவசர தங்குமிட சேவை மீளமைப்புக்கு என ஒரு குழு, சுகாதாரம் பொதுநலனுக்கான குழு என இந்த குழுக்கள் அமைக்கப்பட உள்ளன.

இந்த அனர்த்த பாதிப்புக்கான குழுக்கள் அனர்த்தம் தொடர்பாக பயிற்றுவிக்கப்பட்ட இராணுவத்தினர், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள், மாவட்ட இளைஞர் மன்ற இளைஞர்கள், மற்றும் சிலரை இணைத்துக்கொண்டு செயற்பட உள்ளன.

அத்தோடு காலநிலை அவதான நிலையம், பொலிஸ் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை மின்சார சபை, புவிசரிதவியல் கணிப்பீட்டகம், சுரங்கத் தொகுதித் திணைக்களம், பிரதேச சபை, மாவட்டச் செயலகம், அரச சார்பற்ற நிறுவனங்கள், பாதுகாப்புப் படையினர், சுகாதாரத் திணைக்களம், மாகாண வீதி அமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கல்விச் சேவை ஆகியவற்றை உள்ளடக்கியதான பேரழிவுகளை முன்னெச்சரிக்கையுடன் செயற்படுத்துவதற்கும் ஒரு உப குழுவும் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக் கலந்தரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அதிபர் சுந்தரம் அருமைநாயகம், இடர் முகாமை உதவிப்பணிப்பாளர் சுகுணதாஸ், மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன், துறைசார் திணைக்கள அதிகாரிகள், அரச-சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ற-21, ரி3)

# கழிவகற்றும் புதிய செயற்றிட்டத்தை கண்ணால் காண முடியாதுள்ள மக்கள்

## அது பரீட்சார்த்தமாகவே சில இடங்களில் நடக்கிறது என்கிறது நல்லூர் பிரதேச சபை

யாழ்ப்பாணம், ஒக்.30

கழிவகற்றல் தொடர்பில் புதிய செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று நல்லூர் பிரதேச சபை அறிவித்திருந்த நிலையில் அவ்வாறு எந்த செயற்றிட்டமும் நடைமுறைப்படுத்தப்படுவதைக் காண முடியவில்லை என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

மக்கள் இவ்வாறு கூறுவது தொடர்பில் பிரதேச சபையினரைக் கேட்டபோது தற்போது பரீட்சார்த்தமாக சில இடங்களில் குறித்த கழிவகற்றல் செயற்றிட்டம் மேற்கொள்ளப்படுகின்றது என்று பதிலளித்தனர்.

எனினும் கடந்த வாரம் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த அறிக்கையில் குறித்த செயற்றிட்டம் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்றும் இதுகுறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்தவாரம் நல்லூர் பிரதேச சபையால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த அறிக்கையில் - கழிவகற்றலுக்கான இடம் இல்லாததால் கழிவகற்றல் தொடர்பில் புதிய செயற்றிட்டம் ஒன்றை மேற்கொள்ள நல்லூர் பிரதேச சபை திட்டமிட்டுள்ளது. அதன்படி உக்கக்கூடிய கழிவுகளை அந்தந்த வீடுகளில் முடியுமான விடத்து பசளையாக்குதல், புதைத்தல், எரித்தல் போன்ற வழிமுறைகளின்மூலம் முகாமை செய்யுமாறும், உக்கமுடியாத கழிவுப் பொருள்களை தரம் பிரித்து மீளப்பெறத்திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக 3 வர்ணப் பைகள் வழக்கப்படவுள்ளன. அவற்றில் மஞ்சள் நிறப் பைகளில் கழுவித் துப்புரவுசெய்யப்பட்ட கண்ணாடிகள், கண்ணாடிப் போத்தல்கள், தகரப்பேணிகள் என்பவற்றையும், பச்சை நிறப்பைகளில் கழுவித் துப்புரவு செய்யப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் என்பவற்றையும், கபில நிறப்பைகளில் பொலித்தீன், சொப்பிங் பைகள் மற்றும் உக்கமுடியாத இலத்திரனியல் பொருள்களையும் இட்டு மீளக் கையளிக்க வேண்டும்.

இது தொடர்பாக அந்தந்தப் பகுதி மக்களுக்கு முன்னறிவித்தல் வழங்கி, மாதத்தில் இரு தடவை கழிவுப்பொருள்களை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே பொது இடங்களில்கழிவுகள்வீசுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மீறுபவர்கள்மீது 1987ஆம் ஆண்டு பிரதேசசபைச் சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் சட்டத்தின் பிரகாரம் அந்த இடத்திலேயே அபராதம் அறவிடப்படும். தேவைப்படுமிடத்து சட்டநடவடிக்கை எடுக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் அறியத்தருகின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் செயற்றிட்டத்தின் முன்னேற்றம் குறித்து அறிந்து கொள்வதற்காக நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதி மக்களிடம் கருத்தறிய முற்பட்ட போது அவர்கள் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்று தெரிவித்த்னர். குறித்த மூன்று வர்ணப் பைகள் தமக்கு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

கழிவகற்றல் செயற்பாடு குறித்து இதுவரை எமக்குப் பிரதேச சபையினரால் எந்த அறிவுறுத்தல்களும் வழங்கப்படவில்லை. ஊடகங்கள் வாயிலாக மாத்திரமே குறித்த செயற்றிட்டம் குறித்து அறிந்திருந்தோம் என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர். அதிகாரிகள் எம்முடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவில்லை என்றும் கூறினர்.

அதையடுத்து நல்லூர் பிரதேச சபையினருடன் தொடர்ட கொண்டோம். மக்கள் இவ்வாறு கூறுவது குறித்து அவர்களிடம் வினவியபோது -

முதல்கட்டமாக கோண்டாவில் பிரதேசத்தின் குறிப்பிட்டசில பகுதிகளில் பரீட்சார்த்தமாக எம்முடைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். எதிர்வரும் நாள்களில் நல்லூர்பிரதேசசபைக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் இந்தக் கழிவகற்றல் செயற்றிட்டம் தொடர்பான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளோம். - என்று பதிலளிக்கப்பட்டது.

இது தொடர்பில் மக்களுடன் கலந்துரையாடிய சந்தர்ப்பத்தில் இவ்வாறான செயற்பாடுகள் குறித்து அதிருப்தி வெளியிட்டிருந்தனர். ஊடகங்களுக்கு செயற்றிட்டங்கள் தொடர்பில் அறிவிக்கும் போது அதிகாரிகள் அவை தொடர்பில் மிகைப்படுத்திய தகவல்களை வழங்குகின்றனர் என்று சுட்டிக்காட்டிய பொதுமக்கள் நடைமுறையில் செயற்றிட்டங்கள் அவ்வாறு நடைபெறுவதில்லை என்று குற்றஞ்சாட்டினர். அவை காலப்போக்கில் மறந்து விடப்படுகின்றன என்றும் தமது பிரச்சினைகள் காலங்காலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

சிறப்பான செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்துவதை வரவேற்பதாகவும், ஒத்துழைக்கத் தயராக இருப்பதாகவும் தெரிவித்த மக்கள், அதிகாரிகள் அவை குறித்து அறிவிப்பு விடுட்பதுடன் நின்றுவிடாது அதனை நேர காலத்துடன் முற்று முழுதாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினர்.

(ற-ரி5)

# புனித செபஸ்தியார் தேவாலய காணியைப் பிடிக்கிறது பொலிஸ்

## தேவாலய நிர்வாகம், பங்குத் தந்தை குற்றச்சாட்டு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.30

வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்துக்குச் சொந்தமான காணி மிக நூதனமான முறையில் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கையகப்படுத்தப்படுகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இதுகுறித்து தேவாலய நிர்வாகமும், பங்குத் தந்தையும் பல தரப்பினருக்கு தெரியப்படுத்தியிருந்தபோதும் எவரும் இது குறித்து நடவடிக்கை எடுக்காதுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆலயத்தின் பாதுகாப்புச் சுவர் கடந்த 8 ஆம் மாதம் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் இடித்து அகற்றப்பட்டுள்ளது. அது தொடர்பில் கடந்த 8ஆம் மாதம் 22ஆம் திகதி பங்குத் தந்தை எழுத்துமூலம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார். அதையடுத்து குறித்த பாதுகாப்புச் சுவரை அமைத்துத் தர [illegible] தெரிவித்தனர் என்று பங்குத் தந்தை கூறுகின்றார். ஆயினும் இது வரையில் குறித்த பாதுகாப்புச் சுவர் அமைக்கப்படவில்லை.

இந்தநிலையில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தற்போது கட்டடம் ஒன்றைக் கட்ட ஆரம்பித்துள்ளனர். அந்தக் கட்டடம் குறித்த தேவாலயத்தின் காணிக்குள் அமையுமாறு கட்டப்பட்டு வருகின்றது.

இதுகுறித்து கடந்த 9ஆம் திகதி தேவாலய நிர்வாகம் மற்றும் பங்குத் தந்தை ஆகியோர் யாழ். அரச அதிபர், வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர், பிரதேச சபைச் செயலாளர் ஆகியோருக்கு எழுத்து மூலமாக முறையிட் டுள்ளனர். ஆயினும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த அந்தப் பகுதி மக்கள் இறைவனுக்குக் கூட இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லையா? என்று கவலையுடன் கேள்வி எழுப்பினர். அடாத்தாக மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைத் தடுக்க சம்பந்தப்பட்டோர் முன்வரவேண்டும்என்றும்கோரிக்கை விடுத்தனர்.

(ற-101)

# ஞாயிறன்று வடமராட்சியில் 4 நாடகங்கள்

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் செயல் திறன் அரங்க இயக்கத்தின் நான்கு நாடகங்கள் நெல்லியடியில் மேடையேறப்படவுள்ளன.

நலிந்தோர் நல நிதிக்கான நிதிசேகரிப்பையும் உள்ளூர் கலைஞர்களையும் அவர் தம் படைப்புக்களையும் ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த நாடகங்கள் வடமராட்சியில் முதல் தடவையாக மேடையேறவுள்ளன. நாளை மறுதினம் நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில் பி.ப 3 மணிக்கு ஈழத் தின் நவீன நாடக உலகின் தந்தை குழந்தை ம. சண்முகலிங்கத்தில் பெரியவர்கள் சிறுவர்களுக்காக நடிக்கின்ற 'பஞ்ச வர்ண நரியார்' சிறுவர் நாடகம், தே.தேவானந் தின் பெரியவர்களும்சிறுவர்களும் இணைந்து நடிக்கின்ற 'சிரிப்பு மூடை' சிறுவர் நாடகம், ஈழத்து நாடக வரலாற்றில் முதல் முறையாக மேடையேற்றப் பட்ட 'ஏகாந்தம்' வேடமுக நாடகம் மற்றும்' மரணச்சான்றிதல் என்ற ஓராள் அரங்கிற்கான நாடகம்ஆகியன மேடையேற்றப்படவுள்ளன.

இந்த நாடக விழாவிற்கான நுழைவுச் சீட்டுக்களை வடமராட்சி லயன்ஸ் கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் சிகிச்சை வழங்கப்பட்டால் பாரிசவாதத்திலிருந்து மீளலாம்

## நரம்பியல் நிபுணர் மருத்துவர் அஜந்தா கேசவராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

ஒருவருக்குப் பாரிசவாத நோய் ஏற்பட்டால் அந்த நேரத்திலிருந்து நான்கரை மணித்தியாலங்களுக்குள் அவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்தால் அவர்களை ஆபத்திலிருந்து பாதுகாக்க முடியும். வடக்கில் இந்த நோய் ஏற்பட்டாலும் சிகிச்சைக்கு வருவோர் குறைவாகவேயுள்ளது. அவ்வாறுள்ளவர்கள் கட்டாயம் சிகிச்சைக்குச் செல்லுங்கள். - இவ்வாறு வலியுறுத்தினார் யாழ்.போதனா வைத்தியசாலையின் நரம்பியல் நிபுணர் மருத்துவர் அஜந்தா கேசவராஜா. யாழ்.போதனா வைத்தியாலையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தலைமையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது–

கடந்த 3 வருடங்களாகப் பாரிசவாத நோய்க்குச் சிகிச்சைக்கு வருபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. பொதுமக்கள் இந்த நோய் பற்றிய விழிப்புணர்வு குறைந்தவர்களாக இருப்பதும், பாரிசவாதத்துக்குரிய சிகிச்சையால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி அறியாமல் இருப்பதும் காரணமாக இருக்கலாம்.

முகம் சீரற்ற தன்மையாக இருப்பது, ஒருவர் தனது பேச்சில் சடுதியாக மாற்றம் ஏற்படும்போது அல்லது பேச்சில் திணறல் ஏற்படும்போது அல்லது அவரது பேச்சின் குரல் சடுதியாகக் குறைந்து காணப்படுகின்றபோது பாரிசவாதத்தின் அறிகுறியாகக் கருதிக் கொள்ளலாம். தவிர கையில் திடீரென ஒரு வகையான சோர்வு ஏற்படுகின்றபோதும் அதனையும் அறிகுறியாகக் கொள்ளப்படுகிறது. கையை அவரால் தூக்க முடியாது போனால் அது கையில் உள்ள பலவீனமாகக் கருதப்படும். முகம் கையில் மற்றும் அவரது பேச்சில் திடீரென ஏற்படும் மாற்றம் ஒன்று அல்லது இரண்டு அதாவது முகமும் கையும் இணைந்து வரலாம் அல்லது முகத்தில் ஏற்படும் மாற்றத்துடன் அவரது பேச்சிலே திணறல் ஏற்படலாம். பாரிச வாதம் அறிகுறி ஏற்பட்டால் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும். அங்குதான் சிகிச்சையை மேற்கொள்ளக்கூடிய வசதிகள் உள்ளன.

உலகளாவிய ரீதியில் 6 பேரில் ஒருவர் இந்த நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகும் நிலை உள்ளது. 2 செக்கனுக்கு ஒருவர் பாரிசவாத நோயால் தாக்கத்துக்குள்ளாகும் நிலை உள்ளது. 6 செக்கனுக்கு ஒருவர் பாரிசவாத நோய்க்கு உள்ளாகும் நிலை காணப்படுகிறது.

உலகளாவிய ரீதியில் இடம்பெறும் இறப்புக்களில் பாரிசவாதத்தால் ஏற்படும் இறப்பு இரண்டாவது நிலையில் உள்ளது. இலங்கையில் 4 ஆவது இடத்தில் உள்ளது. எனவேதான் இந்த நோய் ஏற்பட்டால் அவரை உடனடியாக உரியவரிடம் காட்டிச் சிகிச்சை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இந்தநோய் 60 வயதுக்குட்பட்டவர்களையே தாக்குகின்றது. இலங்கையில் இந்த நோயின் தாக்கம் மிகக்கூடுதலாக உள்ளது. இலங்கைச் சுகாதாரத் திணைக்களத்தின் அறிக்கையின்படி இலங்கை மக்களில் இந்நோயின் பாதிப்பு ஒரு வீதமாகவுள்ளது. அந்த வகையில் வடக்கில் சுமார் 10 ஆயிரம் மக்களைப் பாதித்திருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாரிசவாத நோய்ச் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வாராந்தம் 3 தொடக்கம் 5 பேர் வரையில் வருகிறார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் உடனடியான பாதிப்பால் வருபவர்களல்ல. அத்தகைய பாதிப்பு ஏற்பட்டு ஒரு வாரத்துக்கு முன்னர் தாக்கம் ஏற்பட்டவர்களும் பல வருடங்களுக்கு முன்னர் தாக்கம் ஏற்பட்டவர்களும் சிகிச்சைக்கு வருபவர்களாக உள்ளனர்.

பாரிசவாத நோய் ஏற்பட்டு நான்கரை மணித்தியாலங்களுக்குள் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வந்தவர்களின் எண்ணிக்கை 2014 தொடக்கம் 2015 வரை 15 பேராகவுள்ளது. எவருமே உயிரிழக்கவில்லை. இயலாத தன்மையுடையவர்களாக 6 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் எந்தவித குறைபாடுகளுமின்றிச் சென்றுள்ளனர்.

வடபகுதியில் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது பற்றிய கணிப்புஎதுவும் இல்லை. ஏனெனில் கைமருந்து உள்ளிட்டவைகளால் பெரும்பாலானவர்கள் வீடுகளிலேயே இருந்துள்ளனர்.

குருதிக் குழாயில் ஏற்படும் அடைப்பு ஏற்பட்டு மூளையில் உள்ள பகுதிக்கு ரத்தம் செல்வது தடைப்படுவதாலும். உயர் இரத்த அழுத்தம் காரணமாக ரத்தக் குழாய்கள் திடீரென வெடித்து இரத்தக் கசிவு ஏற்படுவதாலுல் பாரிசவாதம் ஏற்படுகிறது. இரத்தக் குழாயில் கொலஸ்ரோல் படிவு, அதிகரித்த குருதி அமுக்கம், புகைத்தல், அதிகரித்த மது பாவனை உள்ளிட்ட வாழ்க்கை முறைகளும் பாரிச வாதத்துக்குக் காரணமாகின்றன.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட உணவுகள் புற்றுநோய்க்கு மட்டுமன்றி ஏனைய நோய்களுக்கும் காரணமாக அமைந்துவிடுகின்றன. தயாரிக்கப்பட்டு விற்கப்படும் உணவுகளில் கொழுப்பின் தாக்கம் அதிக மிருப்பதால் குருதிக் கலங்களுக்குள் கொழுப்புசென்றுபடிவதால் அடைப்பு ஏற்படுகிறது. யாழ்ப்பாணத்தில் மேற்கத்தைய முறையில் உணவு விற்கும் நிலையங்கள் உருவாகியுள்ளதால் சமைப்பது குறைவாகவுள்ளது.– என்றார். (ற-4)

# தூய நீர் வழங்குவது விரைவில் சாத்தியம்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.30

புளோரைட் அதிகமுள்ள தண்ணீரின் கனதியைக் குறைப்பதன் ஊடாகவும், தண்ணீரில் செறிந்துள்ள கல்சியத்தின் அளவைக் குறைப்பதன் ஊடாகவும் சிறுநீரக நோய்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு ஏற்ற வகையில் தூய நீரை வழங்குவது விரைவில் சாத்தியமாகும். தண்ணீரில் கலந்துள்ள கனிப்பொருள்களின் செறிவே சிறுநீரகத்தோடும், கல்லீரலோடும் தொடர்பான நோய்களை ஏற்படுத்துகின்றது. - இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை சீனப் பேராசிரியரும் அமைச்சருமான யானா தலைமையில் சூழல் பாதுகாப்பு மற்றும் நீர் சுத்திகரிப்பு உட்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த பேராசியர்களும், நிபுணர்களும் அமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது அமைச்சின் கேட்போர் கூடத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அமைச்சர் ஹக்கீம் நாட்டில் தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமங்களில் நிலமட்ட நீர் அசுத்தமடைவது தொடர்பாக சீன நிபுணர்கள் கொண்ட ஆராய்ச்சி நடவ



டிக்கைகளுக்கும் சீனாவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட பயணத்தின் போது சீனா அரசு வழங்கிய மகத்தான வரவேற்புக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

அத்துடன் பதவிய நகருக்கு அருகிலுள்ள பராக்கிரமபுர என்ற கிராமத்தில் 700 குடும்பங்களுக்கு நாள்தோறும் தலா 40 லீற்றர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வழங்கப்படுகின்றது. சிறுநீரக நோய் அதிகம் காணப்படும் ஏனைய சில மாகாணங்களுக்கும் சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கலை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு உயரதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன். குழாய் நீர் கிணறுகளின் உபயோகம், மழை நீரை தேக்கிவைத்து வறட்சி நிலவும் காலங்களில் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் என்பன பற்றியும் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வடமேல் மாகாணத்திலுள்ள கற்பிட்டி வாவியிலிருந்து சுத்தமான நீரைப் பெறுவதற்கான ஆய்வொன்றை மேற்கொள்ளும்படியும் அமைச்சர் ஹக்கீம் சீனத் தூதுக் குழுவிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சின் மேலதிக செயலாளர்களான எம்.முயீனுதீன், எஸ்.சீ.விதாரண, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புப் சபையின் தலைவர் கே.ஏ.அன்சார், உதவித் தலைவர் சபீக் ரஜாப்தீன், பொது முகாமையாளர் மற்றும் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ரஹ்மத் மன்சூர் உட்பட உயரதிகாரிகள் பலரும் கலந்தகொண்டனர். (ற-10)

# இரண்டாவது சந்தேகநபருக்கும் விளக்கமறியல்

சாவகச்சேரி, ஒக்.30

பாடசாலை அதிபருக்கு ஒத்தாசை வழங்கிய மேற்பார்வையாளரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 28 ஆம் திகதி உத்தரவிடப்பட்டது. கைதடி நவீல்ட் பாடசாலையில் கற்கும் மாணவிகளுக்குப் பாலியல் ரீதியாகக் கொடுமை விளைவிப்பதாகக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து, சாவகச்சேரி பொலிஸார் பாடசாலை அதிபரைக் கடந்த ஓகஸ்ட் மாதம் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அதிபர் தொடர்ந்து விளக்கமறியலில் இருந்து வரும் நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பாடசாலையில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றும் 28 வயது பெண்ணொருவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் பெண்ணை நவம்பர் ஐந்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். இவர் இந்த வழக்கின் இரண்டாவது சந்தேக நபராக இணைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# பாரிசவாதச் சிகிச்சை நிலைய கட்டடம் அமைக்க நிதி தேவை

## பொதுமக்கள் உதவி செய்ய வேண்டும் எனக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 30

பாரிசவாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கான கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு சாவகச்சேரியில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளபோதும் கட்டடம் அமைப்பதற்குப் பணம் இல்லை என்று அரசு கூறுகிறது. அதனைக் கட்டி முடிக்கப் பொதுமக்கள் பணஉதவி வழங்க வேண்டும் என்று யாழ்.போதனா வைத்தியசாலை நரம்பியல் மருத்துவ நிபுணர் அஜனி அரசலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

வடமாகாண சுகாதார அமைச்சால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. வடக்கில் அங்கு வைத்துச் சிகிச்சை அளிக்க ஏற்றதாக அந்த இடம் உள்ளது. ஆனால் அதற்கான கட்டடத்தைக் கட்டி முடிக்கத் தற்போது பணம் இல்லை என்று அரசு கூறுகிறது.

அங்கு கட்டடம் கட்டுவதற்கான பணத்தைப் பெறும் நடவடிக்கையில் வடமாகாண சுகாதார அமைச்சும் வடமாகாண சுகாதாரத் திணைக்களமும் முயன்றுகொண்டிருக்கின்றன. இதன் முக்கியத்துவத்தைப் பொது மக்கள் உணர்ந்துகொண்டு பணம் வழங்க வேண்டும்.

பாரிசவாத நோய்க்கு உள்ளானவர்களுக்குச் சிகிச்சை அளித்த பின்னர் அவர்களை அடுத்த கட்டத்துக்குக் கொண்டுவருவதற்கு உடற்பயிற்சி செய்வது, சிறு சிறு வேலைகள் செய்விப்பது உள்ளிட்டவை மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றுக்கு என வடக்கில் யாழ். போதனா வைத்தியசாலையிலோ வேறு வைத்தியசாலைகளிலோ இடம் இல்லை.

இத்தகைய நோயாளர்களுக்கு என தனியான விடுதி வேண்டும். ஏனெனில் அவர்களைச் சிகிச்சையின் பின்னர் உடனடியாக வீட்டுக்கு அனுப்ப முடியாது. அவர்களை தங்கியிருக்க வைத்துக் கண்காணிக்க வேண்டும். அதற்கான இடவசதி தேவை. தற்போது சாவகச்சேரியில் இடம் கிடைத்துள்ளது. அங்கு கட்டடம் அமைத்து நோயாளர்களைப் பராமரிக்க அனைவரும் பணவசதி செய்ய வேண்டும்.– என்றார். (ற-4)



யாழ். மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் மழை காரணமாக முஸ்லிம் குடியிருப்புப் பகுதி மக்கள் இடம்பெயர வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கிராம சேவகர் பிரிவு 87 பகுதியில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது. .இதுகுறித்து அங்குள்ள மக்கள் தெரிவிக்கையில், பெய்துவரும் மழை காரணமாக, பல இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளோம். மழையைத் தொடர்ந்து நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனால் டெங்கு நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் சுகாதாரச் சீர்கேடு, பாம்புகளின் [illegible] பவிக்[illegible] வரவில்லை. எவரும் வந்து இதுவரை பார்க்கவும் இல்லை என்றனர். (ற-10)

# தாபரிப்புப் பணம் செலுத்தாத நபர் விளக்கமறியலில்

சாவகச்சேரி, ஒக்.30

தாபரிப்புப் பணம் செலுத்தாத நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 29 ஆம் திகதி உத்தரவிடப்பட்டது. தாபரிப்புப் பணம் செலுத்துமாறு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டு மாதாந்தம் உரிய தொகை செலுத்தாமையால் நிலுவைத் தொகை 85 ஆயிரமாக உயர்ந்தது. இது தொடர்பாக நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்துக் குறித்த நபரை நவம்பர் ஐந்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கைதிகள் விடயத்தில் அரசு பாரபட்சம் காட்டுகிறது

## விக்கிரமபாகு கருணாரத்ன குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.30
இலங்கையில் 1971ஆம், 89ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற கலவரங்களில் ஈடுபட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. எனினும் தற்போது தமிழ் அரசியல் கைதிகளுக்கு மாத்திரம் பாரபட்சம் காட்டப்பட்டு வருகின்றது என்று நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

1971ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலவரத்தில் தீவைத்தனர். படுகொலைகள் இடம்பெற்றன. அதேபோன்று 1989ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலவரத்தில் கொலைகள் இடம்பெற்றதோடு பொதுச் சொத்துக்களும் அழிக்கப்பட்டன. இக்கால கட்டத்திலேதான் நானும் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்கானேன். இந்தக் கலவரங்களின்போது கைது செய்யப்பட்ட பலர் அரசியல் கைதிகளாகக் காணப்பட்டதோடு, அவர்கள் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டனர்.

எனினும் தமிழ் அரசியல் கைதிகள் 215 பேர்வரை சிறைச்சாலைகளில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு கடந்த காலங்களில் பல முறை அழுத்தங்களைப் பிரயோகித்தோம். எனினும் அதனை அரசு நிராகரித்தே வந்தது. தற்போது அரசியல் கைதிகளில் சிலருக்குப் பிணை வழங்கவும், வழக்குத் தாக்கல் செய்யவும் அரசு தீர்மானித்துள்ளது என்று அறிய முடிகிறது. அரசின் இந்த தீர்மானம் குறித்து விளக்கம் என்ன?

பிடல் கஸ்ரோ யார்? அவர் ஒரு கிளர்ச்சியாளர், படுகொலைகளைப் புரிந்தவர், துப்பாக்கிச்சூடுகளை நடத்தியவர். சேகுவேராவும் இவரைப் போன்றவர்தான்.

இன்று கடவுளைப் போல தோளில் சுமந்து போற்றப்படும் மண்டேலா யார்? அவர் ஒரு பயங்கரவாதி. வெள்ளைக்காரர்களை வீதிகள் தோறும் படுகொலை செய்தவர். இறுதியில் அவர் ஒரு சிறந்த அரசியல் செய்தார் என்று நாங்கள் கூறுகின்றோம்.

இந்த நிலையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு மட்டும் ஏன் பாரபட்சம் காட்டுகின்றீர்கள்?. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசுடன் நடத்தப்பட்ட பேச்சில் அமைச்சர் மனோ கணேசன் எடுத்த தீர்மானம் என்ன என்று கேட்க விரும்புகின்றேன்– என்றார். (ற)



# நிலக்கீழ் மாளிகையில் ஒருபோதும் பாதுகாப்புக்கூட்டம் நடக்கவில்லை

## அடித்துக் கூறுகின்றார் பொன்சேகா

கொழும்பு, ஒக்.30
கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையின் நிலக்கீழ் மாளிகையில் மகிந்த கூறியதைப் போன்று ஒருபோதும் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படவில்லை என்று தெரிவித்துள்ளார் முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரனகொடவுடன் இணைந்தே மகிந்த ராஜபக்ச குறித்த நிலக்கீழ் மாளிகையை நிர்மாணித்தார் என்றும், தான் அந்தப் பகுதியை எட்டிப் பார்ப்பதைக் கூட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விரும்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் நடைபெற்ற காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதலிலிருந்து பாதுகாப்பு பெற அமைத்த பதுங்குகுழியே குறித்த மாளிகை என்றும், போர்க் காலத்தில் பாதுகாப்பு தொடர்பான கூட்டங்கள் குறித்த பதுங்குகுழியிலேயே நடத்தப்பட்டன என்றும் அண்மையில் மகிந்த ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையிலேயே போர் நடைபெற்ற காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா அதனை முற்றாக மறுத்துள்ளார்.

இதேவேளை, குறித்த மாளிகையை மகிந்தவின் புதல்வர் நாமல் தமது நண்பர்களுடன் பயன்படுத்தி வந்தார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

# லஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணையில் அதிருப்தி

## பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.30
லஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணை நடவடிக்கைகள் தொடர்பில் திருப்தியடைய முடியவில்லை என சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு தான் ஒப்படைத்த முறைப்பாடுகள் தொடர்பில் இதுவரையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அரசில் செயற்படுகின்ற அமைச்சர்கள், உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள், உறுப்பினர்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகள் தன் மூலம் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஒப்படைக்கப்பட்டன என்று பிரதி அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

இதற்கிடையில் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் இன்று லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுத் தலைவருக்கு எதிராகவே முறைப்பாடு செய்யவுள்ளது என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (ற)

# விமல் விடயத்தில் பிரதமர் தலையிட்டமை சரியல்ல

## சாடுகின்றார் அசாத் சாலி



கொழும்பு, ஒக்.30
தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் பிரச்சினையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலையிட்டதை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரான மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி.

போலிக்கடவுச்சீட்டைதன்வசம்வைத்திருந்தமை சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட சம்பவத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலையிட்டமை தவறானது எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்கும் வரை நாம் அனைவரும் அதனை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

தற்போதைய அரசு 6 மாதங்களுக்காக சமர்ப்பித்த இடைக்கால வரவு –செலவுத் திட்டத்தில் பொருள்களின் விலைகளை குறைத்த போதிலும் வரவு செலவுத் திட்டம் இன்றி பொருள்களின் விலைகள் அதிகரித்து வருவதைத் தற்போது காணமுடிகிறது.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி வாழ்க்கை செலவை குறைப்பார் என்றே நிதிமைச்சரிடம் எதிர்பார்க்கின்றோம்.

முக்கிய பிரமுகர் ஒருவரின் புதல்வரது வெளிநாட்டு வங்கிக் கணக்கில் பல மில்லியன் டொலர் பணம் இருக்கின்றது என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. எனினும் அரசு இந்த நபர் யார் என்பதை இதுவரை வெளிப்படுத்தவில்லை.

தற்போதைய அரசு திருடர்களைப் பாதுகாக்க முயற்சித்து வருகிறதா என்ற சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்தச் சந்தேகத்தைத் தவிர்க்க முடியாதுள்ளது – என்றார். (ற)

# நாட்டின் பொருளாதாரம் சிக்கலாக மாறியுள்ளது

## பந்துல குணவர்த்தன எம்.பி. கூறுகின்றார்.

கொழும்பு, ஒக்.30
நாட்டின் பொருளாதாரம் தற்போது சிக்கல் நிறைந்த ஒன்றாக மாறியுள்ளதுடன் முதலீட்டாளர்கள் நாட்டைப் புறக்கணித்துவிட்டுச் செல்கின்றனர். தொழில் இடங்கள் வெறும் இடங்களாக மாறியுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்



இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் 131 ரூபாவாக இருந்த அமெரிக்க டொலரின் பெறுமதி தற்போது 142 ரூபாவாக அதிகரித்துள்ளது. நாட்டின் நிதிக்கையிருப்பைப் பாதுகாத்துக் கொள்ள இந்தியாவிடம் இருந்தும் பில்லியன் கணக்கில் பணம் பெறப்பட்டுள்ளது. சீனா இலங்கையில் செய்த முதலீடுகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் நிலைமை உருவாகியுள்ளது.

உலக சந்தையில் எரிபொருள் விலைகள் குறைந்துள்ளதன் சாதகத்தை தேயிலை மற்றும் இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்காத காரணத்தால் ஏற்றுமதிப் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்துள்ளது.– என்றார். (ற)

# தமிழருக்கு வேண்டியதை மட்டுமே அரசு செய்கிறது

## சாடுகின்றார் விமல் எம்.பி.



கொழும்பு, ஒக்.30
குற்றப்புலனாய்வுப் பிரிவு, நிதி மோசடி விசாரணைப் பிரிவு மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவைத் தவிர அரசின் எந்த நிறுவனங்களிலும் தற்போது எவ்வித பணிகளும் நடப்பதில்லை எனச் சாடியுள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.

எதிர்க்கட்சிகளின் கூட்டணி கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடு ஒன்றில் குறைந்து காணப்பட வேண்டிய டொலரின் பெறுமதி அதிகரித்து வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் புலம்பெயர் தமிழர்களுக்கு தேவையானவற்றை மாத்திரமே அரசு தற்போது செய்து வருகிறது. அன்னப் பறவைக்கு ஆதரவு வழங்கியவர்கள் நாடாளுமன்றத்தின் மீது பறந்த [illegible] போது அரசு அதனைத் தடுத்து விடுகிறது.

வெளிநாடு புறப்பட்டுச் சென்றபோது, புலனாய்வு பிரிவினர் என்னை விமான நிலையத்தில் தடுத்து வைத்தனர். அதற்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படும்.

வெள்ளிக்கிழமை நான் இந்தச் சம்பவத்தை எதிர்நோக்கியிருந்தேன். அன்றைய தினம் என்னை விளக்கமறியலில் வைத்திருந்தால், திங்கட்கிழமை வரை பிணை பெற முடியாது. கௌரவ நீதிமன்றத்திடம் நியாயம் கிடைத்தது – என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உறவினர்கள், பாசத்துடன் நடந்து கொள்வர். பிள்ளைகளால் பெருமை உண்டு. தொழில், வியாபாரத்தில், உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். தாராள பண வரவு கிடைக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**இடபம்:** பணிகளைத் திட்டமிட்டு செயற்படுத்துவதால் மட்டுமே எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். தொழில், வியாபார நிறுவனங்களில், பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றவும். சேமிப்புப் பணம் முக்கிய செலவுகளுக்குப் பயன்படும்.

**மிதுனம்:** இஷ்ட தெய்வத்தின் கருணையால் சில நன்மைகள் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், சுமாரான வளர்ச்சி நிலை இருக்கும். பணவரவை, சிக்கனமாகச் செலவு செய்வது நல்லது. உடல்நலத்தில், சிறு தொந்தரவு வந்து நீங்கும்.

**கடகம்:** எதிர்பாராத புதிய வாய்ப்புத் தேடி வரும். தாமதமான பணி ஒன்று எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி விற்பனை முன்னேற்றம் பெறும். அதிக பண வரவால் மகிழ்ச்சி கொள்வீர்கள்.

**சிங்கம்:** திட்டமிட்ட பணியை, எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். பணம் கொடுக்கல், வாங்கல் சீரா கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** மறைமுகமாக இடையூறு செய்பவரை அடையாளம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், மாறுபட்ட சூழ்நிலை உருவாகி, மனதைச் சிரமப்படுத்தலாம். குறைந்த அளவில் பணவரவு இருக்கும். வாகனத்தை இயக்கும் போது, மித வேகமாகச் செலுத்தவும்.

**துலாம்:** உங்களின் செயல், தவறாக விமர்சிக்கப்படலாம். தொழில், வியாபாரம், அதிக உழைப்பால் வளரும். அளவான பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணத்தில் மாறுதல் செய்வீர்கள்.


**விருச்சிகம்:** குடும்ப உறுப்பினர்கள் பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில், இருந்த போட்டி மற்றும் இடையூறு விலகும். கொடுக்கல், வாங்கலில், நல்ல முன்னேற்றம் உண்டு. செலவு செய்து மகிழ்வீர்கள்.

**தனுசு:** கடந்த காலத்தில் இடையூறாக செயற்பட்டவர் விலகிப்போவர். தொழிலில், அபரிமிதமான முன்னேற்றம் ஏற்படும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்க அனுகூலம் வளரும்.

**மகரம்:** ஆடம்பரத்தைத் தவிர்ப்பதால், பணம் மிச்சமாகும். தொழில், வியாபார நடைமுறை சீர்பெற, தகுந்த கண்காணிப்பு அவசியம். பணவரவை விடச் செலவு அதிகரிக்கும். உடல்நலத்துக்குச் சிறு அளவில் மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**கும்பம்:** அறிமுகம் இல்லாதவரிடம் சொந்த விடயம் குறித்துப் பேசக்கூடாது. தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறைவேற, தாமதமாகலாம். நிர்ப்பந்தத்தின் பேரில், பொருள் எதுவும் வாங்க வேண்டாம். தெய்வ வழிபாடு, மனம் நிம்மதி பெற உதவும்.

**மீனம்:** முன்னர் செய்த நல்ல செயலுக்குரிய பயன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு எளிதாக நிறைவேறும். மேலதிக வருமானம் கிடைக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.




## பேஸ் புக்கில் பிடித்தவை...






## வைனைக் குடித்து திண்டாடிய பூனை

ஜேர்மனி நாட்டின் வர்செலின் நகரைச் சேர்ந்த பூனையொன்று நடைப்பயிற்சியின்போது வழிதவறிப் பக்கத்து வீட்டுக்காரரின் நிலவறைக்குள் ஏழு வாரங்கள் சிக்கித் தவித்தது. வெளியே சென்ற பூனை வீடு திரும்பாததால் வருத்தமடைந்த அதன் உரிமையாளர் முழுவீச்சில் அதைத் தேடத் தொடங்கினார். அலைந்துதிரிந்து தேடியும் செல்லப்பூனை அல்ஜோர் கண் ணுக்குத் தென்படாததால், அதன் புகைப்படத்தோடு நூற்றைம்பது போஸ்டர்களை அச்சிட்டு வீட்டின் அருகிலுள்ள பகுதிகளில் ஒட்டிவைத்தார். இந்த நிலையில், உண்ண உணவின்றி நிலவறைக்குள் மாட்டிக்கொண்டு தவித்த அல்ஜோர் அங்கு வைக்கப்பட்டிருந்த மூன்று போத்தல்களில் இருந்த வைனைக் குடித்துள்ளது.

வைனைக் குடித்ததில் உயிருக்கு ஆபத்தான நிலையில் சில தினங்களுக்கு முன் அல்ஜோர்வைக் கண்டுபிடித்தார் அதன் உரிமையாளர் கிளவுடியா. உடனடியாக, அல்ஜோர்வைக் கால்நடை மருத்துவரிடம் கொண்டு சென்று பார்த்ததில், வைனை அதிகமாகப் பருகியதால், பூனை இவ்வாறு பாதிப்புக்குள்ளானதாகத் தெரிவித்தார். மூன்று நாள்கள் படுக்கையிலேயே தவித்திருந்த அல்ஜோர் தற்போது இயல்பு நிலைக்கு வந்துள்ளது எனத் தெரியவந்துள்ளது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதான், இது அல்ஜோர்வுக்கும் பொருந்தும்.

## 'இஞ்சி இடுப்பழகி' இரகசியம்

ஆர்யா- அனுஷ்கா நடிப்பில் 'இஞ்சி இடுப்பழகி' படம் எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி திரைக்கு வரவிருக்கின்றது. இந்தப் படத்தின் முன்னோட்டம் அண்மையில் வெளிவந்த அனைவரையும் கவர்ந்தது. இந்த நிலையில் இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் பிரபல திரையரங்கு ஒன்றில் நடந்தது. அதில் பல திரை நட்சத்திரங்கள் கலந்து கொண்டனர். மேலும், இந்தப் படத்தில் ஒரு பிரபல நடிகர் கௌரவ வேடத்தில் நடிக்கிறார் எனக் கூறப்பட்ட நிலையில், அவர் யார் என்று தெரிய வில்லை, அண்மையில் வந்த தகவலின் படி ஜீவா தான் அந்த நடிகர் எனத் தெரியவந்துள்ளது.






கண் அடித்துப்
பார்த்தேன்
அவள்
மயங்கவில்லை

கட்டையால்
அடித்துப்
பார்த்தேன்
உடனே மயங்கி
விட்டாள்...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவுசெய்தல்
# வட மாகாண சபை

வட மாகாண சபைக்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் மாவட்டங்களுக்கு 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு **உள்ளூர் வழங்குநர்களாக** பதிவுசெய்ய விரும்பும் **யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள தரம் வாய்ந்த வழங்குநர்களிடமிருந்தும் உற்பத்தியாளர்களிடமிருந்தும்** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கைக்கமைவாக தேசிய ரீதியிலான பெறுகைகளின் போது இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் வானவில் பக்கங்களில் (Rainbow Pages) பெயர் குறிப்பிடப்படும் வழங்குநர்களிடம் இருந்தும் விலை மனுக்கள் கோரப்படும்.

1. யாழ்ப்பாணம் 2. வவுனியா 3.மன்னார் 4. கிளிநொச்சி 5. முல்லைத்தீவு

தொகுதி இல . "G"

| உப தொகுதி இல. | பொருள்கள் விவரம் |
|---|---|
| G-01 | அலுவலக தளபாடங்கள் |
| G-02 | அலுவலக உபகரணங்கள் |
| G-03 | காகிதாதிகள் |
| G-04 | புத்தகங்களும்,பருவ வெளியீடுகளும் |
| G-05 | கட்டடப் பொருள்களும் கட்டடப் பிரிவிடுதலும் (Partioning அலங்காரமும் |
| G-06 | மின் உதிரிகள், பொருத்திகள், மின் உபகரணங்கள் மற்றும் தொடர்பு சாதனங்கள் |
| G-07 | அச்சிடும் பொருள்கள் |
| G-08 | கணினிகளும் உதிரிகளும் |
| G-09 | சமூக நலன் பொருள்கள் |
| G-10 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| G-11 | பொது உபகரணங்களும் வீட்டுப் பாவனைப் பொருள்களும் |
| G-12 | கல்விசார் உபகரணங்கள் |
| G-13 | விளையாட்டு உபகரணங்கள் |
| G-14 | இசைக் கருவிகள் |
| G-15 | மருத்துவ உபகரணங்களும் மருந்து வகைகளும் |
| G-16 | ஆயுர்வேத/ சுதேச மருந்துகள் |
| G-17 | ஆயுர்வேத மருந்துச் சரக்குகளும் பலசரக்குப்பொருள்களும் |
| G-18 | வைத்தியசாலைகளுக்கு உணவு வழங்கல் (உலர் உணவு மட்டும்) |
| G-19 | சமைத்த உணவும் குளிர்பானமும் |
| G-20 | விவசாய எந்திரங்கள்,எந்திர உபகரணங்களும் அவை தொடர்பான கருவிகளும் |
| G-21 | விவசாய பொருள்கள்,உர வகைகள் மற்றும் விவசாய இரசாயனப் பொருள்கள் |
| G-22 | விவசாய விதைகள், நடுகைப் பொருள்கள் |
| G-23 | கால்நடைகளின் உணவுகள் மற்றும் ஏனைய பொருள்கள் |
| G-24 | கால்நடைகளுக்கான மருந்துகள் |
| G-25 | மீன்பிடி தொடர்பான பொருள்கள் |
| G-26 | கைத்தொழில் மூலப்பொருள்கள் |

தொகுதி இல . "S"

| உப தொகுதி இல. | சேவைகள் விவரம் |
|---|---|
| S-01 | கடிதத்தலைப்பு புத்தகங்கள், வெளியீடுகள் அச்சிடுதல், சுவரொட்டிகள், பதாகைகள் அச்சிடுதல், பெயர் பலகை, குறியீட்டு பலகை எழுத்து பொறித்தல்,புத்தகம் கட்டுதல்,அச்சு அடிச் சட்டம் (Block) தயாரித்தல், இறப்பர் முத்திரை, திகதி முத்திரை தயாரித்தல். |
| S-02 | அலுவலக தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| S-03 | அலுவலக போட்டோ பிரதி இயந்திரங்கள், டைப்ரைட்டர்கள், ரோனியோ மெசின்கள் மற்றும் மின் உபகரணங்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-04 | கணினிகள்,பிறின்டர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-05 | குளிரூட்டிகள்,மின் உபகரணங்கள் மற்றும் மின்வயர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-06 | பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் |
| S-07 | சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல்,கட்டிட தளங்கள்,கதவுகள், ஜன்னல்கள், திரைச்சீலைகள் சுத்திகரிப்புச் செய்தல் |
| S-08 | **வாகனம் பழுது பார்த்தல்:** - இயந்திர,மின் இணைப்புகளை (Circuit) பழுது பார்த்தல்,தகடுகள் (Tinkering) பழுது பார்த்தலும், பெயின்ட் அடித்தலும்,டீசல் வாகனங்கள் பழுது பார்த்தல், பெற்றோல் வாகனங்கள் பழுது பார்த்தல்,குளிரூட்டிகள் பெருத்துதலும் பழுதுபார்த்தலும் |
| S-09 | **வாகனம் பராமரித்தல்:**கால அட்டவணைப்பிரகாரம் சேவிஸ் செய்தல், சில்லு ஒழுங்கு (alignment) பரிசீலித்தல், சில்லு சமன் செய்தல்,டயர் மாற்றம் செய்தல் மற்றும் வாகன உட்புற சேவிஸ் செய்தலும் மினுக்கம் செய்தலும். |
| S-10 | விவசாய உபகரணங்கள் தயாரித்தல்/வடிவமைத்தல் மற்றும் விவசாய இயந்திரங்கள் உபகரணங்கள் திருத்தம் |
| S-11 | வாடகைக்கு அல்லது குத்தகைக்கு [illegible] வழங்கல் |

**நிபந்தனைகள்**

01. வழங்குநர்களாக பதிவு செய்தல் 2016 ஆம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியானதாகும்

02. உள்ளூர் பெறுகைகள் பதிவுசெய்த வழங்குநர்கள் பட்டியலிலிருந்தும், தேசிய ரீதியிலான பெறுகைகளின் போது இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் வானவில் பக்கங்களில் (Rainbow Pages) பெயர் குறிப்பிடப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும் பொதுவாக விலை மனுக்கள் கோரப்படும். எனினும் பொருள் கொள்பவருக்கு வேறு மூலங்களிலிருந்தும் விலை மனு கோருவதற்கான உரிமையும் உண்டு.

03. விண்ணப்பங்களை பதிவு செய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விவரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. பதிவுக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை பிரதம செயலாளர் கொண்டுள்ளார்.

05. மனுக்கள் கோரும்போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருள்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.

06. வியாபார பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பொருள்கள், சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.

07. குறிப்பிடப்படும் பொருள்கள் சேவைகளுக்கு வழங்குநர்களாக பதிவு செய்பவர்களால் சமர்ப்பிக்கப்படும் விவரங்கள் ஆவணங்களின் உண்மைத்தன்மையானது பிரதம செயலாளரால் நியமிக்கப்படும் குழுவினரால் நேரடியாக சென்று பார்வையிடுவதன் மூலமோ நேர்காணலின் மூலமோ பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும். வழங்குநர் குறிப்பிட்ட பொருள்கள் சேவைகளுக்கு வழங்குநர்களாக பதிவு செய்வதற்கு தாங்கள் தகுதியற்றவர் என காணப்படுமிடத்து தங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

08. பொருள்கள் சேவைகள் விநியோகிப்பதற்கு விருப்பு தெரிவிக்கும் மாவட்டம்/மாவட்டங்கள் வழங்குநர்களால் குறிப்பிடப்படல் வேண்டும்.

09. பழுது பார்த்தலுக்கோ, வாகன பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன அடிப்படைத் தேவையான வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். (விண்ணப்பத்துடன் அவர்கள் கொண்டுள்ள உபகரணங்களின் விவரங்களும் பயிற்சி பெற்ற வேலையாள்களின் விவரங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்). தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினை பரிசீலனை செய்வதற்கான முழு அதிகாரம் உண்டு.

10. வழங்குநர்களுக்கு பெறுகைகளுக்கான காசு முற்பணம்,வழங்கப்படமாட்டாது

11. பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் தரப்பட்ட மாதிரியில் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியுடனும் வரிப் பதிவுச் சான்றிதழின் பிரதியுடனும் மீளளிக்கப்படாத வைப்புப் பணத்துடனும் 2015 டிசெம்பர் முதலாம் திகதி அல்லது அதற்கு முன்பதாக "பிரதிப் பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் - நிதி அலுவலகம், வட மாகாணசபை, 131,கச்சேரி நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலக வேலை நாள்களில் (காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை) நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2016 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவுசெய்தல்" என குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

12. முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பதிவு செய்யப்படவேண்டிய ஒவ்வொரு உபபொருள் தொகுதிக்கும், சேவைக்கும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 150/= இக்கான காசுக்கட்டளை "பிரதிப் பிரதம செயலாளர் - நிதி, வட மாகாண சபை."என்ற பெயரில் யாழ்ப்பாணம் தபால் கந்தோரில் மாற்றக்கூடியவாறு பெறப்பட்டு இணைத்து அனுப்புதல் வேண்டும். அல்லது இல.131, கச்சேரி நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்குகின்ற பிரதிப் பிரதம செயலாளர்-நிதி அலுவலகத்தில் அலுவலக வேலை நாள்களில் (முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல்3.00மணிவரை) நேரடியாகப் பணத்தினைச் செலுத்திப் பெறுகின்ற பற்றுச் சீட்டினை இணைத்து அனுப்புதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட உப பொருள்கள் அல்லது உப சேவைகளின் தொகுதிக்கு பதிவு கோருவதாயின், ஒவ்வொரு உப பொருள் தொகுதிக்கும் அல்லது சேவைகளுக்கும் தனித்தனி விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத வைப்பு பணம் ரூபா 150/உம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

13. 2015 டிசெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

மேலதிக விளக்கங்களுக்கு "பிரதிப் பிரதம செயலாளர் - நிதி, வட மாகாணம்" அவர்களுடன் தொலைபேசி இல. 021 222 0854 மூலம் தொடர்புகொள்ளமுடியும்.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**
**2016 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவுசெய்தல்**
**வட மாகாண சபை**

01. வியாபார நிறுவனத்தின் பெயர் :
02. வியாபார நிறுவனத்தின் முகவரி :
03. தொலைபேசி இலக்கம் :
04. தொலைநகரி (Fax) இலக்கம் :
05. வியாபார பதிவு இலக்கம் :
06. வியாபாரத்தின் தன்மை :
07. பதிவு செய்யப்பட வேண்டிய பொருள்கள் /சேவைகளின் தொகுதி:

| தொகுதி இல | பொருள்கள்/சேவைகள் விவரம் |
|---|---|
| | |

08. கணக்கினை பேணும் வங்கிகளின் பெயர்கள் :
09. கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி :
10. வற் (VAT) வரி பதிவு இலக்கம் (இருப்பின்) :
11. மின்னஞ்சல் முகவரி
12. வழங்கல் செய்யக்கூடிய மாவட்டங்களின் பெயர்கள் :
(விண்ணப்பதாரி வழங்கல் செய்யக்கூடிய மாவட்டம்/ மாவட்டங்களினை " ✓" அடையாளத்தினை இடுவதன் மூலம் தெரிவுசெய்தல் வேண்டும்)


| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | |
| வவுனியா | |
| மன்னார் | |
| கிளிநொச்சி | |
| முல்லைத்தீவு | |

என்னால்/ எங்களால் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் யாவும் சரியானவை எனவும் வட மாகாணசபை பிரதம செயலாளரினால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருள்கள்/ சேவைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கிறோம். பதிவுக் கட்டணம் ரூபா. 150/= இற்கு ........ம் திகதிய.................... இலக்க காசுக்கட்டளை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

.................................... .................................... ....................................
விண்ணப்பதாரியின் ஒப்பம் பெயர் திகதி

அ.பத்திநாதன்
பிரதம செயலாளர், வட மாகாண சபை,
63, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எழுவை தீவு - முத்தன்காடு
# ஈழத்து திருச்செந்தூர் திருவருள்மிகு முருகமூர்த்தி ஆலயம்
# பஞ்சகுண்ட பக்ஷபுனராவர்த்தன அஷ்டபந்தன
# பிரதிஷ்டாமஹாகும்பாபிஷேகம் பெருஞ்சாந்தி விஞ்ஞாபனம் – 2015

**எண்ணெய்க் காப்பு**
**01.11.2015**
**ஞாயிற்றுக்கிழமை**

திருச்சிற்றம்பலம்

நாளென் செயும் வினை தான் என் செயு மெனை நாடிவந்த
கோளென் செயும் கொடுங்கூற்றென் செயும் கும ரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே

**மஹா கும்பாபிஷேகம்**
**02.11.2015**
**திங்கட்கிழமை**

குகநேயச் செல்வர்களே!

இலங்கா துவீபத்தின் வடபால் யாழ்ப்பாணமாநகரில் தென்மேற்குப் பகுதியில் சப்ததீவுகளில் தனிச்சிறப்பு மிக்க சைவமும் தமிழும் தளைத்தோங்கும் எழுவைதீவு முத்தன்காடு ஈழத்துத் திருச்செந்தூர் என்னும் திவ்விய திருத்தலத்தில் தன்னை நாடிவரும் அடியார்களுக்கு திருவருள் சுரக்க வேண்டும் என்ற பெருநோக்கோடு மந்திர மயூராசனத்தில் வீற்றிருந்து செங்கோலோச்சும் அகிலலோகநாயகர், திரிலோக சுந்தரர் வள்ளிதேவசேனா சமேத சுப்பிரமணியபெருமானுக்கும் பரிவாரதேவர்கட்கும் மங்களகரமான மனமத வருடம் ஐப்பசி மாதம் 16ஆம் நாள் (02.11.2015) திங்கட்கிழமை புனர்பூச நட்சத்திரமும் ஸப்தமித்தியும் அமிர்தயோகமும் தனுலக்கினமும் கூடிய பகல் 10.21 மணிமுதல் 11.18 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா நடைபெற திருவருள் கூடியுள்ளது. அடியவர்கள் கும்பாபிஷேகத்தையும் கும்பாபிஷேகத்துக்கு முன் நடைபெறும் கிரியைகளையும் தரிசித்து திருவருள் பெறுவீர்களாக.

## கிரியாகால நிகழ்வுகள்

**ஐப்பசி 14- ஆம் நாள் ( 31.10.2015) சனிக்கிழமை**
கோதூளிகா லக்னத்தில் காலை 6.00 மணிக்கு கர்மாரம்பம் விநாயகர் வழிபாடு, பிராமண அனுக்ஞை, தேவ அனுக்ஞை, திரவிய சுத்தி, திரவிய விபாகம், தனபூசை, கணபதிஹோமம், நவக்கிரகஹோமம், யந்திரபூசை, ரக்சோக்ன ஹோமம், திசாஹோமம், மூர்த்தி ஹோமம், கங்கா பூஜை, சூர்யாக்னி, சங்கிர கணம்
மாலை 03.00 மணிக்கு விநாயகர் வழிபாடு,கிராமசாந்தி, பிரவேச பலி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை, கலாகர்சணம், ஷண ஹோமம், கும்பயாகசாலாபிரவேசம், யாகபூஜை, அக்னி விபஜனம், ஹோமம், தீபாராதனை, வேததோத்திர திருமுறை பாராயணம், ஸ்தூபிஸ் தாபனம், தீவஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்ட பந்தனம்.

**ஐப்பசி 15- ஆம் நாள் ( 01.11.2015) ஞாயிற்றுக்கிழமை**
காலை 8.30 விநாயகர் வழிபாடு, விஷேட சாந்தி, யாகபூஜை, விஷேட திரவியஹோமம், தீபாராதனை, வேததோத்திர திருமுறை பாராயணம், மாலை 5.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, விம்பசுத்தி, நியாயசாதிகள், யாகபூஜை, ஹோமம், ஸ்பர்சாகுதி, தீபாராதனை, வேததோத்திர திருமுறை பாராயணம்.

**ஐப்பசி 16- ஆம் நாள் ( 02.11.2015) திங்கட்கிழமை**
காலை 07.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, யாகபூஜை, ஹோமம், மஹா பூர்ணாகுதி, தீபாராதனை,வேத தோத்திர திருமுறை பாராயணம், கும்ப வீதிப்பிரதட்சணம், ஸ்தூபி, அபிஷேகம், மஹா கும்பாபிஷேகம், மஹா ஹவர் நிவேதனம் தசதரிசனம், எஜமான் அபிஷேகம் ஆசார்ய பூஜனம், ஆசீர்வாதம், மஹா அபிஷேகம், விஷேட பூஜை, திருவருள் பிரசாதம்.

## குருமார் விவரம்

**சர்வபோதகம்:**
சிரோன்மணி, பிரதிஸ்டா திலகம்
**விஸ்ணுஸ்ரீ.க.ச. சோமஸ்கந்தகுருக்கள்**
(பொன்னாலை வரதராஜப் பெருமாள் திருக்கோவில்)

**பிரதிஷ்டா பிரதமகுரு:**
வேதவித்தயா பூசணம், சிவாகம ஞான திவாகரன்
**ப்ரம்மஸ்ரீ சுந்தர. பாலமுரளீதரக்குருக்கள்**
(மீசாலை இலந்தைகூடல், வீரகத்திப்பிள்ளையார் திருக்கோவில்)

**சர்வ சாதகம்:**
ஸ்ரீ வாகீசவாரிதி
**ப்ரம்மஸ்ரீ கணேசசபாபதிக் குருக்கள்** (சுன்னாகம்)
**ப்ரம்மஸ்ரீ முரளீதர. வித்தியானந்தக் குருக்கள்**
(மீசாலை இலந்தைக்கூடல், வீரகத்திப் பிள்ளையார் திருக்கோவில்)

**யாகசம்ரட்சகர்கள்:**
**ப்ரம்மஸ்ரீ இ.தினேஸ்வரசர்மா** (நுணாவில்)
**ப்ரம்ம ஸ்ரீ ந.யசோதரசர்மா** (யாழ்ப்பாணம்)
ப்ரம்ம ஸ்ரீ கு.கஜேந்திரசர்மா (மீசாலை)
**ப்ரம்ம ஸ்ரீ சி.ஸ்ரீரங்கசர்மா** (யாழ்ப்பாணம்)
**ப்ரம்ம ஸ்ரீ மு.சசாநந்தசர்மா** (மீசாலை)

**ஆலய பூசகர்:**
**சிவத்திரு க.கைலைநாதன் ஐயா**

**ஒலி, ஒளி அமைப்பு:**
**மனோன்மணி கந்தஞானி (தம்பாட்டி)**

**கும்பாபிஷேகத்தை சிறப்பிக்கும் குருமார்கள்:**
**ப்ரம்மஸ்ரீ ச.நாராயணக் குருக்கள்** (வட்டுக்கோட்டை)
**ப்ரம்ம ஸ்ரீ க.சிவதாசக்குருக்கள்** (கொக்குவில்)
**ப்ரம்ம ஸ்ரீ பா.சபாரத்தினக் குருக்கள்** (காரைநகர்)
**ப்ரம்ம ஸ்ரீ சி.சிவசுப்பிரமணியக் குருக்கள்**
(கொக்குவில்)

**மங்கள வாத்தியம்**
**சுப்பிரமணியம் விபூசணன், வி.பிச்சந்துரு, வி.பி.சங்கர் குழுவினர்** (சங்கத்தானை)

**வர்ணவேலை**
**கலைவாரிதி நிஷாந்தன்**
(அராலி தெற்கு)

**கோப்பிசவேலை**
**சின்னத்துரை தர்மகுலசிங்கம்**
(அனலைதீவு)

**யாக அலங்காரம், பூமாலை**
**திரு.க.குகதாசன் குழுவினர்**
(யாழப்பாணம்)

**சிற்பாசாரி:**
**ப.கமலநாதன்**
(காரைநகர்)

வாரி முருகன் திருக்கோயில் வாயிலில் வந்தணுகிப்
பாரி ரவன் சந்தி தானத்தின் பாங்கினைப் பார்த்துருகித்
தேர்வீ திருவிழி நீர் சொரிவீ துளத்தேங்க வன்பு
கூர்வீ ரெழுவையுள்ளாரே திருவருள் கூடிடுமே
- எழுவை முருகரலங்காரம்-

வழுவில் அடியார்கள் வாழ்கின்ற வண்மை
எழுவைப் பதிமேவும் எந்தை - தொழுகின்ற
அன்பர்க் கருள் புரியும் ஆறுமுகன் தாள் பணிந்தார்
இன்பமுடன் வாழ்வார் இனிது
- திருமுருக கிருபானந்த வாரியார்-

**ஆலய கட்டட நிர்மாணம்:**
**நிஷாந்தன்**
(அராலி தெற்கு)

சிறப்பு அனுசரணை:
சிகரம்
பணப்பரிமாற்று சேவை
Indosri.com (செய்திகள்)
Heinrich Str-120 8005 Zurich, சுவிசர்லாந்து

வேலுண்டு வினை இல்லை
மயிலுண்டு பயம் இல்லை

ஆலய பரிபாலனசபையினர்.
ஈழத்து திருச்செந்தூர் முத்தன் காடு, எழுவைதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்தின விழா

சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் சிறுவர் தின விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் சி.குமாரலிங்கம் தலைமையில் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய உப தலைவர் வி.கேசவனும் கலந்து கொள்வர். (ஐ-ரி-6)

## கசிப்பு வைத்திருந்தவருக்கு அபராதம்

சாவகச்சேரி,ஒக்.30 கசிப்பு வைத்திருந்த வரணி வாசியொருவருக்கு சாவகச்சேரி நீதி மன்றில் 25 ஆயிரம் ரூபா அபராதம் கடந்த 28 ஆம் திகதி விதிக்கப்பட்டது.கொடிகாமம்பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ஐ-9)

### அழைப்பு

யா/வட்டு இந்துக் கல்லூரி
சித்தன்கேணி
பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்
காலம் - 31.12.2015 சனிக்கிழமை
நேரம் - பி.ப. 3.00 மணி
அனைத்துப் பழைய மாணவர்களும் கலந்து கொள்ளவும்.
(65619)(11,15) அதிபர்.

### வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சைகள்-2016

வட இலங்கைச் சங்கீத சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பப்படிவங்கள் 02.11.2015 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவு திகதி 30.11.2015 ஆகும். விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா (எழுபது) 70/= மட்டும்.
யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள்
வட இலங்கைச் சங்கீத சபை
கே.கே.எஸ் வீதி,
மருதனார்மடம், கன்னாகம்.
தொ.இல- 021 224 2319
எனும் இடத்தல் பெற்றுக் கொள்ளலாம்.

### பெயர் மாற்றம்

இல. 43A, கல்மடுநகர், கண்டாவளை, கிளி நொச்சியில் வசிக்கும் ஐயம்பிள்ளை நடராசா ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து ஐயம்பிள்ளை நடராஜா என மாற்றிக் கொள் வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன்.
(65631)(11.15) ஐ.நடராஜா

### பெயர் மாற்றம்

இல. 43A, கல்மடுநகர், கண்டாவளை, கிளி நொச்சியில் வசிக்கும் நடராஜா ஞானராசா ஆகிய நான் எனது பெயரை இன்றி லிருந்து நடராஜா ஞானராஜா என மாற்றிக் கொள்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன்.
(65631)(11.15) ந.ஞானராஜா

### வேலையாள்கள் தேவை

பருத்தித்துறை, விநாயகமுதலியார் வீதியிலுள்ள லஷ்மி ரெயிலரிங் கடைக்கு இரண்டு வருட அனுபவமுள்ள வேலையாள்கள் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(62184)(11,15) தொடர்பு: 076 845 1820

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2kg இற்கு மேல் வளர்ச்சியடைக்கூடிய No-1 BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 31.10.2015 விநியோகிக்கப்படும்.
ராஜ்வ்
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
T.P: 077 609 0926

### நலிவுற்றோர் நல நிதிக்காக வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும்

We Serve

செயற்றிறன் அரங்க இயக்கத்தின் தயாரிப்பில்

## மாபெரும் நாடக நிகழ்வு - 2015

இடம்: யா/நெல்லியடி மத்திய கல்லூரிக் கலையரங்கம்
காலம்: 2015.11.01 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி

தலைமை
லயன். செ.சேதுராஜா
(தலைவர், வடமராட்சி லயன்ஸ் கழகம்)

பிரதம விருந்தினர்
லயன். Dr.V.தியாகராஜா MJF JP
(First Vice District Governor - 306 B1)

சிறப்பு விருந்தினர்கள்
- சி.நந்தகுமார் (வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)
- சி.சிவஸ்ரீ (பிரதேச செயலர், கரவெட்டி)
- இ.த.ஜெயசீலன் (பிரதேச செயலர், பருத்தித்துறை)
- க.கனகேஸ்வரன் (பிரதேச செயலர், மருதங்கேணி)

குழந்தை ம.சண்முகலிங்கத்தின்
பஞ்சவர்ண நரியார் (சிறுவர் நாடகம்)
தே.தேவானந்தின்
- சிரிப்பு மூடை (சிறுவர் நாடகம்)
- மரணச் சான்றிதழ் (ஓராள் அரங்கு)
- ஏகாந்தம் (வேடமுக நாடகம்)

நுழைவுச் சீட்டுக்கள் கிடைக்குமிடங்கள் : (பருத்தித்துறையில்) ஜெயகணேசா, சுசீலா ஆபரண மாளிகை மற்றும் நுழைவாயில்

நுழைவுச் சீட்டுக்கள் கிடைக்குமிடங்கள் : (நெல்லியடியில்) சிதம்பரப்பிள்ளை பொத்தகசாலை, நெல்லைசில்க்ஸ், ஜெயபாரதி ஸ்ரோர்ஸ், வைஷ்ணவி நகைப்பூங்கா மற்றும் நுழைவாயில்

நுழைவு அன்பளிப்புக் கட்டணம்: ரூ. 100/=, ரூ.500/, =ரூ. 1000/=
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஊடக அனுசரணை: உதயன்
வடமராட்சி லயன்ஸ் கழகம்

வலி. கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - நீர்வேலி (வரையறுக்கப்பட்டது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு, கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும்அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளிவிடப்பட்டதுமான "வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகளின்படி வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் ஆகிய திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகிய நான் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கம் கொண்டதும்,1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கம் கொண்டதுமான கூட்டுறவுத் திருத்தச் சட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்கம் கூட்டுறவுச் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கமைய எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மேற்படி சங்கத்தின் துணைவிதி பிரிவு 23 இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளிற்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

* அதற்கமைய இக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
* கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு ¼ பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.
* தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர் களைத் தெரிவுசெய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இவ் ஒன்பது உறுப்பினர் களுள் ஆகக்குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல்வேண்டும்.
* சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசியவாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
* இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவுமேற்கொள்ளப்படும்.
* தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளரிற்கும், எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

### கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

| தொ.இல. | கிளை.இல. | கிளையின் பெயர் | திகதி | நடைபெறும் இடங்கள் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01 | 01 | அச்செழு | 08.11.2015 | அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் | அ.தயாளன் |
| 02 | 02 | அச்செழு வடக்கு | 08.11.2015 | அச்செழு M.M.T.M பாடசாலை | பொ.கோகுலன் |
| 03 | 03 | நீர்வேலி வடக்கு | 08.11.2015 | நீர்வேலி கிளை இல. 03 | செ.செல்வகுமார் |
| 04 | 04 | நீர்வேலி விக்னேஸ்வரா | 08.11.2015 | R.C தமிழ் கலவன் பாடசாலை, நீர்வேலி வடக்கு. | நா.குமணதாசன் |
| 05 | 05 | நீர்வேலி மத்தி | 08.11.2015 | நீர்வேலி மத்தி சனசமூக நிலையம் | வீ.இரத்தினகாந்தன் |
| 06 | 06 | நீர்வேலி சந்தி | 08.11.2015 | வாழைக்குலை உற்பத்தி விற்பனையாளர் சங்கம் | திருமதி த.மாலினி |
| 07 | 07 | நீர்வேலி இராசவீதி | 08.11.2015 | கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி | வே.பிரதீஸ்குமரன் |
| 08 | 08 | நீர்வேலி கரந்தன் | 08.11.2015 | கரந்தன் சிவசங்கர பண்டிதர் சனசமூக நிலையம் | திருமதி எஸ். எமல்டா |
| 09 | 09 | நீர்வேலி கோவிலடி | 08.11.2015 | ஸ்ரீ முருகன் ஐக்கிய நாணய சங்கம், நீர்வேலி கந்தசுவாமி கோவிலடி | திருமதி பா.கலைச்செல்வி |
| 10 | 10 | நீர்வேலி பூதர்மடம் | 08.11.2015 | ஸ்ரீ முருகன் ஐக்கிய நாணய சங்கம், நீர்வேலி கந்தசுவாமி கோவிலடி | திருமதி ஞா.ஜெயாமேரிகொன்ஸி |
| 11 | 11 | நீர்வேலி ஐங்கரன் | 08.11.2015 | கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி | திருமதி ச.தயாதேவி |
| 12 | 12 | கோப்பாய் சந்தி | 08.11.2015 | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் | ம.கபிலன் |
| 13 | 13 | கோப்பாய் விநாயகர் | 08.11.2015 | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் | இ.விஜயமோகனராஜா |
| 14 | 14 | கோப்பாய் கண்ணகை | 08.11.2015 | றோமன் கத்தோலிக்க பாடசாலை, வேதக்கோவிலடி, கோப்பாய். | க.திசாகரன் |
| 15 | 15 | கோப்பாய் அம்பாள் | 08.11.2015 | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் | செல்வி இ.சுகிர்தா |
| 16 | 16 | கோப்பாய் இராசவீதி | 08.11.2015 | கோப்பாய் காளிகோவிலடி சனசமூக நிலையம் | நா.ஜெயவதனன் |
| 17 | 17 | கோப்பாய் மத்தி | 08.11.2015 | நாவலர் வித்தியாலயம், கோப்பாய் மத்தி | க.பாலகிருஷ்ணன் |
| 18 | 18 | கோப்பாய் மத்தி | 08.11.2015 | றோமன் கத்தோலிக்கப் பாடசாலை வேதக்கோயிலடி, கோப்பாய். | க.சுரேஸ்பாபா |
| 19 | 19 | கோப்பாய் மத்தி | 08.11.2015 | வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலடி சனசமூக நிலையம், கோப்பாய் | கு.சஜீபன் |
| 20 | 20 | கோப்பாய் தெற்கு | 08.11.2015 | கலைவாணி சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு | கு.நிசாந்தன் |
| 21 | 21 | கோப்பாய் தெற்கு | 08.11.2015 | ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு. | ச.பாலகுமார் |
| 22 | 22 | கோப்பாய் தெற்கு | 08.11.2015 | முழுமதி சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு | பா.வாகீசன் |
| 23 | 23 | உரும்பிராய் சந்தி | 08.11.2015 | ஞானவைரவர் சனசமூக நிலையம்,உரும்பிராய் தெற்கு | தே.வேணுகோபாலன் |
| 24 | 24 | உரும்பிராய் தெற்கு | 08.11.2015 | அண்ணா சனசமூக நிலையம் யோகபுரம் | இ.தயாகரன் |
| 25 | 25 | உரும்பிராய் கணேசா | 08.11.2015 | உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் | ச.சசிகரன் |
| 26 | 26 | உரும்பிராய் கிழக்கு | 08.11.2015 | செல்லப்பா சனசமூக நிலையம், உரும்பிராய் கிழக்கு | ச.ரதிகுலன் |
| 27 | 27 | உரு.வேதக்கோவிலடி | 08.11.2015 | றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, வேதக்கோவிலடி, உரும்பிராய் | நா.தவமன்னன் |
| 28 | 28 | உரும்பிராய் கரந்தன் | 08.11.2015 | கலைவாணி சனசமூக நிலையம், உரும்பிராய் கரந்தன் | பா.சிறிகுமார் |
| 29 | 29 | உரும்பிராய் வடக்கு | 08.11.2015 | கணேசா சனசமூக நிலையம், ஊரெழு | தி.வித்தககலாநிதி |
| 30 | 30 | ஊரெழு | 08.11.2015 | ஊரெழு கணேசா வித்தியாலயம் ஊரெழு | இ.புவன்ராஜ் |
| 31 | 31 | ஊரெழு மேற்கு | 08.11.2015 | ஊரெழு கணேசா வித்தியாலயம் ஊரெழு | திருமதி சு.தர்சினி |
| 32 | 32 | ஊரெழு வடக்கு | 08.11.2015 | ஊரெழு கணேசா வித்தியாலயம் ஊரெழு | ப.து.றோஸ் டெனிஸ்ரன் |
| 33 | 33 | இருபாலை சந்தி | 08.11.2015 | கோப்பாய் மகாவித்தியாலயம், இருபாலை,கோண்டாவில் வீதி. | அ.விமல்ராஜ் |
| 34 | 34 | இருபாலை கிழக்கு | 08.11.2015 | பாரதி சனசமூக நிலையம், இருபாலை கிழக்கு. | சு.கமலநாதன் |

ஒப்பம்: திருமதி மதுமதி வசந்தகுமார்,
கூட்டுறவுச் சங்க அபிவிருத்தி ஆணையாளரும்,கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வ-மா)
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,முதியோர் இல்ல வளாகம்,கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணிசைக் கச்சேரியும் பாராட்டு விழாவும்

யாழ்ப்பாணம்,ஒக்.30
பண்ணிசைக் கச்சேரிப் பட்டறையும், முன்னாள் விரிவுரையாளர் இசைமேதை,சங்கீத பூஷணம் திருமதி தர்மபூபதி சிதம்பரநாதனின் பாராட்டுவிழாவும் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இந்து சமயப் பேரவை ஸ்ரீ நடராஜர் மண்டபத்தில் பேரவையின் உபதலைவர் கு.சரவண பவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஐ-ரி6)


## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன் தருமலிங்கம் பாலச்சந்திரன்

திதி: சங்கடஹர சதுர்த்தி (30.10.2015)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே
எங்கள் உயிரின் உயிராய்க் கலந்தவனே
ஆண்டுகள் இருபது சென்றாலும்
துயரங்கள் நீங்கவில்லை
உன் அன்பான பேச்சும் செயலும் என்றும்
உன் நினைவுகளைத் தந்து
கொண்டிருக்கின்றன அரக்கனின் செல்லினால்
கண் சிமிட்டும் நொடிக்குள்
நீ எம்மைவிட்டு சென்று விட்டாயோ!
காலங்கள் கடந்து சென்றாலும் கடைசிவரை
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலா!

அன்னை மடியில்
24.10.1970

ஆண்டவன் மடியில்
11.11.1995

உன் பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, தம்பி,
தங்கை, குடும்பத்தினர்.


# மரண அறிவித்தல்கள்


## இராமு கந்தசாமி



பிறப்பு 1932.04.20 இறப்பு 2015.10.28

துரையப்பா வீதி, புதுத்தோட்டம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட இராமு கந்தசாமி 28.10.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூமணியின் அன்புக் கணவரும், செல்வமனோகரன், செல்வராணி, செல்வமணி, றதிமாலா, வெற்றிவேல், சறோஜா ஆகியோரின் தந்தையும், யோகராசா, சிவசம்பு, சபாநாதன், அருளானந்தராசா, இந்திராணி, பத்மா ஆகியோரின் மாமனாரும், டயானா, சுசீபன், காண்டீபன், பார்த்தீபன், யோகமதி- ஜெயகணேசன், கரிகரன், லதுசியா, அச்சியா, பிர காஸ் ஆகி யோரின் பேரனும், மாதினி, ராகவி, பார்கவி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.10.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தெல்லிப்பழை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

துரையப்பாவீதி,
புதுத்தோட்டம்,
தெல்லிப்பழை.

பேரப் பிள்ளைகள் } திரு.திருமதி ஜெயகணேசன் யோகமதி, காண்டீபன், பார்த்தீபன்
பூட்டப் பிள்ளைகள் } மாதினி, ராகவி, பார்கவி (65624)(11,15)



## திருமதி தனபாக்கியம் இரத்தினசிங்கம்



யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கு நாகபூசணி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொட்டாஞ்சேனை கொழும்பில் வசித்து வந்தவருமான திருமதி தனபாக்கியம் இரத்தினசிங்கம் 27.10.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இரத்தினம்மா திருஞானசுந்தரம் அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சின்னப்பு - இரத்தினசிங்கத்தின் (கிராமத் தலைமை அதிகாரி - விதானையார்) அன்பு மனைவியும் கிரிதரன், நிர்மலன்(இலங்கை வங்கி , தலைமைக் காரியாலயம், கொழும்பு), மைத்ரேயி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் குணநாயகம் (ஜேர்மனி), பத்மாவதி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சிறியதாயும், விமலாதேவி, ரஜிநாயகி(கொழும்பு), ஜெகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்சினி ஐங்கரன் (ஆசிரியை - யா/கோண்டாவில் இராம கிருஷ்ண ம.வி) சுகாசினி தயாளன் (லண்டன்), காயத்திரி சயந்தன் (லண்டன்), Dr.நிசா(யாழ் போதனா வைத்தியசாலை), அபிசன்(யாழ் இந்துக் கல்லூரி), அர்ஜூன் (கொ/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), நிவேதிகா ஒலிவியர் (லண்டன்), அபிராம்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அஷ்வின், ஆகாஷ், ஆரணி, அபிஷயன், ஆரபி, ஆருஷி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோண்டாவில் கிழக்கு, நாகபூசணி அம்மன் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (30.10.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகபூசணி அம்மன் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
கிரிதரன்: 077 935 3065, 021 221 2232
நிர்மலன்: 071 130 2396, 011 233 8663
மைத்ரேயி: 0044 208 335 0616

தகவல்:
குடும்பத்தினர்.

(65611)
(14,15)


# ஐக்கிய நாடுகள் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.30
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூக விஞ்ஞான மன்றம் நடத்தும் ஐக்கிய நாடுகள் தினம் -2015, இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் ஆசிரியர் கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அ[illegible]ர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் இ.ம.சத்தியகுமார், கிளிநொச்சி மாவட்ட யு.என்.எச்.சி.ஆர். சிரேஷ்ட சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி பா. வைதேகி ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் 'அடைக்கும் தாழ்' என்ற நாடகமும்,'உலக அமைதியை நிலை நாட்டுவதில் ஐக்கிய நாடுகள் சபை தவறியுள்ளது? தவற வில்லை?" எனும் தலைப்பில் பட்டிமன்றமும், கவிதை, சிற்றுரை மற்றும் வில்லுப் பாட்டு ஆகிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரி வித்துள்ளனர்.

(ஐ-ரி6)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1946 . 01 . 05



இறப்பு 2014 . 11 . 10

வல்லிபுரம் மகாலிங்கம் J.P (ஆசாரி) (மகான்)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார்,உறவினர்,நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"ஜெயபதி"
சந்திரபுரம் ,மட்டுவில் வடக்கு
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.



## ஓராண்டு நிறைவில் நெஞ்சுருகும் எம் அஞ்சலிகள்



தோற்றம் 01 . 04 . 1939

மறைவு 09 . 11 . 2014

அமரர்
விகடகவி மு.திருநாவுக்கரசு
( ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி)

ஆண்டொன்று கழிந்ததப்பா! நீங்கள்
அமரராய் முத்திநிலை தானடைந்து
மாண்பு சேர் நீதிபதியாய் கலாபூஷணமாய்
மாநிலம் போற்ற வாழ்ந்தீர்
ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள் நாமம்
அவனிதனில் மங்கா தொளிருமப்பா
மீண்டுவரும் காலமெல்லாம் எம்மிதயத்தில்
தெய்வமாய்ப் போற்றியே வாழ்வோம்!

வள்ளுவர்,பாரதி தம் கருத்துக்களை
வடித்தெடுத்தே அதில் ஊறி நின்று
தெள்ளு தமிழ்ப் பேச்சாலே சமூகத்தில்
சிந்தனை மாற்றம் சிறப்பாகச் செய்திருந்தீர்
வெள்ளம் போல மக்கள் கூட்டம்
விரும்புமொரு "விகடகவி" ஆகிநின்றீர்
உள்ளமதில் தெய்வமாய் உறைந்திருப்பீர்
உங்களையே எந்நாளும் வணங்கி நிற்போம்.

127/7A, கோயில்வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(65610,11,12,15,17)


# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.30
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி கற்கை நிலையத்தால், மனிதவள முகாமைத்துவம் மற்றும் பேச்சுமொழி ஆங்கிலத்துக்கான குறுகிய கால கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி பெற்ற அனைவரும் இந் தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இந்தக் கற்கை நெறி மூன்று மாதகாலங்களைக் கொண்டுள்ளதுடன், கற்கை நெறிக்குரிய வகுப்புக்கள் 155ஆவது மைல் கல், கண்டி வீதி, கிளிநொச்சியில் நடைபெறும். விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். பிராந்திய நிலையக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ-ரி6)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்,30
கலாசார மற்றும் இராஜாங்க அமைச்சின் கீழ் , தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவில் அமைக்கப்படவுள்ள தெல்லிப் பழை கலாசார மத்திய நிலையத்தில் இசை, நடனம்,நாடகம், சித்திரம், சிங்களம்,ஆங்கிலம் மற்றும் தவில் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. 2016 ஆம் ஆண்டுக்கான திறமை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தக் கற்கை நெறிகளுக்கு தெல்லிப் பழைப் பிரதேச செய[illegible]ப் பிரிவில் வசிக்கும் குறித்த பாடங்களைக் கற்பிக்க ஆர்வமுள்ளவர்கள, தமது சுயவிவரங்களை எதிர் வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் 'நிலையப் பொறுப்பதிகாரி,கலாசார மத்திய நிலையம், காடிவளை, இளவாலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர் கே.சிறி மோகனன் அறிவித்துள்ளார்.


(ஐ-ரி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பிள் நிறுவனத்துடன் கைகோர்க்கும் சம்சுங்

ஏட்டிக்குப் போட்டியாக மொபைல் சாதன உற்பத்தியில் ஈடுபட்டுவரும் சம்சுங் மற்றும் அப்பிள் நிறுவனங்கள், பிறிதொரு நிறுவனத்தின் உற்பத்தியை நகல் செய்தமை காரணமாக நீதிமன்றம் வரைசெல்ல நேரிட்டமை சக லரும் அறிந்ததொன்றே.
இவ்வாறான நிலையில் அப்பிள் நிறுவனம் வடிவமைக்கும் ஸ்மார்ட் கடிகாரத்துக்கான தொடுதிரையை வடிவமைத்துக் கொடுக்க சம்சுங் நிறுவனம் சம்மதித்துள்ளது.
இதன்படி, தற்போதைய மொபைல் சாதனங்களில் ஐ.பி.எஸ். (IPS) தொழில் நுட்பத்தைக் கொண்ட தொடுதிரையைப் பயன்படுத்தும் அப்பிள் நிறுவனம், எதிர்வரும் காலங்களில்அமோலெட் (AMOLED) தொழில் நுட்பத்தைக் கொண்ட திரைகளைப் பயன்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.





# நைக் (Nike) அறிமுகம் செய்யும் அதிநவீன சப்பாத்து

சுயமாகவே லேசைக் (Lace) கட்டிக்கொள்ளக்கூடிய நவீனரகச் சப்பாத்தை நைக் நிறுவனம் அடுத்த வருடம் அறிமுகம் செய்யவுள்ளது.
இது தொடர்பான தகவலை அந்த நிறுவனத்தின் தலைமை அதிகாரியான மார்க் பார்க்கர் (Mark Parker) என்பவர் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளார்.
கால்களின் அளவுகளுக்கு ஏற்ற வகையில் இசைந்துகொடுக்கக்கூடியதாக இருக்கும் இந்த சப்பாத்துக்களின் வடிவமைப்பு தொடர்பான அறிவிப்பு 2014 ஆம் ஆண்டின் ஜுலை மாதத்தில் வெளியிடப்பட்டிருந்தது.
இந்த நிலையிலேயே எதிர்வரும் 2016 ஆம் ஆண்டில் அத்தகைய சப்பாத்து விற்பனைக்காக அறிமுகம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய அப்பிளிக்கேஷன் கூகுள் பிளே ஸ்டோரில்

பிளாக்பெரி (BlackBerry) நிறுவனம் தனது புத்தம் புதிய தொடுபேசியான பிளாக்பெரி பிறைவ் (BlackBerry Priv) ஐ விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.
கூகுளின் அன்ரோயிட் இயங்குதளத்தில் செயற்படக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்தத் தொடுபேசிக்கான அப்பிளிக்கேஷன்கள் கூகுள் பிளே ஸ்டோர் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
இதில் BlackBerry Camera app, Password Keeper போன்ற பல்வேறு அப்பிளிக்கேஷன்கள் தரப்பட்டுள்ளன.
மேலும் BlackBerry Priv தொடுபேசி, 5.4 அங்குல அளவுடையதும், 2560 x 1440 Pixel Resolution உடையதுமான தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், Octa Core Qualcomm Snapdragon 810 Processor பிரதான நினைவகமாக 3GB RAM என்பவற்றினையும், 18 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 5 மெகா பிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது.



# வெள்ளத்தில் மிதக்கும் பொம்மைவெளி









யாழ்ப்பாணம்,ஒக்.30
யாழ்ப்பாணத்தில் அண்மைய சில நாள்களாகப் பெய்து வரும் மழை காரணமாக பொம்மைவெளிப் பகுதியில் முஸ்லிம் மக்கள் இடம்பெயரத் தயாராகி வருகின்றனர். ஜே/87 கிராம சேவகர் பிரிவுப் பகுதியில் வசிக்கும் குடும்பங்களின் வீடுகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்தமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் நுளம்புப் பெருக்கத்தால் பலரும் நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர். அத்துடன் இந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு [illegible] வதை அவதானிக்க முடிந்துள்ளது. பாம்புகளின் நடமாட்டம் அந்தப் பகுதி மக்களை அச்சுறுத்துவதாக நிலைமையை நேரில் சென்று அவதானித்தவர்கள்தெரிவித்துள்ளனர். இதுவரை எந்தவித உதவிகளும் குறித்த குடும்பங்களைச் சென்றடையவில்லை. பொறுப்பான அதிகாரிகள் [illegible] வரை பார்க்கவில்லை எனவும் அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஜ-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தோனேசியாவுக்கு பலூன் மூலம் இணையம்

நியூயோர்க், ஒக்.30
இந்தோனோஷியாவில் விசேட பலூன் மூலம் இணையத்தள இணைப்புத் தரும் வசதியை கூகுள் நிறுவனம் ஆரம்பிக்க உள்ளது. இதன் மூலம் இந்தோனோஷியாவின் 17 ஆயிரம் சிறிய தீவுகளில் வசிக்கும் மக்கள் இணைய வசதி பெறவுள்ளனர்.
இணையத்தள வசதி சென்று சேர வாய்ப்பில்லாத இடங்களில் பலூன்கள் மூலம் அதை வழங்கும் திட்டத்தை கூகுள் செயற்படுத்தி வருகிறது. 'ப்ராஜெக்ட் லூன்' என்ற இந்தத் திட்டத்தின் கீழ் தரை மட்டத்திலிருந்து 60 ஆயிரம் அடி உயரத்தில் பலூன்கள் பறக்கவிடப்பட்டு அதன் மூலம் குறிப்பிட்ட பகுதியில் இணையதள சமிக்ஞைகள் பரப்பப்படும்.
ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா, பிரேசில் உள்ளிட்ட பகுதிகளில் இது தொடர்பான சோதனை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ற)

## தங்கச் சுரங்கத்தில் விபத்து 12 தொழிலாளர்கள் சாவு

இந்தோனேசியாவின் மேற்கு ஜவா மாகாணத்தில் சட்டவிரோதமாக இயங்கி வந்த தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.
இதுகுறித்து அந்த மாகாண பொலிஸ் தலைமை அதிகாரி உத்வாலா பிராணா தெரிவித்துள்ளதாவது-
சட்டவிரோதமாக இயங்கி வந்த குறித்த சுரங்கத்தில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லை. சுரங்க இடிபாடுகளுக்குள் சிக்கிய தொழிலாளார்கள் போதிய ஒட்சிசன் இன்மையால் உயிரிழந்துள்ளனர். அவர்களது உடல்கள் 30 மீற்றர் ஆழத்தில் சிக்கியுள்ளன.
விபத்துக்குள்ளான சுரங்கம் கடந்த மாதம் உள்ளுர் நிர்வாகத்தால் மூடப்பட்டது. ஆனால் தற்போது சட்டவிரோதமாக இயங்கி வந்துள்ளது.- என்றார். (ற)

# தரை வழித் த
# தயாராகிறது

## சிரியாவில் உள்ள ஐ.எஸ். அ

வொஷிங்டன், ஒக்.30
ஈராக் மற்றும் சிரியாவில் நிலை கொண்டுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக போராடி வரும் அமெரிக்கா, தனது நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தி நேரடி தரைவழித் தாக்குதல்களை முன்னெடுக்கவுள்ளது என்று அறிவித்துள்ளது.
ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிப்பதற்காக அமெரிக்கா, ஈராக், சிரியா ஆகிய நாடுகள் வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. ஆனால், ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் தரை வழித் தாக்குதல்களையும் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.




அதேவேளை, ஈராக்கிலும்,
கிய இலக்குகளைக் குறி

# நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணி நிறைவு

## 266பேர் சாவு, 1,856 பேர் படுகாயம் பாகிஸ்தான் அறிவிப்பு



காபூல், ஒக்.30
ஆப்கன் மற்றும் பாகிஸ்தானை கடந்த திங்கட்கிழமை தாக்கிய நிலநடுக்கத்தால் பாகிஸ்தானில் 266 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் ஆயிரத்து 856 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், பாகிஸ்தான் வடமேற்கு பகுதியில் 11 ஆயிரம் வீடுகள் நிலநடுக்கத்தால் சேதமாகியுள்ளன என்று அந்த நாட்டு தேசிய அனர்த்த முகாமைத்துவ ஆணையம் அறிவித்துள்ளது.
பாகிஸ்தானின் விண்வெளி மண்டல ஆராய்ச்சி ஆணையத்தின் உதவியுடன் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட விரிவான ஆய்வுகளின் அடிப்படையில், இந்தத் தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன என்று மேற்படி ஆணையம் குறிப்பிட்டுள்ளது.
நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளையும் மீட்புப் பணியாளர்கள் சென்றடைந்து ஆய்வு செய்துள்ள நிலையில், பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கையில் மேலும் மாற்றம் நிகழ வாய்ப்பில்லை எனவும் முகாமைத்துவ ஆணைய அதிகாரிகள் உறுதியாகத் தெரிவித்துள்ளனர்.
இந்த நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருள்களை வழங்கும் பணிகள் தேசிய இடர்முகாமைத்துவஆணையத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, இதுவரை பாதிக்கப்பட்டோருக்காக 8 ஆயிரத்து 750 தற்காலிக கூடாரங்கள், 13 ஆயிரம் போர்வைகள், 7 தொன் உணவுப் பொதிகள் மற்றும் 14 தொன் குடிநீர் போத்தல்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன என்று தேசிய அனர்த்த முகாமைத்துவ ஆணையத்தின் தலைவர் அஸ்கர் நவாஸ் தெரிவித்தார். (ற)



ஜெருசலேம் நகரிலுள்ள அல்-அக்ஸா மசூதி விவகாரம் தொடர்பில் மேற்குக்கரை, ஜெருசலேம் மற்
நிலையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொரு தாக்
இலக்காகிக் காயமடைந்துள்ளார். உயிரிழந்த பலஸ்தீனியர் 23 வயதானவர் என்று தெரிவிக்கப்ப
வருகின்ற பலஸ்தீனியர்கள் மற்றும் இஸ்ரேலியர்களுக்கு இடையிலான மோதலில் உயிரிழந்த ப
இவர்களுள் 34 பேர் இஸ்ரேலியர்களுக்கு எதிராக தாக்குதலில் ஈடுபட்டவர்கள் எனவும் தெரிவி
இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

# 34 போர் விமானங்கள் பாகிஸ்தானுக்கு இலவசம்

## துருக்கி வழங்குகின்றது

இஸ்லாமாபாத், ஒக்.30
பாகிஸ்தானுக்கு ரி-37 ரகத்தைச் சேர்ந்த 34 போர்ப் பயிற்சி விமா னங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் இலவச அடிப்படையில் வழங்கப்படவுள்ளன என்று துருக்கி அரசு அறிவித்துள்ளது.
பாகிஸ்தான் துருக்கி உயர்நிலை இராணுவ குழுக்களிடையேயான 11ஆவது கூட்டம், நேற்று முன்தினம் அங்காராவில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தைத்தொடர்ந்து இருநாட்டுஇராணுவத்தைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் முன்னிலையில் பாதுகாப்புக் கூட்டு ஒப்பந்தமொன்று கையெழுத்தானது.



இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இவ்வாறு போர்ப் பயிற்சி விமானங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் என்பன பாகிஸ்தானுக்கு துருக்கி அரசால் இலவசமாக வழங்கப்படவுள்ளன.
குறித்த உடன்படிக்கையில், பாகிஸ்தான் தரப்பில் பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை இயக்குநர் ஜெனரல் மேஜர் ஜெனரல் நவீட் அஹமட் மற்றும் துருக்கி தரப்பில் உபகரண சேவை வழங்கல் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சர்தார் குல்பாஸ் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர். (ற)

# நேபாளத்தின்

காத்மண்டு, ஒக்.30
பெண்கள் உரிமைகளுக்கான பரப்புரையாளரான பித்யாதேவி பந்தாரி, நேபாளத்தின் முதல் பெண் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
ஆளும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் துணைத் தலைவராகச் செயற்பட்டு வந்த 54 வயதுடைய பித்யாதேவி பந்தாரி, தற்போது அந்த நாட்டின் புதிய ஜனாதிபதியாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தாக்குதலுக்கு ...து அமெரிக்கா


## ...அமைப்பு மீது



...ாக்கிலும், சிரியாவிலும் முக் ...க் குறிவைத்து மேலும் கூடு தலான வான்தாக்குதல்கள் நடத்தப்படவுள்ளன என்று அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் ஆஷ்டன் காட்டர் தெரிவித்தார்.

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல்களில் தகுதி வாய்ந்த நட்பு நாடுகளுடன் இணைந்து வான்வழித் தாக்குதல் நடத்துவதில் இருந்தும், களத்தில் நேரடியாக தரைப்படையைக் கொண்டு தாக்குதல் நடத்துவதில் இருந்தும் பின்வாங்க மாட்டோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவரது கருத்தானது, தீவிரவாதக் குழுக்களை தோற்கடிப்பதில் முன்னேற்றம் இல்லை என்பதை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ற)



...லம் மற்றும் காஸா ஆகிய பகுதிகளில் மோதல்கள் தொடர்ந்து வருகின்ற ...ரு தாக்குதல் சம்பவத்தில் இஸ்ரேலிய பெண்ணொருவர் கத்திக்குத்துக்கு ...விக்கப்படுகின்றது. கடந்த ஒக்ரோபர் மாத ஆரம்பம் முதல் தீவிரமடைந்து ...ழந்த பலஸ்தீனியர்களின் எண்ணிக்கை 63ஆக உயர்வடைந்துள்ளது. ...தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை இந்த மோதல்களில் இதுவரை 11 (ற)

# பனாமா கால்வாய்க்கு எதிராக ஆர்ப்பாட்டம்

லண்டன், ஒக்.30

சீன நிறுவனமொன்றால் நிக்கராகுவா நாட்டில் கால்வாய் ஒன்று அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மனாகுவா நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மத்திய அமெரிக்காவின் அனைத்து மாநிலங்களும் பயன்படுத்தக் கூடிய வகையில், பனாமாக் கால்வாயை அமைக்க எச்.கே.என்.டி. என்ற சீன நிறுவனத்துக்கு 50 ஆண்டு கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன்படி குறித்த சீன நிறுவனம் அந்தக் கால்வாயை வடிவமைத்து அதற்கான பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

50 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான குறித்த கால்வாய் கட்டுமான நடவடிக்கைகளால் அருகிலுள்ள கிராமங்கள் நீரில் மூழ்கடிக்கப்படக் கூடிய அபாயம் தோன்றும் எனத் தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட முதியவர் ஒருவர் கருத்து வெளியிடுகையில், தாம் நிகராகுவாவில் கால்வாய் அமைக்கப்படுவதை விரும்பவில்லை எனவும், இந்த ஆர்ப்பாட்டமானது முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் தெரிவித்தார்.



இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த நிகராகுவாவின் ஜனாதிபதி டனியல் ஓர்டேகா, மத்திய அமெரிக்க நாடுகளில் மிகவும் வறுமையான நாடாக விளங்கும் நிகராகுவா, குறித்த கால்வாய் கட்டுமானத்தின் மூலம் அதிக இலாபத்தை பெற முடியும். எனவே அரசு இதைப் பாதுகாக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டம் இந்தத் திட்டத்தில் மாற்றத்தை உண்டுபண்ணுமா? என்பது குறித்து அந்த நாட்டு ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன. (ற)

# ஆப்கனுக்கு சீனா நன்கொடை

பீஜிங், ஒக்.30

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஆப்கனுக்கு நிவாரணப் பணிகளுக்காக ஒரு இலட்சம் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்க சீனா முன்வந்துள்ளது. இந்த நிதியை ஆப்கனுக்கான சீனத் தூதுவர் யாவோ ஜிங், சீன செஞ்சிலுவைச் சங்கம் சார்பில் ஆப்கன் செம்பிறைச் சங்கத்திடம் வழங்கியுள்ளார்.

ஆப்கனில் பேரழிவு தொடர்ந்து வருகின்ற நிலையில், தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து நிவாரணப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று சீனா அறிவித்துள்ளது.

சீனாவால் வழங்கப்பட்டுள்ள நிதி, நிலநடுக்கத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்குப் பேருதவியாக அமைந்துள்ளது என்று ஆப்கான் செம்பிறைச் சங்கத்தின் பதில் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிதி பாதிக்கப்பட்ட மக்களின் உணவு மற்றும் தற்காலிக தங்குமிட வசதிகளை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆப்கன் மற்றும் பாகிஸ்தானை கடந்த திங்கட்கிழமை 7.5 ரிச்டர் அளவில் தாக்கிய நிலநடுக்கத்தினால் 300 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்

# 2 ஆம் உலகப் போர்ப் பீரங்கி வெடித்து இருவர் உயிரிழப்பு

நியூயோர்க், ஒக்.30

மத்திய ஒரேகன் பிராந்தியத்தில் இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட பீரங்கியில்.இருந்த குண்டொன்று வெடித்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் ஒரேகன் பிராந்தியத்தில் இருந்து 25 மைல் தொலைவில் அமைந்துள்ள பென்ட் என்னுமிடத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயம் அடைந்த தம்பதிகள் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும் எனினும் அவர்கள் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# நூடில்ஸ் மனிதன்

டோக்கியோ, ஒக்.30

ஜப்பானில் வசிக்கும் 55 வயது டோஷியோ யமமோடோவுக்கு நூடில்ஸ் சாப்பிடுவது என்றால் விருப்பம் அதிகம். இதுவரை 40 நாடுகளைச் சேர்ந்த 5 ஆயிரத்து 500 வகை நூடில்ஸ்களைச் சுவைத்திருக்கிறார். கடந்த 20 ஆண்டுகளில் நூடில்ஸ் சாப்பிட்ட அனுபவங்களை இணையத் தளத்தில் எழுதி வருகிறார்.

அந்த நாட்டில் நூடில்ஸ் எப்படி அறிமுகமானது, எப்படிச் சமைக்க வேண்டும், சோடியம் எவ்வளவு இருக்கிறது, கலோரிகள் எவ்வளவு போன்ற விடயங்களை எல்லாம் சுவாரசியமாக எழுதி வருகிறார்.



இவரது இணையத்தளம் உலகம் முழுவதும் மிகப் பிரபலமானது. 1996ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை 14 லட்சம் பேர் இவரது இணையத் தளத்தைப் பார்த்து இருக்கிறார்கள். சிலர் அந்தந்த நாடுகளில் கிடைக்கும் நூடில்ஸ்களை அன்பளிப்பாக அனுப்பி வைக்கிறார்கள்.

நான் ஆரம்பப் பள்ளியில் படிக்கும்போதே நூடில்ஸ் சமைக்க ஆரம்பித்துவிட்டேன். அன்றிலிருந்து இன்று வரை நூடில்ஸ் மேல் இருக்கும் ஆர்வம் சற்றும் குறையவில்லை. ஒவ்வொரு நூடில்ஸையும் சமைத்து, சுவைத்த பிறகு அதற்கு மதிப்பெண் போடுவேன். அதி அற்புதமான நூடில்ஸாக இருந்தால் 4 நட்சத்திரங்கள் கொடுப்பேன். நான் என் தொழில் காரணமாக பல நாடுகளுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கெல்லாம் நூடில்ஸ்களை மறக்காமல் வாங்கி வந்துவிடுவேன். பத்தாண்டுகளுக்கு முன்புவரை நூடில்ஸ் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் நலனை முக்கியமாகக் கருதினார்கள். உடலுக்கு நன்மை தரக்கூடிய விடயங்களைச் சேர்த்தனர். ஆனால் இன்று எல்லாமே வணிகமயமாகிவிட்டன. வளர்ந்த நாடுகளில் கப் நூடில்ஸ் மிகப் பிரபலமாக இருக்கிறது. வளர்ந்து வரும் நாடுகளில் இன்ஸ்டன்ட் நூடில்ஸ் பிரபலமாக இருக்கிறது. நூடில்ஸ் தொடர்பான பணிகளுக்காக கடந்த ஆண்டு விருப்பு ஓய்வு பெற்றுவிட்டேன். புத்தகங்கள் எழுதி வருகிறேன். இப்போதும் வாரத்துக்கு 5 நாள்கள் நூடில்ஸ்தான் சாப்பிடுகிறேன். -என்கிறார் டோஷியோ யமமோடோ. (ற)

# ...ன் முதல் பெண் ஜனாதிபதியானார் பந்தாரி



...பதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேபாள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி வேட்பாளர் கவுல் பகதூர் குருங்கை 100 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி பித்யா தேவி பந்தாரி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றார்.

நேபாளத்தின் சிறுபான்மை மக்கள் மற்றும் பெண்களின் உரிமைகளுக்காக போராடி வந்த பந்தாரி, 2009ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நேபாளத்தின் பாதுகாப்பு அமைச்சராகவும் பதவி வகித்திருந்தார்.

2008ஆம் ஆண்டு நேபாளம் குடியரசு நாடாக அறிவிக்கப்பட்ட பின்னர் முதல் ஜனாதிபதியாகத் [illegible] [illegible] ஜனாதிபதியாக பித்யாதேவி பந்தாரி தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக் கொடையாளர் நவமகாஜன சிற்பி தெ.து.ஜயரட்ணம்

தமிழுக்கும், கல்விக்கும், சமூகத்துக்கும் தொண்டு செய்தோர் இறப்பதில்லை. அவர் பெயர் மொழியுள்ளளவும் நிலைபெறும்.

தெல்லிப்பழை அம்பனைக் கிராமத்திலே இன்றும் கொடிகட்டிப் பறக்கும் மகாஜனக் கல்லூரியின் ஆதர்ச புருசர். கல்விக் கலைஞர் அதிபர் தெ.து.ஜயரட்ணம். அதிபருக்கு அதிபர். அறிஞருக்கு அறிஞர். தன்னலமற்ற பெருஞ்சேவையாளன்; சமூக நலன் விரும்பி; தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தைப் பரிபாலித்த தலைவர்; கல்விக் கடல்; கலங்கரை விளக்கு என்று சொல்லொணாப் பெருமை மிக்கவர்.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று மிக்க மாந்தருள் மாணிக்கம். பாவலர் தெ.துரையப்பாபிள்ளை அவர்களது தீர்க்க தரிசனத்துடன் அமைந்த கல்விக் கழகமான மகாஜனக் கல்லூரியை வழி நடத்திய வித்தகர் நவமகாஜன சிற்பி தெ.து.ஜயரட்ணம்.

1932ஆம் ஆண்டிலிருந்து 1945 ஆம் ஆண்டு வரை, பதின்மூன்றாண்டுகள் மகாஜனவில் ஆசிரியராகக் கடமையாற்றினார். 1935க்கு முன்னர் நிறுவியவர் தினமும், பரிசளிப்புக் கொண்டாட்டமும் ஆரம்பமாயிற்று. 1936இல் மகாஜனன் என்ற இதழைத் தொடக்கினார். 1938இல் சாரணர் இயக்கத்தைக் கல்லூரியில் ஆரம்பித்தார். 1945இல் மகாஜனக் கல்லூரியின் அதிபரானார். 1946 இல் 'உனை நீ அறி' சின்னம் இலச்சினை உருவாக்கப்பட்டது. அதேயாண்டில் அறிவியல் பாடங்களான பௌதிகம், இரசாயனம், உயிரியல் பாடவசதிகளை ஏற்படுத்தினார்.

யாழ். பாடசாலை மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடம், அந்த ஆண்டே மகாஜனக் கல்லூரிக்குக் கிடைத்தது. இதேயாண்டில் பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளை ஆரம்பிக்கப்பட்டது.

1947இல் இந்தியாவிலிருந்து விஞ்ஞான ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். 1948இல் பல்கலைக் கழகத்துக்கு மகாஜன மாணவர்கள் நுழைய வாய்ப்பேற்பட்டது. 1949இல் மகாஜன முதற்தரக் கல்லூரியாக்கப்பட்டது. 1952இல் பௌதிகபாட ஆய்வுக்கூடம் ஏற்படுத்தப்பட்டது. 1953இல் அமைப்பு விதியுடன் செயற்படத் தொடங்கியது. 1954இல் மகாஜனக் கல்லூரியின் கட்டட நிதிக்காக யாழ். முற்றவெளியில் 26 தினங்கள் களியாட்ட விழா நடத்தப்பட்டது. அதே ஆண்டில் கல்லூரி விடுதிச்சாலை ஆரம்பிக்கப்பட்டது.

1955இல் முறைசாராக் கல்விக் கொள்கையின் அடிப்படையில் மரவேலை, வனைதல், தும்புத்தொழில், நெசவு என்பன கற்பிக்கப்பட்டன. அதேயாண்டில் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம் நிர்மாணிக்க அடிக்கல் நடப்பட்டது. 1957இல் 25 வருட ஆசிரிய சேவையின் வெள்ளி விழாவுடன் ஐந்து வகுப்பறைகள், விடுதி இல்லப் பணிகள் நிறைவேறப்பட்டன. 1958இல் நடனம் மற்றும் சங்கீத பாடங்களுக்கான கலைக்கூடம் நிறுவப்பட்டது. 1959இல் திறந்தவெளியரங்கும் வகுப்பறைகளும் நிறுவப்பட்டன.

1960இல் பொன்விழா நினைவு மாடிக் கட்டடம், சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானின் கோயில் அமைக்கப்பட்டன.

1945 முதல் 1960 வரை கால் ஏக்கர் நிலப்பரப்பிலமைந்த மகாஜனவை ஐந்து ஏக்கர் பரப்பளவுக்கு விரிவுபடுத்தினார். 1965-1969 வரை அனைத்திலங்கைப் பாடசாலை நாடகப் போட்டியில் மகாஜனவுக்கு முதலிடம் கிடைத்தது. 1962 பெப்ரவரியில் அரசு கல்லூரியைச் சுவீகரித்தது. 1962இல் மகாஜனக் கல்லூரிச் சாரணர் மூவர் டோக்கியோ சென்றனர். 1966இல் இந்தியா சென்ற அனைத்திலங்கை மாணவர் குழுவின் தலைவர் மகாஜனக் கல்லூரி மாணவன் என்பது குறிக்கப்பாலது. 1969இலேயே தெ.து.ஜயரட்ணம் முறைசாராக் கல்வி பற்றி விளக்கினார். 1970இல் 1800 மாணவர்களையும் 64 ஆசிரியர்களையும் விட்டுப் பிரிந்து ஓய்வு பெற்றார். எனினும் 1972இல்தான் அரச பாடசாலைகளில் தொழிற்கல்வியின் முக்கியத்துவம் பற்றி அரசு உணர்ந்தது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் 1910இல் 130 மாணவர்களும், 1950இல் 710 மாணவர்களும், 1953இல் 960 மாணவர்களும், 1956இல் 1,023 மாணவர்களும், 1960 இல் 1,574 மாணவர்களும் கல்வி பயின்றனர்.

பயிற்றுமொழி பற்றி மகாஜன சிற்பி தெ.து.ஜயரட்ணம் அவர்களின் தீர்க்கதரிசனமிக்க கருத்து 1951ஆம் ஆண்டு மகாஜனன் இதழில் வெளியிடப்பட்டது. அந்தக் கருத்து இன்றும் ஏற்புடைமையாயுள்ளமை அவரது சாணக்கியத்தைக் காட்டுகிறது.

"எமது பாடசாலைகளிலே தேசிய மொழிகள் மூலம் கல்வி புகட்டப்பட வேண்டும் என்ற அரசின் முடிவை நாம் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம். சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு வரை தேசிய மொழி மூலம் கல்வி புகட்டலைப் படிப்படியாகப் புகுத்துவதென்ற முடிவு வாய்ப்பான பல விளைவுகளைக் கொண்டுவரும். கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளாக மக்களின் விருப்பமின்றி அவர்கள் மீது திணிக்கப்பட்ட ஆங்கிலமொழியின் மூலமாக இந்த நாட்டு இளைஞர்களுக்குக் கல்வி புகட்டுவது ஒரு முரண்பாடாகும்; இழிவாகும். மேலும் சராசரியாகக் கிராமச் சிறுவரின் அறிவாற்றலை எல்லாம், ஆங்கில மூலம் மேற்கொள்ளப்பட்ட போதனை சிந்தத்து விட்டது" என்று எழுதினார் அவர்.

எம்மைக் கல்விப் புகழோடு சமூகத்தில் வாழ வைத்தவர் அதிபர் தெ.து.ஜயரட்ணம். அவர் கல்வி நிர்வாகி; வாழ்வில் ஒளியேற்றியவர்; தீர்க்கதரிசி; சிந்தனையாளர். தியாகம் அர்ப்பணிப்பு விடா முயற்சிகளின் உதாரண புருசர்; தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை உருவாக்கி உயிர் கொடுத்து ஒளியேற்றியவர். மாணவர்களின் ஆற்றலையும் திறனையும் தூண்டியவர். கடமை கண்ணியம் கட்டுப்பாடு கண்டிப்பு ஒழுக்கமேம்பாடு இவற்றிலே கூர்ந்த கவனமுடையவர். புன்னகை தவழும் திருமுகம். எவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் சுபாவம் கொண்டவர். கடுஞ்சொற் கூறாதவர்.

நவமகாஜனச் சிற்பி பற்றி 1971இல் இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு எழுதியுள்ளார்.

".....தெ.து.ஜயரட்ணம் பிரத்தியேக மனிதர். அதி மனிதர். அவரது ஆத்ம சக்தியின் பெருக்கே பல்துறைப்பட்ட மகாஜனக் கல்லூரியின் வளர்ச்சி. அவரது ஆத்ம தபோபலமே அதிபர் ஜயரட்ணம் என்கின்ற சற்புத்திரன்....நவமகாஜனச்சிற்பி தெ.து.ஜயரட்ணம் நீடித்த புகழாளர். கல்வியுலகிலும் சமுதாய வாழ்விலும் ஒளிபெருக்கி இருள்நீக்கி ஓயா துழைத்த உத்தமர். ஆசிரியத் தொழிலுக்குச் சிறப்பையும் மதிப்பையும்தேடிக் கொடுத்தவர். கடமையுணர்ச்சியையும் அர்ப்பணிப்பையும் செயலில் உணர்த்திக் காட்டியவர். மகாஜனவின் புகழும் நவமகாஜனச் சிற்பியின் புகழும் நிலைப்பவை என்பது உறுதி.

**பேராசிரியர் டாக். கனகசபாபதி நாகேஸ்வரன்**
**இணைப்பேராசிரியர்**
**மொழித்துறை,**
**சப்ரகமுவப் பல்கலைக்கழகம்**
**பெலிகுலோயா**

# யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஜனவரி 29 முதல் மூன்று நாள்களுக்கு

வடக்கின் பன்முக உற்பத்திக் கண்காட்சியான யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையான மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ளது. 7 ஆவது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி கடந்த காலங்களில் வட பிராந்தியத்தில் முதலீட்டாளர்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது மக்களை ஒன்று கூடச்செய்யும் ஒரு சிறந்த களமாகவும் புகழ் பெற்றுள்ளது.

எனவே இந்த ஆண்டுக்கான நிகழ்வுகள் முன்னைய ஆண்டுகளை விட சிறப்பாக முன்னெடுப்பதற்கு, கண்காட்சிக்கு இணையாக ஏனைய கலை நிகழ்வுகளையும் முன்னெடுக்கவுள்ளதாக கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.




இதில் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

7ஆவது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் நிர்மாணத் தொழிற்றுறை, விருந்தோம்பல் தொழிற்றுறை, உணவு, பான வகை மற்றும் பொதியிடல் தொழிற்றுறை, வாகனத்தொழிற்றுறை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தொழிற்றுறை, நிதியியல் சேவைகள், ஆடையணி, விவசாயம், நுகர்வோர் உற்பத்திகள் மற்றும் பல உற்பத்தி நிலையங்கள் தொடர்பான காட்சிகள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன. மேலும், கண்காட்சியின்போது அதற்கு இணையாகப் பிரபலமான இசைக் கலைஞர்கள், பாடகர்கள் கலந்து கொள்ளும் இரண்டு தினங்களுக்கான மாலை நேர இசை நிகழ்வு, கண்காட்சிக்கு முன்னர் வீதியுலா காட்சி, சிறுவர்களுக்கான கொண்டாட்ட நிகழ்வு, பொழுதுபோக்குப் பூங்கா மற்றும் பல நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

கடந்த காலங்களில் நாட்டின் வட பிராந்தியத்தில் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்படுகின்ற தனித்துவமான கண்காட்சியாக யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி அமைந்துள்ளது. மேலும், வடபிராந்தியத்தில் முதலீட்டாளர்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களை ஒரே மேடையில் ஒன்றுகூடச் செய்யும் மிகச் சிறந்த களமாகவும், போர் நிறைவின் பின்னர் வர்த்தக அறிமுகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல், முதலீடுகள், வியாபாரத் திட்டங்கள் மற்றும் தற்போதைய வியாபார முயற்சிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான வாய்ப்பை வழங்கும் முதன்மையான தளமேடையாகவும் யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருகின்றது.

வடக்கில் தனியார்கள் தமது தனித்தன்மையுடன் கூடிய முதலீடுகளை இன்னமும் முழுமையான அளவில் பயன்படுத்தாமல் உள்ளனர். எனவே இதுபோன்ற காரணங்களால் இந்தப் பிரதேசங் களில் உள்ள வளங்கள் இன்னமும் பயன்படுத் தப்படாமலோ அல்லது உச்ச அளவில் உபயோகிக்கப்படாமலே காணப்படுகின்றன.

விடாமுயற்சி கொண்ட சமூகத்தினரைத் தன்னகத்தே கொண்ட யாழ். குடா நாட்டில் இந்த நிகழ்வுகள் ஊடாக முதலீட்டாளர்களுக்கான வாய்ப்புக்கள் விரிவுபடுத்தப்பட்டு வருவதையே மக்களும் விரும்புகின்றனர். இவற்றுக்கான சான்றாக கடந்த ஆண்டு நடைபெற்ற கண்காட்சிக்கு 60, 000 இற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வருகை தந்ததுடன் கண்காட்சியாளர்கள் அனைவரும் அனைத்து அம்சங்களிலும் தமது இலக்குகளுக்கும் மேலான பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், நடைபெறவுள்ள யாழ். வர்த்தகக் கண்காட்சியின் முக்கிய அம்சங்களாக நுகர்வோர் விரும்பும் உற்பத்திகள் முதல் தொழிற்றுறை உற்பத்திகள் மற்றும் சேவைகள் என்று 300 இற்கும் மேற்பட்ட கண்காட்சிக்கூடங்கள், 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள், நேரடி மாலைப் பொழுது இசை நிகழ்வுகள், சிறுவர்கள் விளையாடுவதற்கான ஏற்பாடு உட்பட்ட பொழுது போக்கு பூங்கா, அனைத்து வகையான உணவுகள் மற்றும் பானவகை, கூவி விற்கும் வகையான உணவுகள், 1,000 இற்கும் மேற்பட்ட உற்பத்திகளுக்கு விசேட தள்ளுபடிகள், வியப்பூட்டும் பரிசுகளை வெல்வதற்கான மணி நேரத்துக்கு ஒரு முறை குலுக்கல் சீட்டிழுப்புக்கள், விசேட தள்ளுபடியுடனான சேலை விற்பனை, கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள், விசேட உயர் கல்வி கண்காட்சிக்கூடம், இந்திய வர்த்தக தூதுக்குழுவின் வருகை என்பனவும் இடம்பெறவுள்ளன - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (து-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களையும் தூக்கிலிடுங்கள்

தூக்குத் தண்டனையைப் பற்றி அடிக்கடி பேசப்படுகிறது. முதலில் இனவாதம் பேசுபவர்களைத் தூக்கிலிடுங்கள். இதனை எப்போதோ செய்திருந்தால், எங்கள் நாடு இன்று சிங்கப்பூரை மிஞ்சியிருக்கும். ஒருவரை ஒருவர் அடிமைப்படுத்தி அடக்கியாள முற்பட்டதன் விளைவு இன்று எல்லோரும் ஒட்டு மொத்தமாக அமெரிக்காவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கின்றோம்.

அடுத்ததாக சாதியவாதம். இதனாலேயே தமிழகளால் எதிலும் வெற்றிபெற முடியவில்லை. சாதியின் பேரால் ஒருவரை ஒருவர் அடக்கியாள முற்பட்டுக் கடைசியில் எல்லோரும் பேரிவாதத்துக்கு அடிமையானதுதான் மிச்சம். தமிழ் நாட்டிலும் இதுதான் நிலைமை. சாதியின் பேரால் பிரிவினைகளை வளர்த்ததன் விளைவு தண்ணீருக்குக் கூட கேரளத்திடமும், கர்நாடகாவிடமும் கையேந்தும் இழிநிலை.

அடுத்தது மதவாதம். உன் மதமா என் மதமா என்ற இந்தக் கொடிய மதவெறியே எத்தனையோ உயிர்களை எங்கள் நாட்டில் காவுகொண்டுள்ளது. எனவே இனியாவது, இந்த நல்லாட்சியிலாவது வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாய் வாழ்ந்து சகல அடிமைத்தனங்களையும் வெற்றி கொள்வோம். இதற்கு கொலைக்குற்றவாளிகளுக்கு மட்டுமல்ல மேற்கூறிய இன, மத சாதியவாதிகளுக்கும் சாவுத்தண்டனை விதிக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு.

– விஸ்வாஸ்.

# நடமாடும் சேவையில் பயனுற மன்னார் மக்களுக்கு அழைப்பு


மன்னார் மாவட்டம் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தட்சணா மருதமடு பிரதேசத்தில் மக்கள் குறை தீர்க்கும் மாபெரும் நடமாடும் சேவை இன்று (30.10.2015) இடம்பெறவுள்ளது. வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இந்த நடமாடும் சேவை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மடு பிரதேச மக்கள் முழுநன்மை அடைய வேண்டும் என்பதற்காக வடமாகாணத்தில் உள்ள கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி, உள்ளூராட்சி, உட்கட்டுமானம் உள்ளிட்ட அமைச்சுக்களின் அமைச்சர்களும் அவற்றோடு இணைந்த திணைக்களத் தலைவர்கள், அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டு மக்களுக்கு சேவையாற்றவுள்ளனர். இந்தத் திட்டம் மக்களுக்கு (ஏழை மக்களுக்கு) முழு நன்மை பயப்பதாக அமைய வேண்டும் என்பதற்காக வடமாகாண முதல்வரோடு இணைந்ததாக வாணிபத்துறை வடக்கு அமைச்சர் பா.டெனீஸ்வரன் பல்வேறு ஒழுங்குகளை இரவுபகல் பாராது ஒத் துழைத்து பணி செய்து வருகின்றார்.

அத்துடன் வடக்கின் திணைக்களத் தலைவர்கள், அமைச்சு அதிகாரிகள், அமைச்சர்களையும் பல தடவைகள் சந்தித்துப் பேசியதுடன் போருக்குப் பின்னர் இடம்பெறும் மக்கள் குறைதீர்க்கும் நடமாடும் சேவையில் முழு நன்மை மக்களுக்கு கிடைத்திட வேண்டும் என்பதில் முழுமையாக வடமாகாண சபை நிர்வாகம் ஈடுபாடு கொண்டு செயற்படுகின்றது. எனவே இன்றைய பயனுள்ள தினத்தை, அனைத்து மன்னார் மடு பிரதேச மக்களும் பயன்படுத்தி பூரண சேவையை பெற்று நன்மை அடையலாம். வாய்ப்பை முழுமையாக்கி பயன் பெறுங்கள்.

– செ.ரமேஷ், நவாலி.


## வாசகர் திருமுகம்



### வாசகர்களுக்கு

வாசகர் திருமுகம் பகுதிக்கு வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமான ஆக்கங்கள் இந்தப் பகுதியில் பிரசுரிக்கப்படும்.

## கேலிச் சித்திரம்




நன்றி லங்காதீப

# இம்மானுவேல் அடிகளுக்கு இலங்கை அரசு நேசக்கரம்

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தனது தெற்காசியப் பயணத்தின்போது இலங்கை வர விரும்பியபோதிலும் மகிந்த அரசால் அனுமதி மறுக்கப்பட்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பூகோள பெண்கள் விவகாரங்களுக்கான தூதுவர் கத்தரின் ருசெல், தற்பொழுது இலங்கை வந்து உயர்மட்ட அரச அதிகாரிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமயத் தலைவர்களுடன் பேச்சு நடத்திவருகிறார். இலங்கையில் இவ்வளவு விரைவாக ஆட்சி மாறும்; தாம் வருவதற்கான சுமுகமான சூழ்நிலை உருவாகும் என்று கத்தரின் ருசெல் கனவிலும் நினைத்திருக்கமாட்டார். அவருக்கு இலங்கை வர அனுமதி மறுத்ததன் மூலம் இலங்கை தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாடு கடினமடைந்தது. பாதிக்கப்பட்டது இலங்கைதான்.

இதே வரிசையில் தடைவிதிக்கப்பட்டிருந்த மற்றும் ஒருவர், உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் அடிகளார். இம்மானுவேல் அடிகளாரையும் இலங்கை வர மகிந்த அரசு அனுமதிக்கவில்லை. 2009 போரின் பின்னர் இலங்கைக்குப் பெரும் சவாலாக இருந்தவை புலம்பெயர் தமிழர் அமைப்புகள். இவற்றைப் பழிவாங்கும் நோக்கத்துடன் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் பயங்கரவாதத்துக்கு ஆதரவான அமைப்புகளைத் தடைசெய்யும் 1373ஆவது தீர்மானத்தைக் காரணம் காட்டி கொண்டுவரப்பட்ட தடைச் சட்டத்துக்கு அமைய 400இற்கும் மேற்பட்ட புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் பெயர்ப்பட்டியல் மகிந்த அரசால் வெளியிடப்பட்டது. தனி நபர் பட்டியலில் நாடு கடந்த தமிழீழ அரசுத் தலைவர் ருத்திரகுமாரன், நெடியவன் (நோர்வே) ஆகியோருடன் இம்மானுவேல் அடிகளாரின் பெயரும் இருந்தது. மகிந்த அரசினால் பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்த இம்மானுவேல் அடிகளாரும் இலங்கையில் இவ்வளவு விரைவாக ஆட்சி மாறும் என்று எதிர்பார்த்திருக்கமாட்டார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் அவருக்கு தனிப்பட்ட அழைப்பு அனுப்புவார்கள் என்பது நினைத்துப் பார்க்கமுடியாததொன்று.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய நிலைப்பாடுகள் தொடர்பாகப் புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளில் விமர்சனங்கள் உள்ளன. இம்மானுவேல் அடிகளாரின் இலங்கைப் பயணம் புலம்பெயர் நாடுகளில் அரசியல் தெளிவை ஏற்படுத்த உதவும் என்று எதிர்பார்க்கலாம்.

இலங்கை தொடர்பான அமெரிக்கத் தீர்மானம் கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட சமயம், அதனை எச்சரிக்கையுடன் ஆதரிப்பதாக இம்மானுவேல் அடிகளார் கருத்து வெளியிட்டிருந்தார். இந்தச் செய்தி ஊடகங்களில் வெளியான பின்னர் இம்மானுவேல் அடிகளார் தமிழீழம் கேட்கவில்லை. புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மீதான தடை குறித்து மீளாய்வு செய்யப்படும் என்று அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் அறிக்கை விடுத்தார். இதன் தொடர்ச்சியாக அமைச்சர் மங்கள சமரவீரவும் ஜனாதிபதியும் இம்மானுவேல் அடிகளாரை இலங்கை வரும்படி அழைப்பு விடுத்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதில் இலங்கையின் புதிய ஆட்சியாளர்கள் வெற்றிகண்டுள்ளனர். ஐ.நா. தீர்மானத்தை இலங்கை அரசு முழுமையாகச் செயற்படுத்துமானால், போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும் வழி பிறக்கலாம். கூட்டமைப்பின் அடுத்த நடவடிக்கை ஐ.நா. தீர்மானத்தை இலங்கை அச்சொட்டாகச் செயற்படுத்துகின்றதா என்பதைக் கண்காணிப்பதுதான். இதில் புலம்பெயர் தமிழர் அமைப்புகளுக்கும் பெரும் பங்குண்டு. இம்மானுவேல் அடிகளாரின் இலங்கைப் பயணம் இதற்கு உதவவேண்டும். இலங்கையில் இடம்பெற்றன என்று கூறப்படும் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒரு வரலாற்று ஆவணமாகக் கருதி அடுத்தகட்ட நடவடிக்கையை முன்னெடுக்கவேண்டும் என்று இம்மானுவேல் அடிகளார் தெரிவித்திருந்ததை நாம் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021 493 1111
விநியோகம் : 021 493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் தேவைகளை மேலெடுக்க வாய்ச் சவடால்கள் வேண்டாமே!

மட்டக்களப்பில் கடமை புரியும் படையினரில் சிலர் புதிய அரசின் மாற்றங்களை ஏற்றுக் கொள்வதில்லை. முந்தைய (பழைய) அரசின் விதிகளையே இன்னமும் கைக்கொண்டு வருகின்றனர்.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சட்டம் மற்றும் கொள்கைகள் பிரிவின் பணிப்பாளர் ஜேம்ஸ் ரோஸ் மேற்கண்ட நிலையை வெளிப்படுத்தி உள்ளார். அவர் அங்கு அவதானித்தவற்றைக் கொண்டே தமது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

புதிய அரசு சில மாற்றங்களை அறிமுகம் செய்துள்ளது. ஆனால், இராணுவத்தினர் அவற்றின் அடிப்படையில் செயற்படுவதில்லை என்று தமது அவதானிப்பை அவர் அப்பட்டமாக வெளிப்படுத்தி இருக்கிறார்.

இத்தகைய நிலைமை, வடக்கிலும் உண்டாயினும் உள்ளூர் அதிகாரிகள் அதனை வெளிப்படுத்தப் பின்னிற்கிறார்கள்; அஞ்சுகிறார்கள் என்று கொள்ளலாம்.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் உரையாற்றுகையில்;

முந்திய தவறுகள் திருத்தப்பட்டு நீதி நிலை நாட்டப்படும் என்று தெரிவித்து இருந்தார்.

போருக்குப் பின்னர் மேற்கொண்டிருக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால், அனைத்துலக நாடுகள் மத்தியில் எமது தேசத்துக்கு நன்மதிப்பு மிகவும் மங்கிப் போயிருந்ததை அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

இனப் பிரச்சினை, அதன் பயனாக விளைந்த போர், நாட்டின் சகல மக்களுக்கும் உண்டான பாதிப்புக்கள், இழப்புக்கள் மிகக் குறிப்பாக உயிர் இழப்புக்கள் மற்றும் உடைமை இழப்புக்கள் கட்டுக்கு அடங்காமல் நாட்டை அல்லோல கல்லோலமுறச் செய்தன.

மேற்போந்தவற்றை போக்குவதற்கு இனியேனும் நாம் செயற்பட வேண்டும் என்று பிரதமர் பொறுப்புணர்வுடன் கருத்து வெளியிட்டிருந்தார்.

மொத்தத்தில், இனப்பிரச்சினை தெற்கு அரசியல்வாதிகளாலேயே, எவ்வாறு விதைக்கப்பட்டு, நாட்டைச் சீரழித்தது என்பதை அவர் பூடகமாக எடுத்துரைத்தார் எனக் கொள்ளலாம்.

மறுவளமாக நோக்கின், இனப்பிரச்சினையைக் கருவாகக் கொண்டே, தீவிரவாதம், போர் ஆகியவை முகிழ்த்து மொட்டவிழ்ந்தன என்பதை, பிரதமர் சூசகமாக எடுத்து உரைத்தார் எனலாம்.

இனிமேல், அவரும் புதிய அரசும், நோய் நாடி அதன் குணம் நாடி மருத்துவம் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு இப்போதைய அரசினுடையதே. அதற்கான வல்லமையும், இராஜதந்திரமும் அரசுக்கு எப்போது கைவரப் போகிறது?

படையினர் மட்டுமன்றி, அரச நிர்வாகிகள் மற்றும் அரசின் ஆதரவாளர்களில் மிகப்பலரும் தமக்குக் கைவந்த, உள்ளூர உறைந்துள்ள இனவாதத்தை தமது மனங்களில் இருந்து நீக்குவதை விரும்பவில்லை. நாளாந்தம் ஊடகங்களில் வெளியாகும் கருத்துக்கள், தமிழ் மக்களுக்கு இனிமேல் என்ன உரிமைகள் தேவை என்ற வினாக்களாகவே உயர்ந்து எழுந்து நிற்கின்றன.

உடனடி விவகாரங்களாகச் சூடு பிடித்துள்ள கைதிகளின் விடுதலை, தமிழ் மக்களை அவர்களது சொந்த மண்ணில்-- பிரதேசங்களில்-- மீளக் குடியமர்த்துவது, இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட அவர்களது வாழ்விடங்களையும், விவசாய, கடற்றொழில் பிரதேசங்களையும் மீள அவர்களிடம் கையளிப்பது என்பவற்றை அரசு உள்ளார்த்தமாக விரும்பாமல் "பிகு" பண்ணும் போக்கை நிறுத்த வேண்டும். அவை குறித்து வெறும் வாய்ச் சவடால்களை அள்ளி வீசாமல், பெறுமதியான செயல்கள் மேல் எழ வேண்டும். எதிர்பார்க்கலாமா?

# குற்றங்களைத் துலக்குவதில் அரசுக்கு உண்மையான அக்கறை உண்டா?

■ சேரலாதன்

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கொலைகள் மற்றும் காணாமற் போகச் செய்யப்பட்டமை தொடர்பான தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

கடந்த ஆட்சியின்போது நடைமுறையில் இருந்த சட்டங்கள் படையினருக்கும், பொலிஸாருக்கும் எல்லையில்லாத அதிகாரத்தை வழங்கியிருந்தன. எவரையும் கைது செய்வதற்கும், விசாரணை எதுவுமின்றித் தடுத்து வைப்பதற்கும் இத்தகைய சட்டங்கள் வாயிலாக அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட தரப்பினர் மேலிடத்தில் உள்ளவர்களைத் திருப்திப்படுத்துவதையே தமது பிரதான நோக்கமாகக் கொண்டு நீதிக்குப் புறம்பாக இயங்கினர்.

இதனால் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டவர்களின் கதி தொடர்பாகத் தெரிந்து கொள்வதற்குக்கூட அவர்களது உறவினர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. கைது செய்யப்பட்டவர்களுக்கு என்ன ஆனதோ? என்ற ஏக்கத்துடன் உறவுகள் ஆண்டுக்கணக்காக அலைந்து திரிந்ததைக் காண முடிந்தது.

மகிந்த தோர்தலில் தோற்கடிக்கப்பட்டு ஆட்சிமாற்றம் ஏற்பட்டதன் பின்னர் கடந்த ஆட்சியின் அலங்கோலங்கள் தொடர்பான பல தகவல்கள் வெளிக்கிளம்பி நெஞ்சை உறைய வைக்கின்றன. இதில் தமிழர்கள் மட்டுமல்லாது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிய வருகின்றது.




கடத்தப்பட்டுப் பின்னர் காணாமற்போன பிரபல ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் இறுதி முடிவு தொடர்பாக அண்மைக் காலமாகத் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இறுதியாகக் கிடைத்த தகவலின் பிரகாரம் அவர் கொலை செய்யப்பட்ட பின்னர், அவரது உடல் கடலில் வீசப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

எக்னெலிகொட காணாமற்போகச் செய்யப்பட்ட விவகாரத்தில் புலிகள் இயக்கத்திலிருந்து விலகி அரசின் செல்லப்பிள்ளைகளாகச் செயற்பட்ட சிலருக்கும் முக்கிய தொடர்பு இருந்துள்ளமை விசாரணைகள் மூலமாகத் தெரியவந்துள்ளது.

மேலும், மகிந்த அரசு தனது சட்டவிரோதச் செயற்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு தமிழ் ஒட்டுக் குழுக்களின் உதவியை நாடியமையும் தெளிவாகத் தெரிகின்றது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரின் கொலைகளிலும் தமிழர்கள் சிலர் தொடர்பு கொண்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில்தான் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலையுடன் தொடர்பு கொண்டிருந்ததாகச் சந்தேகத்தின் பேரில் பிள்ளையானும் அவரது சகாக்கள் சிலரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரான பிள்ளையான். முன்னாள் விடுதலைப் புலிப் போராளி என்பதும், பின்னர் அந்த இயக்கத்திலிருந்து விலகிச் சென்று மகிந்தவின் விசுவாசத்துக்கு உரியவராக இருந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.



இதே பிள்ளையான் தான் தற்போதைய ஜனாதிபதியைக் கொலை செய்வதற்கு மகிந்த ராஜபக்ச தம்மிடம் கோரிக்கை விடுத்தார் எனவும், ஆனால் தம்மால் அதைச் சரிவர நிறைவேற்ற முடிய வில்லை என்றும் தெரிவித்தார் எனப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாள்கள் செல்லச்செல்ல இன்னமும் ஏராளமான மர்மங்கள் வெளிவரப் போகின்றன என்பதற்கு இதுவே போதுமானது.

முன்னாள் போராளிகள் சிலரையும், புலனாய்வாளர்களையும் ஒருங்கிணைத்து சட்டவிரோதமான செயல்களில் முன்னைய அரசு ஈடுபட்டமை தற்போது உறுதியாகத் தெரிய வந்துள்ளதால், அரசு இனியும் தாமதிக்காது குற்றவாளிகளைக் கைது செய்து நீதியின் முன்னால் நிறுத்த வேண்டும்.

இருந்தபோதிலும், குற்றவாளிகளைக் கைது செய்வதில் தற்போதைய அரசு மெத்தனம் காட்டி வருவதாக பொதுவான கருத்து ஒன்று மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது. இதில் ஓரளவு உண்மையும் இல்லாமல் இல்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது உறவினர்கள், சகாக்கள் மீது ஏராளமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள போதிலும், இதுவரை எவர்தானும் நீதியின் முன் நிறுத்தப்பட்டார்கள் என்றோ, தண்டிக்கப்பட்டார்கள் என்றோ தெரியவரவில்லை. மாறாக குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள் அரசுக்கு சவால் விடுகின்ற நிலையே இங்கு காணப்படுகின்றது. அரசின் பலவீனத்தை அறிந்தவர்கள் இவ்வாறுதான் நடந்து கொள்வார்கள்.

இதேவேளை- இறுதிப்போரின்போது மக்களுக்கு குறைந்த அளவு இழப்புக்களே ஏற்பட்டதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூரில் வைத்துக் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

**ஜனாதிபதியைக் கொலை செய்வதற்கு மகிந்த ராஜபக்ச தம்மிடம் கோரிக்கை விடுத்ததார் எனவும், ஆனால் தம்மால் அதைச் சரிவர நிறை வேற்ற முடியவில்லை.**

உண்மையான இழப்புக்கள் குறித்த தகவல்களை இவர் எங்கு பெற்றுக் கொண்டார் என்பது தெரியவில்லை. ஆனால், முன்னைய அரசின் கருத்துக்களையே இவர் பிரதிபலிக்கின்றார். மகிந்த அரசைக் காப்பாற்ற முயலுகின்றார்.

இனம் இனத்தைத்தான் சார்ந்து நிற்கும் என்பதற்கு அமைவாக ரணிலின் கருத்துக்களை எடுத்துக் கொள்ளலாம் போலுள்ளது. இந்த நிலையில் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளிலும், குற்றம் புரிந்தவர்களைக் காப்பாற்றுவதிலும், மைத்திரி- ரணில் அரசு முனைப்புக் காட்டி வருகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் தானே என்ற மனநிலையே இதற்கான பிரதான காரணமாகும். இந்த நிலையில் இந்த அரசு நீதியை நிலைநாட்டும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் 'உதயன்' பத்திரிகைக் காரியாலயம் கடந்த ஆட்சிக் காலத்தில் பல தடவைகள் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டது. இதில் கடமையில் இருந்த பணியாளர்கள் சிலர் உயிரிழந்துள்ளனர். இதைப்போன்று பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் சிலரும் கொல்லப்பட்டனர். அச்சு இயந்திரம் உட்படப் பெறுமதியான உபகரணங்களும் சேதமாக்கப்பட்டன. இதைவிடப் பத்திரிகையின் முக்கிய பொறுப்பில் இருந்தவர்கள் மீதும் கொலைவெறித் தாக்குதல்களும் நிகழ்த்தப்பட்டன. தினக்குரல், வலம்புரிப் பத்திரிகைகளின் ஊழியர்களும் தாக்கப்பட்டனர். ஆனால், இவை தொடர்பாக இதுவரை விசாரணைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. அதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் இல்லை. இதுவொரு திட்டமிடப்பட்ட அநீதி. தற்போது ஆட்சியில் இருக்கும் அரசு இது தொடர்பாகவும் விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளைக் கைது செய்து தண்டனை வழங்க வேண்டும். ஆனால் அவையெதுவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

நல்லாட்சி என்று கூறிக்கொள்ளும் இந்த அரசு கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் எதுவாக இருந்தாலும், அவை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதைவிடுத்து மெத்தனமாகச் செயற்படுமாயின் நிலைமை மகிந்த தரப்பினருக்குச் சாதகமாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி உணர்வோம்!

பிரேம்

முன்னிருட்டு நேரம். மணி 6.30 இருக்கும். கல்வியங்காட்டில் இருக்கும் வீட்டுக்கு வந்திருந்த மாமாவின் மகள், மானிப்பாய்க்குத் திரும்பிப் போவதற்குத் துணை வேண்டும் என்றார். இருட்டிக் கொண்டிருந்ததால் தனியே போவதற்குப் பயம். அப்போதுதான் மைதானத்தில் இருந்து வீடு திரும்பியிருந்த என்னைத் துணைக்குப் போய் வா என்றார் அம்மா.

மச்சாளின் பழைய லுமாலா பெண்கள் துவிச்சக்கர வண்டி, பாரம் தாங்காமல் கிறீச்சிட்டபடியே வந்தது. கூடவே பெரிய லுமாலா வண்டியில் நுனிக் காலால் மிதித்தபடி நானும் கூடவே கதையாடிக் கொண்டிருந்தேன். போகும் போது பிரச்சினையில்லை. வரும்போதுதான் இருட்டு மட்டும் துணைக்கு வரும் என்று நினைக் கையில் ஏதோ மாதிரி இருந்தது. அந்தக்கவலைதேவையே இல்லை என்பது அப்போது தெரிந்திருக்கவில்லை.

கல்வியங்காட்டுச் சந்தியால் ஆடிய பாதம் வீதிக்குத் திரும்பிய வண்டிகள் பலாலி வீதியில் மிதந்து கந்தர்மடம் நோக்கிப் போயின. பேபி ஸ்ரூடியோவையொட்டிப் போகும் ஒழுங்கைக்குள் திரும்பிய இரு துவிகளும் இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை வழியாக தொடருந்துப் பாதையைக் கடந்து அரசடி வீதியில் ஏறியபோது அதிர்ச்சி முகத்தில் அறைந்தது. சாரை சாரையாகச் சனங்கள். நீண்ட நெடுந்தூரத்துக்கு, வீதியின் வலது பக்கமாக, துவிச்சக்கர வண்டிகளில் மூடை முடிச்சுக்களுடன். ஓட்டமும் நடையும் உருட்டலுமாக. பூவும் பிஞ்சுகளும் சாகும் வயதில் வேரும் என, எல்லாமுமாக பரபரப்பான பதற்றமான வேகம்.

நினைவடுக்குகள் பின்னோக்கிப் பறந்தன. சில மாதங்களுக்கு முன்தான் முன்னேறிப் பாய்தல் என்ற இராணுவ நடவடிக்கையின்போது மக்கள் இப்படிச் சாரி சாரியாக இடம் பெயர்ந்து வந்ததைப் பார்த்திருக்கிறேன். வட்டுக்கோட்டைப் பக்கமிருந்து இதேபோன்று மதியத்தைத் தாண்டிய பொழுதில் மக்கள் கூட்டம் கூட்டமாக இடம்பெயர்ந்தார்கள். அதற்கு முன்பாக எறிகணைகளின் பெரும் வெடிப்பொலிகளைக் காதுகளில் கேட்க முடிந்திருந்தது. இடம் பெயர்வு வரும் என்பதையும் எதிர் நோக்கக் கூடியதாக இருந்தது.

இது அப்படியில்லை. மின்னாமல் முழங்காமல், ஒற்றை வெடியோசையோ ஹெலிச் சூடோ இல்லாமல். எப்படி நிகழ்ந்ததென்றே தெரியாமல் இத்தனை ஆயிரம் மக்கள் வீதிகளில். மச்சாள் பரபரத்தார். வந்து கொண்டே இருந்தவர்களிடம் நின்று நிதானித்து கேள்வி கேட்க அவர் விட்டாரில்லை. மூச்சிரைக்க அவர் வேக வேகமாக வண்டியை மிதிப்பதைப் பார்க்கையில் பாவமாகவும் இருந்தது. விடலைப் பெடியான எனக்கு புதினம் அறிவதற்குப் புத்தி பரபரத்தது.

ஓடிக்கொண்டே, வீதியில் எதிரே ஓரத்தில் வருபவர்களை அவ்வப்போது நெருங்கி "எங்கேயிருந்து வாறீங்கள்?", "ஏன் வெளிக்கிட்டனீங்கள்?" என்று கேள்விக் கொக்கிகளைப் போட்டுப் போட்டு விலகிச் சென்றேன். சில நேரங்களில் பதில் கிடைத்தது. பல நேரங்களில் என் கேள்வியை அவர்கள் செரிமானிப்பதற்குள் நான் அவர்களைக் கடந்திருந்தேன். "மானிப்பாய்", "தெல்லிப்பழை", "சங்கானை", "வட்டுக்கோட்டை", "சண்டிலிப்பாய்" என்று ஏகப்பட்ட ஊர்களின் பெயர்கள் பதிலில் ஒலித்தன. "பெடியள் வெளிக்கிடச் சொல்லிட்டாங்கள்" என்ற ஏக வாக்கியம் மட்டும் எல்லோரிடமிருந்தும் கிடைத்தது.

மானிப்பாய் என்ற பெயர் கேட்ட பிறகு மச்சாளின் நிலை இன்னும் பரிதாபத்துக்குரியதாக இருந்தது. பிள்ளைகள் புருசன் பற்றியெல்லாம் அவர் கவலைப்பட ஆரம்பித்தார். இந்த நேரத்தில் வீட்டிலிருக்காமல் தான் வெளிக்கிட்டது பிழை என்று புலம்பத் தொடங்கினார். அவரைச் சமாதானப்படுத்தியபடியே வீடு வரைக்கும் போய்ச் சேரும்வரை வீதியின் எதிர்க்கரை முழுவதும் சனங்கள் வந்தபடியே இருந்தார்கள்.



இருள இருள ஆள்கள் மறைந்து கொண்டிருந்தாலும் ஒலிகள் காதுகளை நிறைத்தன. வீட்டு வாயிலில் இறங்கியதுதான் தாமதம் "நீ ஓடு. நீ ஓடு. அம்மா தேடிக் கொண்டிருக்கப் போறா" என்று விரட்டினார் மச்சாள். "அது முதல் மாதிரி. இந்தப் பக்கம்தான் ஆமி வெளிக்கிட்டிருப்பான். அங்க ஒரு பிரச்சினையும் இருக்காது. நீங்கள் பார்த்து நடவுங்கோ" என்று அவருக்கு ஆறுதல் சொல்லிவிட்டுப் புறப்பட்ட நான் எங்கள் வீட்டுவாயிலை எட்டியபோது, மூடை முடிச்சுகள், சூட்கேசுகள் கட்டப்பட்டுத் தயாராய் நின்ற துவிச்சக்கர வண்டிகள்தான் வரவேற்றன. அரைகுறையாய் அள்ளிச் சொருகிய சேலையுடன் அம்மா பரபரத்துக் கொண்டிருந்தார்.

அண்ணா இன்னும் வரவில்லை. அவருக்காகத்தான் பதற்றத்துடனான காத்திருப்பு. தயாராய் இருங்கோ வாறன் என்று சொல்லிப் போட்டுப் போனவர் இன்னும் வரவில்லை. அம்மா மீண்டும் மீண்டும் அதையே சொல்லிப் பதற்றப்பட்டார். பதகளிப்புப் படுவது அவர் இயல்பு. இப்போது இன்னும்அதிகமாகப்பதகளிப்புப்பட்டார். "யாழ்ப்பாணம் மொத்தமும் வெளிக்கிடுறதெண்டால் என்னென்டு" என்பதே அவரது ஒட்டுமொத்தப் பதற்றத்துக்கும் காரணம். அதைக் கற்பனை செய்யக்கூட முடியாதவராக இருந்தார்.

நிலமையின் பாரதூரத்தை, இடம் பெயர்வின் அவலத்தை துயரத்தை மாம்பழம்சந்தியில் முதற்றடவையாக நுகரும் வரையில் அம்மாவின் பதற்றம், பரபரப்பு, பதகளிப்பு எதுவும் என்னைப் பாதித்திருக்கவில்லை. அப்பா கொழும்பில் இருந்ததால் அவரது மிதி வண்டியையும் சேர்த்து இழுக்க வேண்டும் என்பது எனக்கான பணி. அப்போது கோடிப் பெறுமதியான சொத்து அது. விட்டுவிட்டுப் போக முடியாது.

ஒற்றை வண்டியில் இருந்தபடி இன்னொரு வண்டியை வலது கையில் ஓட்டிக்கொண்டே ஊர்வலம் போவது எனக்கொன்றும் புதிதில்லை. எனவே அந்தப் பணி எனக்கொன்றும் சவாலானதில்லை. அண்ணா அம்மா வைத்தனதுவண்டியில்ஏற்றிக்கொண்டார். அக்காள் கூடவே வந்தாள். வீதியில் கூட்டம் அதிகம் இருந்தால் இருட்டுக்குள் தற்செயலாக ஆளாளுக்குப் பிரிந்தாலும் அரியாலையில் இருக்கும் தனது நண்பரின் வீட்டில் எல்லோரும் சந்திக்கலாம் என்று அண்ணா முன்கூட்டியே திட்டம் தந்திருந்தார்.

நம்பிக்கையுடன் முன்னேறிய பயணம் ஐந்து நிமிடங்களில் மாம்பழம் சந்தியில் தடுக்கி நின்றது. முன்னால் மொத்த வீதியும் சனக் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. வழி எது, வீதி எது, தலை எது, மிதி வண்டி எது என்று தெரியாத கூட்டம். காதைக் கிழிக்கும் இரைச்சல். அது இரைச்சல் மட்டுமேயல்ல அபய ஓலம். நெஞ்சம் திக்கென்றது. நிலமையின் பாரதூரத்தை முதல் தடவையாக நுகர முடிந்தது. பயம் உச்சந்தலையில் உறைத்தது. இந்தக் கூட்டத்திற்குள்ளால் எப்படிப் போவது? ஏற்கனவே அண்ணாவைக் காணவில்லை. இனி அக்காவைத் தவறவிட்டுவிடக்கூடாதே என்கிற பதகளிப்பு.

ஒற்றை அடியை எடுத்து வைக்க முடியாத நெரிசல். இதற்கு நடுவே இரண்டு மிதி வண்டிகள் வேறு. அருகிலேயே அக்காளும் இருந்தாகவேண்டும். அடி அடியாக ஊர்ந்து ஊர்ந்து ஏ-9 பாதையில் ஏறுவதற்குள் நள்ளிரவு தாண்டியிருந்தது. அந்த வீதியில் மனிதத் தலைகள் தவிர வேறு எதுவும் இல்லை. இடையிடையே பார ஊர்திகளும் வாகனங்களும் நின்று கொண்டிருந்தன. மனிதக் கூட்டம் நகர்வதற்கான அடையாளமே இல்லாதிருந்தது.

இப்போது எறிகணை விழுந்தால், இப்போது ஹெலி வந்து அடித்தால், இப்போது பொம்பர் குண்டு வீசினால், நினைப்புகளே சாவின் வலியைத் தேடித் தேடிப் போயின. ஒற்றை நபரே நடந்து போக முடியாத நெரிசலுக்குள்ளே இரண்டாவது மிதி வண்டி வேறா என்று எனக்கும் ஏகப்பட்ட ஏச்சுக்கள். அவல ஓலங்களுக்கு மத்தியில் இந்தக் கோபாவேசத் திட்டல்களை எப்படி எடுத்துக்கொள்வது என்றுகூட எனக்குத் தெரியவில்லை. "தூக்கி எறி" என்றார்கள். ஆனால் என்ன செய்ய? நான் கையை விட்டாலும் அந்த மிதி வண்டி தனித்தே நிற்கிறதே! அது விழவே இடமில்லை என்னும்போது தூக்கி எங்கே எறிவது. பிறகு கொலைக் குற்றத்துக்கு யார் பதில் சொல்வது. விதியே என்று அந்த மிதி வண்டி கூடவே நகர்வதைத் தவிர வேறு வழியில்லை.

வண்டி கூடவே வந்தாலும் அக்காள் எங்கிருக்கிறாள் என்பதை கண்டறிவது தான் பெரும் பிரச்சினை. கத்தல், ஏச்சு, திட்டு, ஓலம், அழுகை, சினத்தல், ஒப்பாரி, குழந்தைகளின் கீச்சிடல் எல்லாவற்றையும் தாண்டி "அக்கா" என்கிற என் குரலைப் பின்தொடர்ந்து அவள் எப்படி வந்தாள் என்பது அவளுக்கே வெளிச்சம்.

சாதாரணமாக மாம்பழம் சந்தியிலிருந்து அதிகம் போனால் 10 நிமிடங்களில் போய்விடக் கூடிய தூரத்தில் இருந்த அண்ணாவின் நண்பரின் வீட்டை அடைவதற்குள் விடிகாலை 2 மணியாகி இருந்தது எங்களுக்கு. நல்லவேளை கொஞ்சம் முன்னராகவே அம்மாவும் அண்ணாவும் அங்கு வந்து சேர்ந்திருந்தார்கள். நிம்மதிப் பெருமூச்சு விட முடிந்தது. இந்தக் கூட்டம் வீதியைக் கடக்கும் வரையில் இனிப் புறப்படுவதில்லை என்று முடிவாகியது..

காலை விடிந்தபோது ஏ-9 வீதி காணாமற்போயிருந்தது. மனிதத் தலைகளால் அமைக்கப்பட்ட கறுப்பும் பழுப்புமான வீதி மட்டுமே அங்கே ஊர்ந்துகொண்டிருந்தது. வாகனங்கள், பாரஊர்திகள் எல்லாம் உடைபட்ட பொருள்களாய் ஓரங்களில் ஒதுக்கப்பட்டிருந்தன.

அரையிரவு அவலத்துடன் எங்கள் துயரத்தின் நுகர்வை நாங்கள் நிறுத்திக் கொண்டாலும், சுமார் 5 லட்சம் மக்களுக்கு அந்த உயிர் வலி அத்தனை சுலபமாக இருக்கவில்லை. இரண்டு முழு நாள்கள் சென்றன ஏ-9 வீதியில் தாரைக் காண்பதற்கு. அதற்கிடையில் ஒவ்வொரு யாழ்ப்பாணத்தவரும் பட்ட அவலங்களும் அவஸ்தைகளும் வார்த்தைகளில் மட்டுமே வடிக்க முடியாதவை. சொல்வதற்கு ஆயிரம் ஆயிரம் வலிகள் மனங்களின் ஓரத்தில் ஒளிந்தபடியே தான் இருக்கின்றன.

இன்றுபோலத்தான் அன்றும் மழை பெய்துகொண்டிருந்தது. குடைகளின் வழியே வழிந்து இறங்கிய தண்ணீர்தான் குடிப்பதற்கு வாய்த்தது பலருக்கு. இறந்து போன முதியவரை அங்கேயே விட்டு வந்த சோகம், குடும்பத்தைப் பிரிந்தவர்கள் சோகம், எங்கே போவது என்று தெரியாமல் வீதியோர மரங்களை வீடுகளாக்கிக் கொண்டவர்களின் சோகம் என்று ஏகப்பட்ட கதைகளை அடுத்த பத்து நாள்களில் தாங்கிக் கொண்ட மனங்கள் இறுகிப் போயின.

செம்மணி வெளியின் ஊடாக யாழ்ப்பாணம் முதல் சாவகச்சேரி கொடிகாமம் வரை நீண்ட அந்த இரவின் பேரணியில் அகப்படாமல் யாழ்ப்பாணத்தின் 99.9 வீதம் மக்கள் இருந்ததில்லை. "ஆமி வருகுதாம், பெடியள் வெளிக்கிடச் சொன்னாங்கள்" என்ற ஒற்றைச் சொல்லோடு புறப்பட்ட அந்த மக்கள் தங்கள் இருப்பிடம் திரும்புவதற்கு 6 மாதங்கள் சென்றன. அதற்குள் சிதைந்து போனவைகள் ஏராளம். பின்னர் வந்த நீண்ட நெடிந்த கொடும் துர்ப் பயணத்தின் துர்க் குறியாக யாழ்ப்பாணத்து இடம்பெயர் அன்று கட்டியங் கூறியது.

இந்தக் கட்டுரை அதன் ஒரு துளிதான். அனுபவிக்கப்பட்ட துயரங்களின், வலிகளின் ஆவணம் அல்ல. இந்த முதல் துளியிலிருந்து இளையவர்களே உங்கள் மனக் கண்களில் எஞ்சியதைக் கட்டமைத்துக் கொள்ளுங்கள். சொல்வதைவிட உணர்வதே சிறந்தது.

நடந்த துயரை வெளிப்படுத்தி மிக அற்புதமான பாடல் ஒன்றைக் கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதியிருப் பார். மனதை உருக்கும் இசையோடு திருமலைச் சந்திரன் அதனைப் பாடி யிருப்பார். அதன் வரிகள் இங்கே...

**பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது**
**போகுமிடம் தெரியாமல் - இங்கு**
**சாகும் வயதினில் வேரும் நடக்குதே**
**தாங்குமிடம் தெரியாமல்**

**கூடு கலைந்திட்ட குருவிகள் - இடம்**
**மாறி நடக்கின்ற அருவிகள்.**

**ஒற்றை வரம்பினில் ஓடும்**
**இவர்களின் ஊரில் புகுந்தது-ஆமி**
**ஒரு குற்றம் செய்யாதவர் முற்றத்தில்**
**ஆயிரம் குண்டுகள் விழுதே -சாமி**

**சோகத்தின் கோடுகள் முகத்தில் -இந்த**
**சொந்தங்கள் சேருமா நிலத்தில்....**

**கூடி மகிழ்ந்திட்ட கோயில்**
**வயல்வெளி யாவும் இவரிழந்தாரே நேற்று**
**பாடி மகிழ்ந்திட்ட ஊரைத் துறந்துமே**
**போகும் திசை அறியாரே....**

**நெஞ்சில் வழிவதோ துயரம் வழி**
**நீளும் திசை இவர் பயணம்.....**

**தாயில் மடியினில் ஆசையுடன்**
**தலை சாய்த்து உறங்கிய நேரம்**
**வந்த பேய்கள் கொளுத்திய**
**தீயில் எரிந்தவர் போகும் வழியெலாம் ஈரம்**

**மாடுகள் கூடவா அகதி தமிழ்**
**மண்ணிலே ஏனிந்த சகதி**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 3 | | 7 | | 1 | | |
| 6 | | | | | 9 | | | |
| | 8 | 1 | | | | | | |
| 2 | | | | 1 | | | 4 | |
| | | | 7 | 5 | 4 | | | |
| | 7 | | | 8 | | | | 9 |
| | | | | | | 8 | 7 | |
| | | | 5 | | | | | 2 |
| | | 9 | | 3 | | 4 | | 5 |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 8 | 6 | 9 | 5 | 1 | 7 | 2 |
| 1 | 6 | 9 | 2 | 8 | 7 | 5 | 3 | 4 |
| 7 | 2 | 5 | 3 | 1 | 4 | 9 | 8 | 6 |
| 6 | 5 | 3 | 4 | 2 | 1 | 7 | 9 | 8 |
| 9 | 1 | 4 | 7 | 5 | 8 | 6 | 2 | 3 |
| 2 | 8 | 7 | 9 | 3 | 6 | 4 | 5 | 1 |
| 3 | 7 | 1 | 5 | 4 | 2 | 8 | 6 | 9 |
| 5 | 4 | 2 | 8 | 6 | 9 | 3 | 1 | 7 |
| 8 | 9 | 6 | 1 | 7 | 3 | 2 | 4 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### சிரத்தை உடையவன் வெற்றி பெறுவான்

உலகம் வேண்டுவது ஒழுக்கமே. கொழுந்து விட்டெரியும் அன்பும், தன்னலமில்லாத பண்பும் எவரிடம் இருக்கிறதோ அவரை இந்த மண்ணுலகமே வேண்டி நிற்கிறது.

எழுந்து நில்லுங்கள். தைரியமாயிருங்கள். பலமுடைய வராகுங்கள். உங்கள் மீதே முழுப்பொறுப்புக்களையும் சுமந்து கொண்டு வாழப் பழகுங்கள்.

சிரத்தைதான் எமக்குத் தேவை. மனிதனுக்கு மனிதன் வேறுபடுவதற்குக் காரணமே இந்தச் சிரத்தை தான். சிரத்தை உடையவன் வெற்றி பெறுகிறான். சிரத்தை இல்லாதவன் தாழ்ந்தவனாகிறான்.

# உடற்பலம் அளிக்கும் பயறு வகைகள்

*உடற்பலம் அளிக்கும் பயறு வகைகள் என்பது குறித்து நேற்றைய உதயனில் பார்த்தோம். அவை குறித்து இன்றைய பகுதியில் மேற்கொண்டும் பார்ப்போம்.*

பயறுகளும், தானியங்களும், பல மருத்துவக் குணங்களைக் கொண்டவை. பயறு வகைகளில் அமினோ அமிலங்களும் குறிப்பாக 'லைசின்' மிக அதிக அளவுகளில் காணப் படுகின்றன. ஆனால், தானியங்களில் 'லைசின்' குறைவாகவே உள்ளது. பயறு வகைகளில் அதிகமாக 'விற்றமின் 'பி' காம்ப்ளெக்ஸ்', 'ரிபோபிளேவின்' அதிகம் அடங்கியுள்ளன. பச்சைப் பயறு மற்றும் தட்டைப்பயற்றில் புரதச்சத்துக்கள் மிகுந்து காணப்படுகின்றன. பயறை அப்படியே பயன்படுத்துவதைவிட, முளை கட்ட வைத்துப் பயன்படுத்துவதன் மூலம் நல்ல பயன் கிடைக்கும். முளை கட்டிய பயற்றில் வாயுத்தன்மையை ஏற்படுத்தும் தன்மை கிடையாது. எளிதில் சமிபாடடையும். பயறுகள் முளைவிடும் தறுவாயில் 'அஸ் கார்பிக்' அமிலமான 'விற்ற மின்–சி' அதிகம் காணப் படுகின்றது.

முளைகட்டிய பயறுகளில் பிற விற்றமின்களும் கூடுதலாகக் காணப் படுகின்றன. இவை முளை வளர வளரக் கூடிக் கொண்டே போகிறது. முளைகட்டிய பயிற்றை அப்படியே பச்சையாகவே சாப்பிடலாம். பச்சை வாசனை பிடிக்காதவர்கள், ஆவியில் 5 நிமிடம் வேக வைத்துப் பின்னர், வெல்லம் அல்லது சர்க்கரை சேர்த்தும் சாப்பிடலாம். வெந்த பயிற்றைக் கூட்டு, பொரியல் ஆக்கியும் உண்ணலாம்.

பயற்றம்பருப்பை வேக வைத்த தண்ணீரை உப்பும், காரமும் சேர்த்து, நோயுற்றபின் மெலிந்து பலக்குறையுள்ளவர்கள் தொடர்ந்து சில வாரங்கள் சாப்பிட்டால், களைப்பு நீங்கி, உடல் பலம் பெறும். குறிப்பாக வளரும் குழந்தைகளுக்கு பயிற்றால் செய்யப்படும் உணவு வகைகள், அபரி மிதமான பலத்தைக் கொடுக்கும் என்பது நிச்சயமானது.




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 600 | 800 | 700 | 400 |
| நண்டு | 300 | 400 | 200 | 300 | 300 | 400 |
| கணவாய் | 500 | 600 | 400 | 600 | 600 | – |
| பாரை | 400 | 400 | 350 | 500 | 400 | 300 |
| சுறா | 450 | 500 | 350 | 650 | 500 | 400 |
| சீலா | 250 | 400 | 300 | 400 | 300 | 250 |
| விளை | 450 | 400 | 260 | 350 | 300 | 260 |
| முரல் | 200 | 300 | 250 | 300 | 250 | – |
| கும்பிளா | 200 | 300 | 200 | 350 | 300 | 200 |
| கிழாக்கன் | 350 | 800 | – | 500 | – | – |
| ஓரா | 300 | 300 | 220 | 500 | – | 200 |
| திரளி | 150 | 200 | 150 | 300 | 200 | – |
| நகரை | 150 | 200 | 100 | 300 | – | 150 |
| சூடை | 150 | 100 | 50 | 120 | 100 | – |
| ஒட்டி | 200 | 150 | 180 | 300 | 250 | 150 |
| திருக்கை | 150 | 300 | 150 | 300 | – | 100 |
| பாலை | 300 | 200 | – | 400 | – | – |
| வாளை | 100 | 100 | 150 | 300 | 200 | 100 |
| கொய் | 100 | 100 | 40 | 120 | 50 | |
| மதனம் | 150 | 200 | 130 | 250 | 200 | 100 |

### தொப்பையைக் குறைக்கும் அன்னாசிப் பழம்

இயற்கை எமக்கு அளித்துள்ள கொடைகளில் முக்கியமான பழங்களில் ஒன்று அன்னாசிப்பழம். அன்னாசியில், மக்னீசிய சத்துக்கள் நிறைய உள்ளன என்பது, சமீபத்திய ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அன்னாசி பெரும்பாலும் மித வெப்பமான பகுதிகளில் பயிரிடப் படுகிறது. புரதத்தைச் சமிபாடடையச்செய்யக் கூடிய 'புரோ மலைன்' என்ற 'என் சைம்' இதில் அதிகம் உள்ளன. இது குருதி உறையாமல் பாதுகாக்கிறது. 'தையாமின்' மற்றும் விற்றமின் 'சி' சத்தும் அன்னாசியில் அதிகம் உள்ளது. அன்னாசிப் பழம் சாப்பிடுவதால், சளித் தொல்லை, காய்ச்சல் உள்ளிட்டவற்றில் இருந்து பாதுகாப்புக் கிடைக்கும்.

(தொடரும்)

## நாளை

**ஐப்பசி-14**
**சனிக்கிழமை**
**31.10.2015**

திதி:
சதுர்த்தி மு.ப. 11.24
நட்சத்திரம் :
மிருகசீரிடம் மு.இ.9.18
[illegible]
9.03–4.33 வரை
இராகு காலம்:
9.03–10.33வரை




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கண்ணாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 50 | 60 | 60 | 40 | 60 | 100 |
| கத்தரி | 100 | 100 | 100 | 100 | 80 | 80 | 80 | 45–50 |
| கரட் | 70 | 70 | 60–120 | 80 | 100 | 100 | 100 | 120 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 40 | 60 | 50 | 30 |
| பயிற்றை | 90 | 100 | 120 | 100 | 140 | 120 | 100 | 80–90 |
| பாகல் | 180 | 150 | 200 | 180 | 180 | 200 | 110 | 170 |
| கருணைக்கிழங்கு | 70 | 70 | 80 | 80 | 60 | 60 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 130 | 120 | 140 | 130 | 180 | 120 | 100–120 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 120 | 140 | 120 | 200 | 100 | 125 |
| பூசணி | 40 | 50 | 60 | 50 | 40 | 80 | 50 | 40–50 |
| தக்காளி | 100 | 80 | 100 | 120 | 100 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 50 | 60–70 | 80 | 60 | 40 |
| கீரை | 30 | 50 | 40 | 10 | 30 | 40 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 | 25 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 300 | 400 | 350 | 360 | 300 | 250 | 350 |
| புடோல் | 60 | 70 | 80 | 60 | 80 | 120 | 60 | 70 |
| கோவா | 100 | 100 | 80 | 80 | 100 | 140 | 100 | 60 |
| வெண்டி | 120 | 70 | 100 | 100 | 100 | 80 | 50 | 40 |
| போஞ்சி | 160 | 140 | 180 | 140 | 160 | 200 | 160 | 150 |
| லீக்ஸ் | 40 | 70 | 100 | 80 | 100 | 120 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 60 | 60 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 120 | 130 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 350 | 350–360 | 600 | 250 | 300 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 10 | 40 | 20 | 15 | 8–10 |
| [illegible] | 140 | 130 | 120 | 160 | 220 | 200 | 120 | 160–170 |
| [illegible] | – | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 150 | 100 | 120 | 80 | 120–140 | 200 | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடி சோதிடம்



*(மேடத்தில் நீச்சம் பெற்ற சனி, பரிவர்த்தனை காரணமாக தனது ஆட்சி மூல வீடான கும்பத்துக்கு வரும் வேளை ஏற்படத்தக்க பலன் குறித்து இன்றைய நாடி சோதிடம் பகுதியில் பார்ப்போம்.)*

அங்கு இயற்கை சுபன் குருவுடன் சேர்வதால், முதலில் இவர் சாதாரணத் தொழில் செய்து, பிறகு பணி மாற்றம் ஏற்பட்டு, பணியில் முன்னேற்றம் காண்பார். அடுத்து உச்ச சந்திரன் பரிவர்த்தனை காரணமாகத் தனது ஆட்சி வீடான கடகத்துக்கு வந்து கொடிய பகைக்கிரகமான ராகுவுடன் சேர்கிறார். சந்திரன் தாயாருக்குக் காரகன். அதனால் தாய் நோய்வாய்ப்பட நேரும். ஒரு கட்டத்தில் செவ்வாய், சனி சிங்கத்தில் சூரியன் உச்சம் பெற்று, மேடத்தில் அதேசமயம் செவ்வாய், சூரியன் பரிவர்த்தனை காரணமாக சூரியன் உச்ச பலத்தை இழந்து ஆட்சி பலம் பெறுகிறார். மேலும் சூரியனுடன் சனி அமர்ந்து, சூரியனுக்குப் பாதிப்புக் கொடுக்கிறார். ஆகவே, சாதகரின் தகப்பனார், சாதகர் பிறந்தபோது உயர்நிலையில் இருந்திருப்பார். இந்தக் குழந்தை பிறந்த பிறகு பல கஷ்டங்களையும் அனுபவிக்கவேண்டும். மேலும் இவரது சிறிய தந்தையும் ஆரம்பத்தில் மிகவும் கஷ்டப்பட்டே உன்னத நிலையை அடைவார்.

ஒரு நீச்சம் பெற்ற கிரகம் பரிவர்த்தனை பெறுவதால் அது தனது ஆட்சி வீட்டுக்குச் செல்லும். அதனால் ஐம்பது சதவிகிதமாவது சுபத்தன்மை பெறும்.

ஒரு சாதகத்தில் குரு நீச்சமடைந்து, சனியுடன் பரிவர்த்தனை ஆகிறது. சந்திரன் நீச்சமடைந்து, செவ்வாயுடன் பரிவர்த்தனை ஆகிறது. சூரியன் நீச்சமடைந்து, சுக்கிரனுடன் பரிவர்த்தனை ஆகிறது. இதில் சந்திரனும், செவ்வாயும் நீச்ச பரிவர்த்தனை பெறுகின்றனர். இந்த விதமாக நீச்ச கிரகங்கள், பரிவர்த்தனை பெறும்போது, ஓரளவு சுப பலனைப் பெற்று விடுகின்றனர். காரணம், அவர்கள் இருவரும் தமது ஆட்சி வீட்டின் பலத்தைப் பெறுகின்றனர். அதேபோல், ஓர் உச்ச கிரகம் பரிவர்த்தனை காரணமாகத் தனது உச்ச பலத்தை இழப்பதுடன், பகைக் கிரகங்களின் சேர்க்கை பெற்று, தனது பலம் முழுவதையும் இழக்கிறார்.

ஒரு சக்கரத்தில் சனி உச்ச ராசியில் நிற்கிறார். சுக்கிரனுடன் பரிவர்த்தனை பெற்றுத் தனது ஆட்சி வீட்டுக்குச் செல்கிறார். அங்கு தனது பகைக் கிரகங்களான செவ்வாய் மற்றும் கேதுவுக்கு இடையில் அமர்ந்து தனது ஆட்சிப் பலத்தையும் இழக்கிறார். இந்த நிலை சாதகத்தில் இருந்தால் பலன் எவ்வாறு அமையும்? தொழில் காரகனாகிய சனி, ஓர் அந்தஸ்தான அதிகாரத்தோடு கூடிய ஒரு பணியில் இருக்கலாம். காரணம், சனி உச்சம் பெற்று, உடன் வேறு கிரகங்கள் இல்லாமையே. ஆனால் அவர் பணி செய்யும் இடம் அவரது ஊருக்கு மிகத் தொலைவில் இருக்கலாம். காரணம் சரராசி. எனவே மாறுதல் கேட்டு, சொந்த ஊருக்கு, அதாவது தனது ஆட்சி வீட்டுக்கு வருகிறார். அங்கே செவ்வாய் மற்றும் கேது இவர்களுக்கிடையில் சிக்கி, வேலையில் பல தொல்லைகளையும், சட்டச் சிக்கல்களையும் சந்திக்கவேண்டி ஏற்படும். அதனால் மனம் தளர்ந்துவிடுவார்.

**பரிவர்த்தனை நற்பலனையும் தரும்**

ஒரு சாதகத்தில் சனி, செவ்வாய் மற்றும் சந்திரன், சுக்கிரன் பரிவர்த்தனை பெறுகின்றார்கள். மேடத்தில் நீச்சம் பெற்ற சனி, பரிவர்த்தனை காரணமாகத்தனது ஆட்சிமூலத்துக்கான வீடான கும்பத்துக்கு வருகிறார்.

ராசிக் கட்டத்தில் சூரியன் மேடத்தில், செவ்வாய் சிங்கத்தில், சனி கன்னியில் என்று இருந்தால், சனியின் பாதிப்பு செவ்வாய் மற்றும் சூரியனுக்கு இல்லை எனக் கருதலாம். அப்படி இல்லாமல் சனி வக்கிரகதியில் இருந்தால் மேலே கூறிய பலன்களே கிடைக்கும். அடுத்து, ராசிக் கட்டத்தில் சூரியன் மேடத்தில், செவ்வாய் சிங்கத்தில், ராகு கன்னியில் அமர்கின்றனர். இந்த ராகுவாகப்பட்டவர், சூரியனுக்கும் செவ்வாய்க்கும் பகைக் கிரகம். ராகு எப்போதும் வக்கிரகதியில் நகர்வார். ஆக, மேலே சொன்ன பலன்களே நடக்கும் என்றாலும், செவ்வாய் என்ற சகோதரர்கள் அதிக பாதிப்பு அடைய மாட்டார்கள். அடுத்து ராசிக் கட்டத்தில் சூரியன் மேடத்தில் உச்சம், புதன் மேடத்தில், செவ்வாய் மிதுனத்தில் இருக்கின்றன. ஆரம்ப காலத்தில் இந்த சாதகரின் தகப்பனார் மிகுந்த அறிவுள்ளவர், சமுதாய அந்தஸ்தில் உள்ளவராக இருந்திருப்பார். செவ்வாய் பரிவர்த்தனை காரணமாக, அவர் தனது வாழ்க்கையில் முரட்டுத் தன்மையையும் பிடிவாத குணத்தையும் வளர்த்துக் கொள்வார். சகோதரன் செவ்வாய். இங்கு செவ்வாய், புதன் பரிவர்த்தனை, புதன் புத்திசாலித்தனத்துக்கும் வியாபாரத்துக்கும் காரகன். ஆகவே, சகோதரர் வீட்டை விட்டு வெளியேறி, புத்திசாலித்தனமாக வியாபாரம் செய்து முன்னேறுவார் எனக் கூறலாம். சாதகக் கட்டத்தில் சூரியன் மேடத்தில் உச்சம் பெற்றுத்தான் உள்ளார். ஆனால் உச்ச பலனைத் தரமுடியாது.

இதற்குக் காரணம், சூரியன் பரிவர்த்தனை காரணமாக தனது ஆட்சி வீட்டுக்குச் செல்கிறார். அதன் காரணமாக அங்கே அமர்ந்து உள்ள தனது பகைக் கிரகங்களான சனி மற்றும் ராகுவின் சேர்க்கைப் பெற்று பாதிப்பு அடைகிறார். இதற்கு பலன் கூறுவதானால் சூரியன் தகப்பனாரையும் செவ்வாய் சகோதரனையும் குறிக்கும். இவர் பிறந்த சமயத்தில், செவ்வாய் பகைக் கிரகங்களின் மத்தியில் இருப்பதால் இவரது மூத்த சகோதரர் மிகவும் கஷ்டமான நிலையில் இருப்பார். இவர் பிறந்த பிறகு பரிவர்த்தனை காரணமாக் இடமாற்றம் ஏற்பட்டு சிறிது சாதகநிலை ஏற்படும் எனக் கூறலாம். அதே சமயம், இவர் பிறந்த போது நல்ல நிலையில் இருந்த சூரியன், பரிவர்த்தனை காரணமாக, சிம்மத்துக்குத் தனது பகைவர்களுடன் சேர்வதால் சிறிது காலம் சிரமப்படுவார். குரு மேடத்துக்கும், சிங்கத்துக்கும் தனுசுவுக்கும் வரும் சமயத்தில் தகப்பனாருக்குப் பாதிப்பு ஏற்படும். ராசிக் கட்டத்தில் சூரியன் மற்றும் செவ்வாய் நட்புக் கிரகங்களுக்குக் கிழக்கு திசையில் அமைந்துள்ளன.

(தொடரும்)

# பெண்களின் இயல்பு பாதுகாக்கப்படல் வேண்டும்

*(பெண்கள் தங்களது வீட்டிலே தங்களுடைய பணிகளைச் செவ்வனே செய்வதில் தான் ஒரு ஆரோக்கியமான சமூகம் உருவாவது தங்கியுள்ளது என்ற கருத்தை நேற்றைய உதயனில் பார்த்தோம். அதன் தொடர்ச்சி கீழே தரப்படுகிறது.)*



**வி**திகள் இருப்பது போலவே விதிவிலக்குகள் இருப்பதும் ஒரு நிலைப்பாடு. ஆனால், பெரும்பாலானோரை மையமாகக் கொண்டே தீர்ப்புக்கள் அமையும். இதேபோல் ஒருசில ஆண்கள் சமையலறையில் வேலை செய்வதையே விரும்புகின்றனர். இதனை வைத்து அவ ருக்கு சமையலறையில் வேலை செய்ய இயலுமென்றால் ஏன் இவருக்கு அவ்வாறு செயற்பட முடியாது என்று ஏனைய ஆண்களிடம் கேட்க முடியாது. ஆண்மைக் குணமுடைய சில பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆண்களைப் போன்று செயற் படுவார்கள். அதேபோல் சில ஆண்களிடம் பெண்மைக் குணம் ஏற்படுவதை அவதானிக்கிறோம். இதனை விதியாக மாற்றி பெண்களாலும் ஆண்களுக்குச் சமமாக தொழில் செய்ய முடியும் எனக் கருதுவது தவறு. ஆண் அமைதி காணும் இடம்தான் பெண். பெண்ணுடைய அடிப்படையானதும் மிக முக்கியமானதுமான கடமை என்ன வென்றால், ஓர் ஆணுக்கு அமைதியைக் கொடுப்பதே. திருமணம் மற்றும் குடும்பக் கூட்டமைப்பின் பிரதான நோக்கம் ஓர் ஆண் ஒரு பெண்ணிடம் அமைதியை, நிம்மதியைப் பெறுவதாகும் என்பதே நிலைப்பாடு.

தொழிலுக்குச் சென்று களைப்படைந்து தனக்கு ஆறுதலைத் தருவது யாரென்ற ஏக்கத்தோடு வீடு திரும்பும் பெண்ணினால் எப்படி ஆணுக்கு அமைதியைக் கொடுக்க முடியும் என்பது பற்றி சிந்தித்துப் பாருங்கள். தனக்கே அமைதி இல்லாதபோது அவள் எப்படி கணவனுக்கு ஆறுதலைக் கொடுப்பாள்? தாய், தந்தையருக்கும் வீட்டிலிருக்கும் பிள்ளைகளுக்கும் எப்படி அமைதி கொடுப்பாள்? அது மட்டுமன்றி, 'எல்லோரும் என்னையல்லவா கவனிக்க வேண்டும்! நான் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்துவிட்டு வருகிறேன்... என்று தான் அவள் சிந்திப்பாள். 'ஒன்றை இழந்தவனால் அதனைப் பிறருக்குக் கொடுக்க முடியாது' என்பது அரபுப் பழமொழி. தன்னிடம் இல்லாததை மற்றவனுக்குக்கொடுக்க முடியாது. தொழில் செய்யும் ஒரு பெண் களைப்படைந்து அமைதியை இழந்து மன அழுத்தத்தில் இருக்கும் வேளை அவள் எப்படிக் கணவனுக்கு அமைதியை வழங்க முடியும்? மேற்குலகைப் பொறுத்தவரை தொழில் பெண்ணுடைய ஆயுதம் தான். ஆனால், ஒரு சமூகத்தில் தொழிலானது பெண்ணுடைய ஆயுதமல்ல. அத்தகைய சூழலில் வாழ்கின்ற பெண்ணுக்குதொழில்செய்ய வேண்டிய, சம்பாதிக்க வேண்டியஎந்தவொரு அவசியமும் ஏற்படப் போவதில்லை. பெண்ணைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பும் சமூகத்தைச் சார்ந்தது. குறிப்பாக, சமூகத்திலுள்ள ஆண்களைச் சார்ந்தது. பெண்ணைக் கவனிக்கச் சட்ட ரீதியாக கடப்பாடுள்ளவர்கள் ஆண்கள். பெண்ணைக் கவனிக்க சட்ட ரீதியான கடப்பாடுடையவர்கள் வரிசையில் முதலாமவர் தந்தை. குழந்தையாக இருக்கும்போது ஒரு பெண்ணைக் கவனிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் தந்தையையே சாரும்.



(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைக்கல் ஆஞ்சலோ




இவர் இத்தாலியில் 1475ஆம் ஆண்டு பிறந்தார். இளமையிலேயே சிற்பியாக விரும்பிய இவர், புளோரன்சில் இருந்த கிரிலோண்டியா ஓவியப்பாடசாலையில் கல்வி கற்றார். இவர் பாப்பரசர் 2ஆம் ஜீலியஸின் வேண்டுகோளுக்கு இணங்க ரோமில் உள்ள வத்திக்கான் மாளிகையில் உள்ள சிஸ்டைன் தேவாலய பாவுகையில் வரைந்த ஓவியங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. இறுதித் தீர்ப்பு (அந்திமத்தீர்ப்பு)என்னும் ஓவியம் இவரின் மிகச்சிறந்த ஓவியம் ஆகும். இது ஐந்தாயிரம் சதுர அடி பரப்பில் வரையப்பட்டது. வரைவதற்குநான்கரை ஆண்டுகள் சென்றன. இதில் இறைவனால் உலகம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் சிருஷ்டிக்கப்படல், ஆதாம், ஏவாளைப்படைத்தல், ஏதேன் தோட்டத்தில் இருந்து ஆதாம் ஏவாளை விரட்டல், பிரளயம், இறுதித் தீர்ப்பு, பரிசுத்த குடும்பம் போன்றவை கட்டங்களாக வரையப்பட்டுள்ளன. புனித பீற்றரை சிலுவையில் அறைதல், சிஸ்ரைன் தேவாலயத்தில் வரையப்பட்ட ஜகரியா, தீர்க்கதரிசினி செல்பிக்கா பியாட்டா, மோஸஸ், இறக்கும் அடிமை, டேவிட் போன்றவையும் இவர் வரைந்த ஓவியங்களில் குறிப்பிடத்தக்கவை. சென். பீற்றர்ஸ் தேவாலயம், பொறன்ஸ் நூலகம், 2ஆம் யூலியஸின் கல்லறை போன்றவை இவரது கட்டடக் கலைச் சிறப்பை எடுத்துக் காட்டுவதாக உள்ளன. இவருக்கு ஆதரவு நல்கிய லொரென்ஸோ டி மெடிசியினது பளிங்குச் சிலை இவரது அபூர்வ படைப்புக்களில் ஒன் றாகும்.

*பி.கபின்சன்,*
*தரம் 11,*
*கிளிநொச்சி மகா வித்தியாலயம்.*




# குள்ள ராஜா போட்ட தடை



மங்களபுரம் என்ற ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒரு மந்திரியும் இருந்தார். அந்த ராஜாவின் உயரம் நான்கரை அடி தான். ராஜா தான் குள்ளமாக இருந்தாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருந்தார். அவரது விருப்பத்துக்கு ஏற்ப மந்திரி நடந்தார். ஒரு முறை ராஜாவும், மந்திரியும் மாறு வேடத்தில் நகர்வலம் போனார்கள். அப்போது தந்தையொருவர் தனது மகனுக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தார். "நன்றாகக் குதித்து உயரமாகும் வழியைப் பார். இல்லை என்றால் எங்களது ராஜா மாதிரிக் குள்ளமாகத் தான் வருவாய்" என்று கூறிக் கொண்டிருந்தார். இதைக் கேட்டதும் ராஜாவுக்கு கடும் கோபம் வந்தது. மாறு வேடத்தை எவருக்கும் காட்டிக் கொள்ளவும் விரும்பவில்லை. இருவரும் விறுவிறு என அரண்மனைக்கு வந்தனர். அன்று முழுவதும் ராஜா கடும் கோபத்துடன் இருந்தார். மறுநாள் அந்த ஊரில் ஒரு அறிவிப்பைப் கொடுக்கும்படி ராஜா உத்தரவிட்டார். "நான்கரை அடி உயரத்துக்கு மேல் யாராவது இந்த ஊரில் இருந்தால், இங்கிருந்து வெளியேறவும்" என்பதே அந்த அறிவிப்பாக இருந்தது. அதனால் அந்த ஊரில் இருந்த பெரியவர்கள் எல்லோரும் அங்கிருந்து வெளியேறி விட்டனர். ஆனால் மந்திரி ஆறாடி உயரத்தில் இருந்தும், அவர் அங்கிருந்து வெளியேறாமல் இருந்தார். ராஜா பார்த்தால் கோபம் கொள்வார் என மந்திரி ஒழிந்தே வாழ்ந்து வந்தார். பெரியவர்கள் எல்லோரும் அங்கிருந்து வெளியேறியதால் சிறியவர்களை அமைச்சர்களாக ராஜா நியமித்தார். ஆனால், வீரர்களாக இருப்பவர்கள் உயரமானவர்களாக இருக்க வேண்டும் என்பதால், அங்கு வீரர்கள் இல்லை. இந்த விடயம் எதிரி நாட்டுக்குத் தெரிய வந்தது. மங்களபுரம் மீது போர் தொடுக்கப் போவதாக அந்த நாட்டின் அரசன் அறிவிப்பு ஒன்றை விடுத்தான். அத்துடன் நில்லாமல் தனது வீரர்களுடன் மங்களபுரத்தை முற்றுகையிட்டான். மங்களபுரத்தில் வீரர்கள் இல்லாததால் ராஜாவுக்குக் கவலை வந்தது. இந்த நேரத்தில் ராஜாவின் முன்னாள் மந்திரி அரண்மனைக்கு வந்தார். மந்திரியைப் பார்த்ததும் ராஜாவுக்கு மிக்க சந்தோசம். ஆனால், வெளியில் அதைக் காட்டிக் கொள்ளமல் கோபமாகப் பேசினார். "இப்போது ஏன் இங்கு வந்தாய்" எனக் கேட்டார். "ராஜாவே, எனது கால்களைப் பாருங்கள். நான் குள்ளமாக இருக்க வேண்டும் என எனது கால்களை வெட்டிக் கொண் டேன்" - என்றார் மந்திரி. ராஜா அப்போது தான் மந்திரி யைப் பார்த்தார். மந்திரியின் கால்கள் குண்டாக இருந்தன. ஆனால் குள்ளமாக காட்டுவதற்காக காலை முழங்காலுடன் மடித்திருந்தார். ராஜாவுக்குப் புரிந்தது. உடனே மந்திரியின் வேடிக்கைச் செயலை நகைச் சுவையாக ஏற்று உடனடியாக மந்திரிப் பதவியை ஏற்கும்படி உத்தரவிட்டார். உடனடியாக களத்தில் இறங்கிய அமைச்சர் பல்வேறு கட்டளைகளைப்பிறப்பித்தார். குள்ளமான சிறுவர்களை எதிரி நாட்டு ஒற்றர்களுக்குச் சந்தேகம் வராமல் வெளியே செல்வதற்குப் பயிற்சிகளை வழங்கினார். அவர்கள் மூலம் ஊரை விட்டுப்போனவர்களுக்குத் தகவல் வழங்கினார். வீரர்கள் அனை வரும் பின்புறமாக அரண்மனைக்குள் குவிந்தனர். அனைவரும் ஒன்று சேர்ந்து எதிரி நாட்டு வீரர்கள் மீது தாக்குதல்கள் நடத்தினர். அதனைத் தாங்க முடியாமல் எதிரி நாட்டு வீரர்கள் ஓட்டம் பிடித்தனர். நாட்டை ஆபத்தில் இருந்து காப்பற்றியதற்காக மந்திரிக்கு நன்றி தெரிவித்தார் ராஜா. ஒரு நாட்டை ஆள்வதற்கு தேவை வீரமும் அறிவும் தான். அதனை ஒழுங்காகச் செய்வதுதான் முக்கியம் என ராஜா உணர்ந்து கொண்டார். உடனே உயரமானவர்களுக்கு விதித்த தடையை நீக்கினார். எல்லோரும் ராஜாவை வாழ்த்தினார்கள்.

# வாழ்வைத் துணிவுடன் எதிர் கொள்



வாழ்க்கையில் வெற்றிப்பெற வேண்டுமானால் முதலில் துணிவுடன் இருக்க வேண்டும். முதலாவது நீ மற்றவர்களின்றும் வேறுபட்டவனாய்த் திகழ வேண்டும். அடர்ந்த இருளிலும், ஆபத்தான நேரங்களிலும்கூட உயர்ந்த மனிதர்கள் பயமின்றித் துணிவுடன் செயற்படுவார்கள். நீயும் அவ்வாறு இந்த உலகில் செயற்பட வேண்டியது அவசியம். விழுகின்ற பொழுதெல்லாம் மீண்டும் நீ எழுந்து நிற்க வேண்டும். உனது எண்ணம், திட்டம், நிறைவேறி வெற்றி பெறும் என்று நீ நம்பினால் நீ தைரியமாக எழுந்து நின்று அதைச் செயற்படுத்து. பயத்தை உன்னுடனே வைத்துக்கொள், துணிச்சலைப் பிறருடன் பகிர்ந்துக்கொள். உன்னுள் தோன்றும் ஒரு எண்ணம், வெற்றி பெறும் என நீ நம்பினால், உடனே செயற்படுத்த துணிவுடன் நில். அவ்வாறு நீ துணிவுடன் முன்னேறிச் செல்வதற்கு எப்போதும் சந்தோசமாய் இரு. தடைகளை நீக்கி முன் செல், கோண லானதை நேரியதாக ஆக்கு, மற்றவர்களுக்கு நன்மை செய்யப்படி, ஒடுக்கப்பட்டவர்களை ஆதரி, தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்த வேண்டும் என்று எண்ணு. கடந்த காலத்தை மறந்து, எதிர்காலம் நோக்கி நடைபோடு, எல்லாவற்றுக்கும் மேலாக எமது காலங்கள் இறைவன் கரத்தில் இருக்கிறது. எனவே இறைவனிடம், உன்னுடைய எண்ணத்தை தெரிவித்து துணிவோடு இலக்கை நோக்கி நடைபோடு இளைஞனே. நாம் துணிவோடு செல்லும் போது, எல்லாவற்றுக்கும் மேலாக நாம் சிறந்த நண்பர்களைத் தேர்ந்தெடுத்து பழகுவது அவசியம். அந்த நண்பரானவர் சில சொற்கள் மட்டும் பேசும் நபராக இருந்தால்நல்லது. நண்பர்களிடம் விவாதத்தைத் தடுப்பதற்கு ஒரேவழி விவாதத்தைத் தவிர்ப்பது தான். நாம் இலக்கை நோக்கிப் பயணிக்கும்போது எமது நம்பிக்கைகுரிய நண்பரிடம் கலந்து பேசுவது நல்லது. ஆனால், நாம் பேசுவதற்கு முன்னால், எதைப் பற்றிப் பேசப் போகிறோம் என்பதைப் பற்றி முதலாவதாக முடிவு செய்ய வேண்டும். நீ பேசுவது தவறு என்று மனம் சொல்லும் போது அந்த விடயத்தை ஒரு போதும் பேசாதே!

பிறருடன் நீ பகிர்ந்து கொள்ளும்போது மேலும் உயர்கின்றாய், நீ அதிகமாகப் பகிர்ந்து கொள்கின்ற போது வாழ்க்கையும் உனக்கு அதிகமாகக் கற்றுக்கொடுக்கும். மனிதன் பிறந்தது, வெற்றி அடையவே தவிர தோல்விக்கான காரணங்கள் குறித்து பேசிக்கொண்டிருப்பதற்கு அல்ல. உயர்ந்த மனிதர்கள் உயரிய சிந்தனைகள் குறித்துப் பேசுவர். சராசரி மனிதன் அன்றாட செயல்களைக் குறித்துப் பேசுவான். சாதாரண மனிதன் பிறரைப் பற்றிப் பேசுவான். உன்னைப் போல் துணிச்சல் உடையவர் வெற்றிக்கான காரணங்கள் குறித்தே பேசுவர். உன்னைப் போன்ற மனிதனாக வாழ வேண்டும் என்று மற்றவர்கள் எண்ண வேண்டும். உன்னுடைய வாழ்க்கை போன்று தங்களுடைய வாழ்க்கையும் அமைய வேண்டும் என்று மற்றவர்கள் மனதில் தோன்ற வேண்டும். இப்படிப் பிறர் பின்பற்றும் வகையில் எமது வாழ்க்கை அமைந்தால் இந்த உலகமே எமக்குச் சொர்க்கமாக விளங்கும். மற்றவர்கள் போற்றும் படியாக எமது வாழ்க்கை அமைய வேண்டும் என்றால், எமது வாழ்க்கையை நாம் துணிவுடன் எதிர் கொண்டு நடக்க வேண்டும். எமது மனதில் அச்சம் இருந்தால், அச்சத்தில் எப்போதும் இருப்பதைவிட, ஆபத்தை ஒரு முறையாவதுசந்திப்பது நல்லது என்ற துணிவுடன் ஆபத்தைச் சந்திக்க வேண்டும். உனது வாழ்க்கையில் ஒரு சிறு கல் போன்ற துன்பம் வந்தால் அந்த கல்லை நாம் குனிந்து தள்ளாமல், எமது கால்களாலேயே அந்தக் கல்லைத் தள்ளிவிடுவதுபோல, நாம் அந்த சிறிய துன்பத்தை தள்ளிவிட வேண்டும். ஒரு பெரிய கல் போன்ற துன்பம் எம்மை எதிர்க்கொண்டால், அதையும் எமது கால்களாலேயே தள்ளிவிட வேண்டும். அதை விடப் பெரிய கல் போன்ற துன்பம் வந்தால், அந்தக் கல்லின் மீது ஏறி அதை மிதித்துக் கடந்து செல்வதைப் போல, நாமும் அந்த பெரிய துன்பத்தைக் காலால் மிதித்துக் கடந்து செல்லவேண்டும். மிகப்பெரிய மலைப்பாறை போன்ற துன்பம் வந்தால், நாம் அதன்மீது ஏறிச் செல்ல முயற்சிக்காமல், அதிலிருந்து ஒதுங்கிச் செல்வதே சிறந்தது. அதுபோல மிகப்பெரிய துன்பம் வரும்போது அதனுடன் மல்லுக்கட்டிக் கொண்டு இருக்காமல், அந்தப் பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கிச் செல்வதே சாலச்சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசைக் கவிழ்க்க அமைச்சர் முயற்சி

## இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டார் என்கிறது கொழும்பு ஊடகம்

கொழும்பு, ஒக்.30

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசை, வரும் வரவு–செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது கவிழ்பதற்கு அமைச்சர் ஒருவர் இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டார் என கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

மேல் மாகாணத்தின் மாவட்டம் ஒன்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் குறித்த அமைச்சர் இம்முறை பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியிருந்தார்.

எதிர்வரும் வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது அரசைக் கவிழ்க்கும் நோக்கில் இவ்வாறு திட்டமிட்டிருந்தார்.

வரவுசெலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது, ஐக்கிய தேசியக் கட்சி அரசைக் கவிழ்த்து, புதிய அரசொன்றை உருவாக்க இந்த அமைச்சர் திட்டமிட்டுள்ளார். எதிர்க்கட்சியில்அங்கம்வகிக்கும்நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது. சில சுற்று பேச்சுவார்த்தைகள் இவ்வாறு நடத்தப்பட்டுள்ளன.

எவ்வாறெனினும் தேசிய அரசில் இணைந்து கொண்டுள்ள சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் அரசைக்கவிழ்க்கும்திட்டத்தைஎதிர்த்துள்ளனர். 2017ம்ஆண்டுவரையில் இந்தத் தேசிய அரசைக் கொண்டு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த அமைச்சரின் அரசைக்கவிழ்க்கும்திட்டம்வெற்றியளிக்காது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசைக் கவிழ்த்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் புதிய அரசொன்றை அமைப்பதே இந்த அமைச்சரின் முயற்சியாக அமைந்துள்ளது. இவ்வாறு இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் தெரியும் எனத் தெரிவிக்கப்படுகிறது என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த–வ)

# மகிந்தவின் மாளிகையை அம்பலமாக்கியது தவறல்ல

## அரசும் இராணுவமும் கூட்டாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.30

நாட்டின்பாதுகாப்புக்குத்தற்போது அச்சுறுத்தல் இல்லை என்பதால், ஜனாதிபதி மாளிகையிலுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நிலக்கீழ் மாளிகை தொடர்பானதகவல்களைப் பகிரங்கப்படுத்தியதால் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என அரசும், இராணுவமும் நேற்றுக் கூட்டாகத் தெரிவித்தன.

மேலும், நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புடைய இராணுவம் உள்ளிட்ட முப்படைகளின் இரகசியங்கள் உரிய முறையில் பேணப்படும் என்று இராணுவமும் தெரிவித்தது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அரசும், இராணுவமும் இவ்வாறு தெரிவித்தன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நிலக்கீழ் மாளிகை தொடர்பான தகவல்களை வெளியிட்டமை நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையுமல்லவா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டது.

இதன்போது பதிலளித்த ஊடகத்துறை மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும், அமைச்சரவைப் பதில் பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க, ஊடகங்களினூடாக இது தொடர்பான புகைப்படங்களை நான் பார்த்தேன். அது அவர் (மகிந்த ராஜபக்ச) பாதுகாப்புத் தேவை கருதி அமைத்திருக்கலாம். இந்த மாளிகை தொடர்பில் அரசியல் நோக்கம் கருதித் தகவல் வெளியிடப்படவில்லை. அது பதுங்கு குழியா? மாளிகையா? என்பது எனக்குத் தெரியாது. அப்போதுஇருந்தவர்களிடமிருந்து பாதுகாப்பாக இருக்க இப்படி ஒரு மாளிகைதேவை எனஅவர் (மகிந்த) நினைத்திருக்கலாம் என்றார்.

இந்தக் கேள்விக்குப் பதிலளித்த உள்ளூராட்சிச் சபைகள் பிரதியமைச்சர் கருணாரட்ன பரணவிதாரண,

இந்த மாளிகை தொடர்பான தகவல்களை வெளியிடுவது பாதுகாப்புக்குப் பிரச்சினை இல்லை. தகவல் அறிந்துகொள்வது மக்களின்உரிமை. இந்நிலையில், இந்த மாளிகை தொடர்பான தகவல்களை வெளியிட்டமை பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்ல" என்றார்.

இதேவேளை, இந்தக் கேள்விக்குப் பதிலளித்த இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர,

இந்த மாளிகை தொடர்பான தகவல்களை வெளியிட்டமை பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்ல. தற்போது நிலைமை மாறிவிட்டது. நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை. இந்த மாளிகை தொடர்பான புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியானதால் பிரச்சினை இல்லை. நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் பேண வேண்டிய இரகசியங்கள் அவ்வாறே பேணப்படும். இராணுவம் மற்றும்முப்படைகளின்இரகசியங்களை நாம் உரிய முறையில் பாதுகாப்போம். அவற்றைப் பாதுகாப்பது முக்கியமாகும்" என்றார். (த–சி)

# கொழும்பு பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகின்றாரா றோகித ?

## ஊடகச் செய்திகளுக்கு அவர் மறுப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன் றோகித ராஜபக்ச, தான் கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஓர் ஊழியர் என ஊடகங்களில் வெளியான செய்திகளை மறுத்துள்ளார். சமூக வலைத்தளங்களில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அவர், தான் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் ஒரு பட்டப்பின் படிப்பு மாண வன் மாத்திரமே எனத் தெரிவித்துள்ளார்.

சவுத்தாம்டன் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்த தனது பட்டப்பின்படிப்பு ஆய்வைக் கொழும்பு பல்கலைக் கழகத்தில் தொடர்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் ரோகித பணியாற்றுகின்றார் எனப் பல ஊடகங்களில் தகவல் வெளியான பின்னரே அவர் இது குறித்துத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணித பீடத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவில்ரோஹிதபணியாற்றுவதாக கொழும்பு ஊடகங்களில் வெளியான செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தச் செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

முன்னளர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இளைய புதல்வர் சந்தன ரோஹித ராஜபக்ச கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களில் ஒருவராகப் பட்டியலிடப்பட்டுள்ளார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணிதத் துறையின் கணித ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் விரிவுரையாளர்களில் ஒருவராக ரோஹிதவின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. கலாநிதிப் பட்டக்கற்கைநெறி மாணவராகவும், விரிவுரையாளராகவும் ரோஹித கடமையாற்றி வருகின்றார்.

விண்வெளிச் சிதைவுகள் தொடர்பிலான விசேட கணித ரீதியான ஆய்வுகளில் ரோஹித ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பிரிட்டனின் சவுத்தாம்டன் பல்கலைக்கழகத்தில் இளம்கலை மற்றும் முதுநிலைப் பட்டக் கற்கை நெறிகளை ரோஹித கற்றுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழக இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த–வ)

# உறவினரிடையே கைகலப்பில் ஒருவர் சாவு

மானிப்பாய், ஒக்.30

மானிப்பாய், கட்டுடையில் நேற்றிரவு 8 மணியளவில் உறவினரிடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பில் முடிந்தது. இதில் ஒருவர் கல்லொன்றினால் தாக்கியதில் மற்றொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மானிப்பாய், கந்த ரோடையைச் சேர்ந்த இரத்தினம் தயாபரன் (வயது–43) என்பவரே சாவடைந்துள்ளார். அவரின் சடலம் நேற்றிரவு யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது. (வ–101)

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வானைப்பிள்ளை இராசரத்தினம்



சிறுப்பிட்டி கிழக்கு, அரசந்திடலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை இராசரத்தினம் நேற்று (29.10.2015) காலமாகிவிட்டார்.

அன்னார் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், துவாஸ்கர் (கண்ணன்-கரன் அக்றோ சென்ரர், கிளிநொச்சி), சரிதா (ஆசிரியை கிளி/செல்லியா தீவு அ.த.க. பாடசாலை)பகீரதன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும், கனகசபை, அருணாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2 மணியளவில் இந்தன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(85842)(10)

# அவன்கார்ட் குறித்து சபையில் விவாதம்

கொழும்பு, ஒக். 30

அவன் கார்ட் மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலை விவகாரம் தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை விவாத மொன்று அடுத்த நாடாளுமன்ற அமர்வில் நடத்தப்படும் என ஊடகத்துறை மற் றும் நாடாளுமன்ற மறு சீரமைப் புத்துறை அமைச்சர் கயந்த கருணா திலக்க தெரிவித்தார்.

# கடமை நிறைவேற்று அதிபர் சங்கத்தின் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 30

வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, சாவகச்சேரி சிவன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள கலாசார மண்டபத்தில் நடைபெறவுள் ளதாக சங்கத் [illegible] தாக அறிவித்துள்ளார். (வ)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் யோகீஸ்வரன் நிஜாந்தன்

தோற்றம்
09.01.1988

மறைவு
30.10.2012



கண்ணிமைத்து விழிக்கவில்லை
மூன்று ஆண்டுகள் சென்று விட்டதையா
ஒரு நொடிப் பொழுதும் அழியவில்லை
உங்கள் அன்பான உள்ளம் எம்மைவிட்டு....

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.
கைதடி மேற்கு, கைதடி.

# விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காமல் சாவு

மோட்டார் சைக்கிளில் சென்றவர், மின்கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியதில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிறிசேகரன் யசிந்தன் (வயது –19) என்பவரே உயிரிழந்தவராவார். புங்குடுதீவில் கடந்த திங்கட்கிழமை இந்த விபத்து இடம் பெற்றது. சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் மோதியதனால் மோட்டார்சைக்கிளில் பயணித்தவர் அருகிலிருந்த மின்கம்பத்துடன்மோதுண்டு படுகா யமடைந்துள்ளார். இந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்த அவர், சிகிச்சை பயனளிக்காது நேற்று நண்பகல் உயிரிழந்தார். (வ–4,86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்த அரசுகள் கூட்டமைப்பில் இணைந்துள்ளது இலங்கை அரசு

## மெக்சிக்கோவில் தெரிவித்தார் விஜேதாச

மெக்சிக்கோ சிற்றி, ஒக்.30
திறந்த அரசுகளின் கூட்டமைப்பில் (Open Government Partnership) இலங்கையும் புதிய உறுப்பினராக இணைந்து கொண்டுள்ளது.

மெக்சிக்கோவில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான திறந்த அரசுகளின் கூட்டமைப்பில் இலங்கை இணைந்து கொள்வதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச அறிவித்தார்.

வெளிப்படைத் தன்மை, கூடுதல் பொறுப்புக்கூறல், குடி மக்களை மேம்படுத்தல், ஊழலுக்கு எதிராகப் போராடுதல் மற்றும் குடிமக்களுக்குப் பதிலளிக்கும் வகையிலான உள்நாட்டு மறுசீரமைப்பை மேற்கொள்ள உறுதி பூண்டுள்ள நாடுகளைக் கொண்டதாக, இந்த வெளிப்படையான அரசுகளின் கூட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு பிரேசில், இந்தோனேசியா, மெக்சிக்கோ, நோர்வே, பிலிப்பைன்ஸ், தென்னாபிரிக்கா, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய 8 நாடுகளால் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பில் 68 நாடுகள் அங்கம் வகித்த நிலையில் இலங்கை 69 ஆவது நாடாக இணைந்திருக்கிறது.

இந்தக் கூட்டமைப்பில் இணைந்திருக்கும் முதலாவது தெற்காசிய நாடு இலங்கை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஆசியாவின் இந்தோனேசியா, மொங்கோலியா, பிலிப்பைன்ஸ் மற்றும் கொரியா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஆசியாவின் ஐந்தாவது நாடாக இலங்கை இணைந்து கொண்டது.

மெக்சிக்கோவில் நடக்கும், இந்த அமைப்பின் மாநாட்டில் இலங்கை அரசு சார்பில், நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச, பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர் டி சில்வா, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.


இந்த மாநாட்டில் பங்கேற்கும் அமெரிக்கக் குழுவுக்குத் தலைமை தாங்கும் ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவர் சமந்தா பவருடன், இலங்கைக் குழுவினர் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய சமந்தா பவர், இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து விரிவாக எடுத்துக் கூறியுள்ளதுடன், மகிந்த ராஜபக்ச ஆட்சி குறித்து கடுமையான விமர்சனங்களையும் முன்வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கத் தூதுவரின், இலங்கை குறித்த முழுமையான உரை 25ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. (த-வி)

---

## மரண அறிவித்தல்கள்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 . 03 . 1939 | 29 . 10 . 2015 |



### குமரேசு ரங்கநாதன்
(ஓய்வுநிலை பொறுப்பதிகாரி - அச்சுவேலி பிரதேசசபை)

அச்சுவேலி தெற்கு விக்கினேஸ்வரா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமரேசு ரங்கநாதன் (ஓய்வுநிலை பொறுப்பதிகாரி-மூதூர், கிளிவெட்டி, திருகோணமலை, புலோலி, கோப்பாய், புத்தூர், அச்சுவேலி பிரதேசசபை) நேற்று (29.10.2015) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமரேசு-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற யோகாம்பிகையின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற வைரமுத்து-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் அன்புச் சகோதரனும், தயாபரம், சந்திரவதனி (தஞ்சி), மாதினி, கஜமுகன், சாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்சினி, பரந்தாமன், சிங்கம், ஞானாம்பிகை சுரேஷ்குமார் ஆகியோரின் அன்பு மாமனும், கந்தையாவின் அன்பு மைத்துனரும், கஜானா, கபினா, கஜந்தா, டெசிந்தன், எல்லாளன், தமிரன், நவீன், சிந்துஜா, சூரியா, பார்த்திபன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.


| | |
|---|---|
| தயாபரன் | - 0041627946947 |
| சந்திரவதனி | - 0014167540988 |
| மாதினி | - 0041712784180 |
| கஜமுகன் | - 0041625345776 |
| சாந்தினி | - 0041564430635 |
| பிரதீபன் | - 0776856492 |

(C/19659) (10)

---

### சுந்தரம்பிள்ளை கந்தவநாதன்

(Former Logistics Manager (NAFI), British Military Base, Gan Maldives, முன்னாள் முகாமையாளர்- சிகிரி வீவிங்மில் ரத்மலானை,தர்பார் இண்டஸ்றீஸ் ஜாஎல,போசகர்- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்,பிரித்தானியக் கிளை பழைய மாணவர் சங்கம்)



அன்னை மடியில்:05.01.1931
ஆண்டவன் அடியில்: 22.10.2015

யாழ். வடமராட்சி நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், லண்டன் Surbiton ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை கந்தவநாதன் 22.10.2015 வியாழக்கிழமை லண்டனில் இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான செல்லையா (மலேயன் பென்சனியர்)- செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற யஜீனா தேவி (தேவி ரீச்சர்) (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், இளைப்பாறிய சங்கீத ஆசிரியை சங்கீத பூஷணம்) அவர்களின் அன்புக் கணவரும் நீதிமதி (மதி) (வீணை ஆசிரியை சேற தமிழ் பாடசாலை, கிங்ஸ்ரன் தமிழ் பாடசாலை), வாணி (சங்கீத ஆசிரியை- கிங்ஸ்ரன் தமிழ் பாடசாலை, லசேற தமிழ் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சண்முகநாதனின் அருமைச் சகோதரரும் தர்மகுலசிங்கம், பிரதாபன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சீதாதேவி, லச்சுமிதேவி, விவேகமணி, தூமணி, பாலசுப்பிரமணியம், முருகமூர்த்தி, பரமேஸ்வரி(லண்டன்)ஆகியோரின் அன்பு மைத்துனரும் யோகேஸ்வரியின் (கனடா) உடன் பிறவாச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான செல்வராசா,கந்தசாமி, இராசநாயகம் மற்றும் பூபாலசிங்கம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும் வளர்மதி, தயாமதி,சுகர்ணா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் சுசீலன்,நோமன்,பாமா,பாமன்,சிவகுமார், அகிலா, ராதா,ஜெயக்குமார்,கௌரீசன், கௌரீஸ்வரி, கௌரீமனோகரி, கௌரிசங்கர், கௌரிகரன், உருத்திரன், விஜய லக்ஷ்மி,ஷாமினி,சுபாசினி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், இரமணா,பாலரமணன்,ஜமுனா ஆகியோரின் அன்பு மாமாவும் கீதணன்,விதுர்ஷா,ஷரிகா, சச்சின் ஆகியோரின் அன்பு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.11.2015 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கணேஷகம்
மத்திய மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி , கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்

---

## மரண அறிவித்தல்

### கிருஸ்ணபிள்ளை துரைராசா



வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை துரைராசா நேற்று (29.10.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை-பறுவதம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தாரிக்கப்பற்றைச் சேர்ந்த மாணிக்கம்-சிவகாமியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், பவா றோஜினி (சுவிஸ்), துஷா, சந்திரதாஸ் றோமி (ஜேர்மனி), பிரகாஷ் சுபா, ராஜீத் (நெல்லியடி ராம் கொம்பியூட்டர் சென்ரர் உரிமையாளர்) ராம்ஜீத் (யாழ்.பல்லைக்கலைக் கழக கலைப்பீடம்) ஆகியோரின் தகப்பனும், புவனேந்திரன் சுதந்திரா தேவியின் அன்புச் சகோதரனும் கந்தையா பவா, சுப்பிரமணியம் சந்திரதாஸ், தங்கவடிவேல் பிரகாஷ் ஆகியோரின் மாமனும், றொபாஸ், றொபித் (சுவிஸ்), நிர்ணன், கபிர்ணா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2015) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

றோமி இல்லம், வதிரி (C/19660)(10) தகவல்: குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்கள்

### இராசரட்ணம் மேரி செலின்



நவாலியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரட்ணம் மேரி செலின் 22.10.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராசரட்ணத்தின் அன்பு மனைவியும், சத்யா, கிறிஸ்ரின் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற இராயப்பு மற்றும் நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-றோசலின் தம்பதியரின் மருமகளும், அருமைத்துரை (சுவிஸ்), ஜேசுதாஸ், அருள்நேசன் (ஜேர்மன்), மேரி பொலின், மேரி சாளின் (பிரான்ஸ்), பிரேமானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், ஜேக்குமார் (ஏசியன்), சுரேந்திரன், சுசிலா, றீற்ரா, வசந்தி, பெலானி, பிறேமினி, சுலோஜினி, மாலினி (இந்தியா), றஜனி ஆகியோரின் மைத்துனியும், மீரா, சாரு, Dr. ஜான்சன், ஜான்ஸ்ரோர், தீபன், ஜெனியா, பிறியோன் ஆகியோரின் மாமியும், சிரான், ஸ்ரெபானி, ஸ்சேரன் ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.10.2015) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 முதல் 4.00 மணிவரை Friedhofu krematorium am Hellweg, Hellweg 95 45279 Essen Germany என்னும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு, நல்லடக்க திருப்பலி 31.10.2015 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று, Kutings Garten 3 45279 Essen Germany இல் உள்ள Friedhof u krematorium am Hellweg என்னும் கல்லறை தோட்டத்தில் 31.10.2015 சனிக்கிழமை காலை 10.00 முதல் 11.30 மணியளவில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

அத்துடன் இலங்கையில் ஆராதனை திருப்பலி நவாலி சென்.பீற்றர் தேவாலயத்தில் 31.10.2015 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு, மானிப்பாய்.
0777 243465, 021 22 55 313 (85638)(10) தகவல்: ஜேசுதாசன்

---

### நவரட்ணம் சிவபாலசிங்கம் (சிவா)



கொக்குவில் மேற்கு கேணியடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடி மற்றும் மன்னார் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணம் சிவபாலசிங்கம் நேற்று (29.10.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் நல்லம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற குமாரலிங்கம் மற்றும் கமலா தேவியின் அன்பு மருமகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் தனபாலசிங்கம் சுசிலா தேவி காலஞ்சென்ற லலிதாதேவி மற்றும் கமலாதேவி, ராகினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரன், தனலட்சுமி, கோமதிதேவி, சற்குணதேவி, ஸ்ரீராமச்சந்திரன், பாலச்சந்திரன், மனோரஞ்சிதம், ரவிச்சந்திரன் ஜெகதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் அவரது இல்லத்தில் இன்று (31.10.2015) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு.

தகவல்
குடும்பத்தினர்
(0777403412)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவிடம் நேற்று 7 மணிநேரம் விசாரணை

கொழும்பு, ஒக்.30

முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்சவிடம், பெரியளவிலான மோசடிகள் மற்றும் ஊழல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு, நேற்று சுமார் 7 மணி நேரம் விசாரணை மேற்கொண்டது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்சவுக்காகச்செய்யப்பட்ட விளம்பரங்களுக்காக, சுயாதீன தொலைகாட்சிக்கு நிதி வழங்காமை தொடர்பிலேயே அவரிடம் இவ்வாறு விசாரணை நடத்தப்பட்டது.

சம்பவம் தொடர்பில், நேற்று அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதுடன், இன்றும் அவர் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, இந்த விடயம் தொடர்பில் முன்னாள் ஊடகதுறை அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெலவும் நேற்று, பெரியளவிலான மோசடிகள் மற்றும் ஊழல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக் குழு முன்னிலையில் பிரசன்னமானார்.

அத்துடன், சுயாதீன தொலைகாட்சியின் முன்னாள் தலைவர் மற்றும் முன்னாள் பொது முகாமையாளர் ஆகியோரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னால் முன்னிலையாகியிருந்தனர்.

மகிந்த ராஜபக்ஸவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ச, உதய கம்மன்பில, பிரசன்ன ரணவீர மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான உதித லொக்கு பண்டார மற்றும் ஏ.எச்.எம்.அஸ்வர் ஆகியோரும் ஆணைக் குழுவுக்கு சமூகமளித்திருந் தனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு, பெரியளவிலான மோசடிகள் மற்றும் ஊழல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு, நேற்று காலை மற்றும் மாலை தேநீருடன் மதிய போசனத்தை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## மாதாந்த கலை நிகழ்ச்சி

வட இலங்கைச் சங்கீத சபை நடத்தும் மாதாந்தக் கலை நிகழ்ச்சி நாளைசனிக்கிழமை பி.ப 3 மணிக்கு வட இலங்கைச் சங்கீத சபையின் தற்பரானந்தன் கலை யரங்கில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் நடைபெறவுள்ள இசை அரங்கில் பாட்டை க.வர்ஜிகனும், வயலினை அ.ஜெயராமனும் மிருதங்கத்தை பிரம்ஸ்ரீ என்.சிவசுந்தரசர்மாவும் கடத்தை கே.ரவி சங்கரும் வழங்கவுள்ளனர்.

மேலும், இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை அறநெறி மாணவர்களின் 'ஞான வேல்' புராண இதிகாச நாடகமும் நடைபெறவுள்ளதாகவும் நடைபெறும் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் வட இலங்கை சங்கீத சபையினர் கேட்டுள்ளனர். (வ–ரி6)

## நூல் வெளியீடும் இசையரங்கமும்

வர்ணம் கிரியேன்ஸ் மற்றும் சரஸ்வதி வெளியீட்டகம் வழங்கும் கவிஞர் வேலணையூர் சுரேஷின் 'கிளுவம் வேலியும் கிடுகுத்தட்டியும்' கவிதை நூல் மற்றும் 'பிள்ளைத்தமிழின்பம்' பிள்ளைப்பாடல்கள் ஆகிய நூல்களின் வெளியீட்டு விழாவும் இசைமேதை வர்ண ராமேஸ்வரனின் சிறப்பு இசையரங்கமும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக தகைசார் வாழ் நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில்நடைபெறவுள்ளது.இதில் இசையரங்கத்தில் பாட்டு வர்ணராமேஸ்வரன், வயலின் சு.கோபிதாஸ், மிருதங்கம் க.கண்ணதாஸ், கெஞ்சிரா ந.சிவசுந்தர சர்மா, முகர்சிங் சி.செந்தூரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (வ–ரி6)

## தட்சணா மருதமடுவில் இன்று நடமாடும் சேவை

மன்னார், ஒக்.30

மடு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தட்சணா மருதமடு பிரதேசத்தில் இன்று வெள்ளிக்கிழமை வடமாகாண சபையின் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

வடமாகாண உள்ளூராட்சி மற்றும் வர்த்தக அமைச்சர் பா.டெனீஸ்வரனின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த நடமாடும் சேவை தட்சணா மருதமடு ஜி.ரி.எம்.எஸ் பாடசாலையில் இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன் வடக்கு மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், திணைக்கள தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்து கொள்வதால் துறைசார் அமைச்சர்கள் ஊடாக, மக்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என மடு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (வ)

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.30

மத்திய–மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் உப தலைவர் எஸ். ஜெயசங்கர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார். (வ)


ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 1206
சீட்டிழுப்பு திகதி 2015.10.29
வெற்றி இலக்கங்கள்
01 07 40 48 F
ரூ. 33,489,680/=

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 415
சீட்டிழுப்பு திகதி 2015.10.29
01 36 40 46 V
ரூ. 40,000,000/=

அறிவித்தல்
வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தல்
30.09.2015 உடன் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர் இடாப்பின் பிரதி 29.10.2015ம் திகதியிலிருந்து கிளை நிலையங்களிலும், தலைமை அலுவலகத்திலும், காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. இதில் ஆட்சேபனைகள் திருத்தங்கள் இருப்பின் 10.11.2015ம் திகதிக்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
சி. தாரணி, செயலாளர்
திரு.ந.சுந்தரமூர்த்தி, தலைவர்

பாராட்டி வாழ்த்துகின்றோம்
141 ஆவது அஞ்சல் தின விழாவில் வட மாகாணத்தில் தபால் தரம் பிரிப்பாளர் போட்டியில் சிறந்த தரம் பிரிப்பாளராக முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட
நடராசா சரவணபவன்
அவர்களைஅவரது சேவை மேலும் சிறக்க வாழ்வு வளம்பெற வாழ்த்துகிறோம். அஞ்சல் தின விழாவில் மூன்றாவது தடவையும் பரிசு பெறும் சிறப்பு இவருக்கே உரியது.
அஞ்சல் சமூகம், கன்னாகம்.






பெண் வரவேற்பாளர் தேவை
கணினி, ஆங்கில அறிவுடைய, 23 வயதிற்குட்பட்ட, திருநெல்வேலிக்கு வந்து போகக் கூடிய பெண் வரவேற்பாளர் தேவை. முதலாம் திகதிக்கு முன்னர் சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும். இல.106, தபாற்பெட்டிச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 021 320 2789

JCB விற்பனைக்கு
SLP 3CX TSSE
Made in England
JN 3580
(விலை 28 இலட்சம்) நல்ல நிலையில் உள்ளது.
தொடர்புக்கு : 076 7037289

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்







விசாரணை 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த பொதுக்கூட்டம்
காலம்:- 01.11.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு
இடம்:- ஆலய மண்டபம்
விடயம்: *திருப்பணி வேலைகள் தொடர்பாக
*யாப்பு சீர்திருத்தம்தொடர்பாக
*உற்சவம் தொடர்பாக.
அனைத்து பொதுச்சபை உறுப்பினர்களையும் மற்றும் திருவிழா உபயகார்ரர்களையும் அழைக்கின்றோம் கேட்டுக் கொள்கின்றோம்.
பரிபாலனசபை
(65632) (12.15.16)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
யா/வதிரி வடக்கு மெ.மி.த.க.பாடசாலை அல்வாய்
பரிசளிப்பு விழா - 2015
இடம்: பாடசாலை மண்டபம்
காலம்: 31.10.2015 சனிக்கிழமை பி.ப. 1.30 மணி
தலைவர்: ப.சிவசுப்பிரமணியம் [அதிபர்]
பிரதம விருந்தினர்: மா.தயானந்தன் (பொதுமுகாமையாளர், இயக்குநர், சென்.அன்ரனீஸ் குழுமம், கொழும்பு)
சிறப்பு விருந்தினர்கள்:
வே.சிவயோகன் (கௌரவ மாகாண சபை உறுப்பினர், வடக்கு மாகாணம்)
க.பொன்னையா (கோட்டக்கல்விப் பணிப்பாளர், கரவெட்டிக் கோட்டம்)
இந்நாளில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவர்களையும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும், அதிபரையும், பரிசில் பெறும் ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


சி.அஜித்திகா 173 புள்ளிகள் | வி.கஜுஷன் 171 புள்ளிகள் | கி.இதயதீபன் 166 புள்ளிகள் | தி.வைஷ்ணுஜன் 154 புள்ளிகள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பழைய மாணவர் சங்கம்,
யா/ வதிரி வடக்கு மெ.மி.த.க.பாடசாலை
(62183)(11,15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டை கடலுக்கு அருகே மர்மப்பொருள் விழும்

## அறிவித்துள்ளது ஆர்தர் சி கிளார்க் மையம்

விண்வெளியில் இருந்து வேகமாக வந்து கொண்டிருக்கும், விண்கலம் ஒன்றின் பாகமாக இருக்கலாம் என்று நம்பப்படும், டபிள்யூ.ரி1190எப் எனப் பெயரிடப்பட்டுள்ள, மர்மப்பொருள், அம்பாந்தோட்டைக்கு அப்பால் 100 கிலோ மீற்றர் தொலைவில் கடலிலேயே விழும் என்று இலங்கையின் ஆர்தர் சி கிளார்க் மையம் அறிவித்துள்ளது.

இந்த மையத்தின் விஞ்ஞானி ஒருவர் இதுகுறித்து தகவல் வெளியிடுகையில்,

இந்த மர்மப்பொருள், ஆழ்கடல் பகுதியிலேயே விழும் என்று பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், இந்த மர்மப் பொருள் விழப் போகும் சரியான இடத்தை இப்போது கூறமுடியாது. அது பூமியில் விழுவதற்குச் சில நாள்களுக்கு முன்னர்தான், விழப் போகும் சரியான இடத்தை உறுதிப்படுத்த முடியும்.

அது நிலத்தில் விழுமென்றால் மட்டுமே, அச்சம் கொள்ளவேண்டும். புவி சுற்றுப்பாதைக்குள் அது நுழையும் போது எரியத் தொடங்கும். எரியும் துண்டுகள் நிலத்தில் விழுமாக இருந்தால் அது ஆபத்தானது-என்று குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த மாதம், 13ஆம் திகதி இலங்கை நேரப்படி முற்பகல் 11.45 மணியளவில், இந்த மர்மப் பொருள், இலங்கைக்குத் தெற்கே 65 கடல் மைல் தொலைவில் கடலில் விழும் என்று நாசா வானியல் நிபுணர்கள் ஏற்கனவே எச்சரித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ)

# ரகசிய முகாம்களில் உள்ள உறவுகளை விடுவியுங்கள்

## காணாமற்போனோரின் உறவுகள் கண்ணீர் மல்கியவாறு கோரிக்கை




கொழும்பு, ஒக் 30

தமது உறவுகள் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும், அவர்கள் அங்கவீனர்களாக்கப் பட்டாலும் பரவாயில்லை தம்மிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் காணாமற்போனோரின் உறவுகள் மன்றாட்டமாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணாமற்போனோரை நினைவு கூரும் 25ஆவது வருட நிறைவு தின நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் நடைபெற்றது.

காணாமல்போனோரின் குடும்ப ஒன்றியம் ஏற்பாடு செய்த நிகழ்வில் நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் இருந்து காணாமற்போனோரின் உறவினர்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர். அவர்கள், நாட்டில் இரகசிய முகாம்கள் உள்ளன எனத் திடமாகத் தெரிவித்ததுடன், தமது உறவுகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும், அவர்கள் அங்கவீனர்களாக்கப் பட்டாலும் பரவாயில்லை தம்மிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டனர்

இலங்கை அரசு நீதிமன்ற விசாரணைகளுக்காக தயக்கங்களைக் காட்டாது தமது உறவுகளை விடுதலை செய்யுமாறும், தாம் நீதிமன்ற நடவடிக்கைகளை நாடப் போவதில்லை எனவும் அவர்கள் கண்ணீர்மல்கத் தெரிவித்தனர்.

இதேவேளை, காணாமல்போனோர் அமைப்பின் சார்பில் இலங்கை அரசுக்குப் பல பரிந்துரைகளும் இதன்போது முன்வைக்கப்பட்டன. அதனடிப்படையில் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளின் விவரங்களை அரசு வெளியிடவேண்டும், இரகசிய முகாம்கள், இராணுவ முகாகள் தொடர்பான விவரங்களையும், அவற்றில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோரின் பெயர்களையும் வெளியிட வேண்டும், இரகசிய முகாம்கள் மற்றும் இரா ணுவ முகாம்களிலுள்ள கைதிகளைப் பார்வையிடுவதற்கும் உறவுகளுடன் தொடர்பினைப் பேணுவதற்கும் வழியமைக்கப்படவேண்டும், முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்படவேண் டும் என்பதுடன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகியவர்கள் உடன் விடுவிக்கப்பட வேண்டும், இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனிதாபிமானமற்ற செயற்பாடுகளுக்கான விசா ரணை என்பது சர்வதேச சட்டவிதி முறைகளுக்கு அமைவாகவே இடம்பெறவேண்டும் போன்ற பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சர்வதேச நாடுகளின் தூதுவராலயங்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் காணாமற்போனவர்களின் உறவினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-சி)

# கோத்தாவை உடன் கைது செய்யுங்கள்

## அசாத் சாலி வேண்டுகோள்

கொழும்பு, ஒக் 30

அவன்கார்ட் ஆயுதக்கப்பல் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கைதுசெய்யப்படவேண்டும் என மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவன்காட் ஆயுதக் கப்பல் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிப்பதற்குக் குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக, பெரும் ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தீர்மானத்தை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டை அழிக்கக் கூடிய பல்வேறு வகையான ஆயுதங்கள் அவன்கார்ட் ஆயுதக் கப்பலில் இருந்தன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தக்கப்பலிலிருந்து கடற்படைக்குக் கிடைக்கவேண்டிய பலகோடி ரூபா வருமானத்தை அவன்கார்ட் என்ற ஒரு நிறுவனத்திற்கு கோத்தபாய கொடுத்துள்ளார் என்றும் அவர் குற்றம்சுமத்தியுள்ளார்.

இவ்வாறான நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் குடும்பத்தையும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் குடும்பத்தையும் ஏன் தற்போது ஆட்சியிலுள்ள அரசு கைது செய்யவில்லை என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (த-சி)

## அரசியல்

இருப்பதாகவும், ஏனையோருக்கு பிணை வழங்க முடியாதெனவும் சட்டமா அதிபர் திணைக்கள உயர் அதிகாரிகள் தெரிவித் தார்கள் என அரசியல் கைதிகளின் சட்டத்தரணிகள் கூறினர். (த-5)

விசாரணையில் உள்ள கைதிகளையே பிணையில் விடுவிக்க முடியும் என்றும், தண்டனை அனுபவிக்கும் கைதிகளை ஜனாதிபதியே விடுவிக்க முடியும் என்றும் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பிணையில் விடுவிக்க முடியும் என்றும், அதற்கு நீதிமன்றங்களுக்கு பரந்தளவிலான அதிகாரங்கள் உள்ளதாகவும் சிரேஷ்ட சட்டத்தரணி கந்தையா நீலகண்டன் கூறியுள்ளார்.

இதேவேளை 1971 ஆம் ஆண்டு மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் சிங்களக் கிளர்ச்சியாளர் களுக்குப் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டது. அத்துடன் 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக செயற்பட்ட கிளர்சியில் கைது செய்யப்பட்ட தமிழ்க் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது எனத் தமிழர் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளதாக, அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ-5)

## மகிந்த

முப்படையினர் ஆகியோர் காப்பாற்றப்படுவார்கள்

ஐ. நா மனித உரிமைகள் சபையினால் இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச விசாரணையொன்று மேற்கொள்ளப்பட திட்டமிட்டிருந்தால், நாடு பொருளாதாரத் தடைகளை எதிர்கொண்டு பெரிய பிரச்சினைகளைச் சந்திக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கும் என்று கூறினார். (த-வ)

## கண்டாவளை

பிரதான வீதியில் கூடிய மக்கள், பிரதேச செயலகம் அமைந்துள்ள இடம்வரை பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நீண்ட காலமாக இயங்கிவரும் பகுதியை விட்டுப் புதியதொரு பிரதேசமான புளியம் பொக்கணைப் பகுதிக்குக் கண்டாவளை பிரதேச செயலகம் மாற்றப்படுகின்றமையை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரியும், புதிய பிரதேச செயலகத்துக்கான நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளக்கூடாது எனவும் தெரிவித்து குறித்த கவனவீர்ப்பு போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டனர்.

இந்த இடமாற்றத்தைக் கண்டிக்கும் வகையில் ஜனாதிபதி, உள்ளூராட்சி அமைச்சர் ஆகியோருக்கு மனு ஒன்றையும் அவர்கள் கையளித்தனர். (த-21,ரி3)

## குற்றச்சாட்டின்றி

களிலும், 62 பேருக்கு எதிராக நீதவான் நீதிமன்றங்களிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தண்டனை விதிக்கப்படாத, வழக்கு

## இன அழிப்பை

யுள்ளதாக , ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் உதயகுமார் முறைப்பாடு செய்துள்ளார்.

இலங்கையில் தமிழ்ச் சிறுபான் மையினர் இனச் சுத்திகரிக்கப் பட்டமை குறித்த உண்மைகளை மூடி மறைக்கும் வகையில், இந்த அறிக்கை அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசார ணைகளைத் தவிர்க்கும் வகையிலும் மக்ஸ்வெல் பரணகம அறிக்கை தயாரிக்கப்பட்டுள் ளது எனப் பச்சைத்தமிழகம் அமைப்பின் உறுப்பினருமான எஸ்.பி. உதயகுமாரினால் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-வ-5)

## இளவாலை

உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். குறித்த வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிவான் எஸ். சதீஸ்கரன் முன்னிலை யில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது பொலிஸார் தமது அரசதரப்பு சட்டத்தரணி ஊடாக, தமது கட்டுப்பாட்டிலுள்ள தனி யார் காணிகளை மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் விடு விப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். குறித்த உறுதிப்பாட்டை எழுத்து மூலம் சமர்ப் பிக்குமாறு இதன்போது நீதவான் பணித்துள்ளார். அத்துடன் வழக்கை எதிர் வரும் பெப்ர வரி 2 ஆம் திகதி வரை ஒத்தி வைத்துள்ளார்.

இதேவேளை, இளவாலை பொலிஸ் நிலையத்துக்குப் பண் டத்தரிப்பு பகுதியில் தனியார் ஒருவர் தனது காணியை விற் பதற்கு முன் வந்துள்ளார். குறித்த காணி யாழ்.மாவட்டச் செயலகத்தினால் சுவீகரிப்புச் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்டுள்ளது. குறித்தகாணியை விலை மதிப்பீட்டுத் திணைக் களத்தினர் மதிப்பீடு செய்ததும், அடுத்த மாதம் அளவில், பொலிஸாரிடம் மாவட்டச் செயலகத்தினால் காணி உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப் படுகின்றது.

பொலிஸ் நிலையம் அமைந்துள்ள வீடுகளை விடுவிக்குமாறு அதன் உரிமையாளர்கள் இவ்வாண்டு முற்பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## கண்ணீர்க்

ணீர்க்குளமானது.

இற்றைக்கு ஒருவருடத்துக்கு முன்னர் மீரியபெத்தைப்பகுதியில் பேரவலம் அரங்கேறியது. மண்மேடு சரிந்து வந்து ஒரு தோட்டத்தையே விழுங்கியது. இதில் 37 பேர் உயிரிழந்தனர். மேலும் சிலர் படுகாயமடைந்த நிலையில் உயிர்தப்பினர். பாதிக்கப்பட்டவர்களும், உயிர் பிழைத்தவர்களும் தற்போது மாகந்த முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஒருவருடம் கடந்தும் அவர்களுக்கு இன்னும் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவில்லை. போதிய வசதிகளின்றி அவர்கள் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின் றனர். அப்பகுதி மண் விழுங்கிய பகுதி புற் காடாகக் காட்சியளிக்கின்றது. அன்று உடைந்து விழுந்த மகாமுனி சிலையும் அதே நிலையில் இருக்கின்றது. ஆள்நடமாட்டம் இருக்க வில்லை.

7 மணியளவில் மக்கள் கூட்டம் கூட்டமாக மண் விழுங்கிப் பகுதிக்குப் படையெடுக்கத் தொடங்கினர்.

உயிரிழந்த தமது உறவுகளின் உருவப்படங்களைத் தாங்கிவந்த அவர்கள், தமது வீடுகள் அமைந்திருந்த இடங்களில் படங்களை வைத்து அவற்றின் முன் சுடரேற்றி நினைவு கூர்ந்தனர்.

உறவுகளை இழந்த சோகத்தில் இருந்த அவர்கள், அவர்களின் பெயர்களைக் கூறி கதறியழுதனர். எம்மை தனியே விட்டுவிட்டுச் சென்றுவிட்டீர்களே! நீங்கள் இல்லாமல் நாம் படாத பாடு படுகின்றோம் என்று மண்ணில் மண்டியிட்டுக் கதறியழுதனர். இதனால், மீரியபெத்தை சோகமயமானது. அத்துடன், முகாமில் தாங்கள் படும் கஷ்டங்களையும் புலம்பித் தீர்த்தனர்.

இதையடுத்து, மீரியபெத்தை தமிழ் வித்தியாலயத்துக்கு அருகாமையில் அமைக்கப் பட்டிருந்த பந்தலில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இடம்பெற்றது. இதில் பிரதேசவாசிகள் பலரும் பங்கேற்றிருந்தனர். அதன் பின்னர் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திவேண்டி சர்வமத வழிபாடும் நடைபெற்றது.

அதேவேளை, பதுளை பூணாகலை தமிழ் மகா வித்தியாலயத்திலும் நினைவுகூரும் நிகழ்வும் பிரார்த்தனையும் நடைபெற்றதுடன், அன்னதானமும் வழங்கப்பட்டது. அத்துடன், பதுளையிலுள்ள மேலும் சில பாடசாலைகளிலும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மீரியபெத்தை மண்சரிவு அனர்த்தத்தில் சிக்குண்டு உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து நேற்று மலையகத்தின் பல பகுதிகளிலும் மதவழிபாடுகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசின் இயங்கியலுக்கு சிவில் அமைப்புக்களின் ஆலோசனை அவசியம்

## மெக்சிக்கோ மாநாட்டில் அமெரிக்கா வலியுறுத்து மகிந்த ஆட்சியையும் கடுமையாக விமர்சிப்பு



மெக்சிக்கோ சிற்றி, ஒக்.30
இலங்கை அரசு சிவில் அமைப்புக்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இது இலங்கை அரசின் இயங்கியல் மாற்றத்துக்கு மிகவும் அவசியமானது என்று ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மகிந்த ஆட்சியையும் அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

மெக்சிக்கோவில் நடைபெறும், திறந்த அரசுகளின் கூட்டமைப்பின் பூகோள உச்சி மாநாட்டில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அமரிக்கத் தூதுவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சமந்தா பவரின் இந்த உரையின் நான்கில் ஒரு பங்கு இலங்கையில் ஏற்பட்ட மாற்றத்தை விபரிப்பதாக அமைந்திருந்தது. இந்த மாநாட்டில், உரையாற்றிய சமந்தா பவர், இலங்கை தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில்,

இறுதியாக உதாரணம் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இது மிகவும் பொருத்தமான எடுத்துக்காட்டாகும். ஜனவரி 2015 இல், புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் இலங்கையர்கள் வாக்களித்தனர்.

இலங்கையில் முன்னர் ஆட்சியில் இருந்த ராஜபக்ச அரசு மக்கள் மத்தியில் பிரிவினை மற்றும் பீதியைப் பரப்பியிருந்தது. இதனால் அந்த அரசுக்கு எதிராகப் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

2015 ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன களமிறக்கப்பட்டார். இவர் நாட்டில் ஊழலை ஒழிப்பேன் எனவும் மீளிணக்கப்பாட்டை நிலைநிறுத்துவேன் எனவும் தனது தேர்தல் பரப்புரையில் உறுதியளித்திருந்தார்.

இதன் காரணமாகவே இலங்கை வாழ் மக்கள் தமது புதிய ஜனாதிபதியாகச் சிறிசேனவைத் தெரிவு செய்தனர். தன்னால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தீவிர கரிசனையைப் புதிய அரசு காண்பித்தது.

மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான சித்திரவதைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான பணிகளை புதிய அரசு மேற்கொள்ளத் தொடங்கியது. அத்துடன் நாட்டில் ஊழலை ஒழிப்பதற்கான பணியையும் மேற்கொண்டது. இதற்கான விளைவு உடனடியாக ஏற்பட்டது.

ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் தலைமறைவாக இருந்த தொழிற்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ஒருவர், சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் மீண்டும் தனது பணியை ஆற்றத் தொடங்கினார். தான் என்ன செய்கிறேன் என்பது, மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் உற்றுநோக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டதாகவும் இவர் தெரிவித்தார்.

இதேபோன்று உடனுக்குடன் தகவல்களை வெளியிட்டு வந்த பத்திரிகையாளர் ஒருவரும் மகிந்த அரசின் ஆட்சியில் அச்சுறுத்தப்பட்டிருந்தார். இவ்வாறான அச்சுறுத்தல்கள் எதுவும் தற்போது எனக்கு இல்லை எனக் குறித்த பத்திரிகையாளர் கூறுகிறார்.

மற்றவர்களது விமர்சனங்களிலிருந்து விலகிக் கொள்வதும், பொது வளங்களைச் சூறையாடாமல் இருப்பதும் மட்டுமன்றி, உண்மையில் ஒரு நாட்டின் திறந்த அரசு என்பது, தனது நாட்டின் குடிமக்களை மேம்படுத்துவதற்கான வழிகளையும் கண்டறிந்து செயற்படுத்த வேண்டும்.

அதாவது இதன் மூலம் மட்டுமே ஒரு நாட்டின் குடிமக்கள் தமக்கு விருப்பமான அரசை வடிவமைத்துக்கொள்வதற்குத் தமது அளப்பரிய சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். எனவே சிறிசேனவின் அரசும் இவற்றைக் கடைப்பிடிக்குமாறு உந்தப்படுகிறது.

இதேவேளை, இலங்கையின் கடந்த கால வரலாற்றில் இடம்பெற்ற இருண்ட மற்றும் மிகவும் வலிதோய்ந்த அத்தியாயங்களுடன் இலங்கையின் தற்போதைய அரசு முரண்படுகிறது.

சிறிசேன அரசானது நாட்டில் பெரியளவில் மீளாய்வை மேற்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. தகவல் அறியும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகத் தற்போது நாடாளுமன்றில் விவாதிக்கப்படுகிறது.

நாட்டில் ஓரங்கட்டப்பட்ட சமூகத்தவர்களுடன் தொடர்புகளைப் பேணுவதற்கான பணிகளைத் தற்போது இலங்கையின் தகவல் தொழில்நுட்ப அமைப்பு மேற்கொள்கின்றது. ஏனெனில் இலங்கையின் ஓரங்கட்டப்பட்ட சமூகங்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் தம்மைப் பற்றிய தகவல்களைப் பரிமாறுவதற்குமான தொடர்பாடல் வசதிகளைக் கொண்டிருக்கவில்லை. இலங்கையின் பல்வேறு சட்டங்கள் நிலைமாற்றத்தக்கதாகக் காணப்படவில்லை.

ஆனால் இலங்கை அரசின் நடவடிக்கைகளை மாற்றியமைப்பதற்கான இயலுமையைத் தனது குடிமக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு அரசில் உள்ள உறுப்பினர்கள் உதவமுடியும்.

இந்த முயற்சியில் பல்வேறு சவால்களுக்கு இலங்கை முகம்கொடுக்கிறது. இது தொடர்பில் இலங்கை பல்வேறு அனுபவங்களைப் பெற்றுள்ளது. இலங்கையில் இழைக்கப்பட்ட தவறுகள் மற்றும் ஊழல்களை நாட்டிலிருந்து ஒழிப்பதற்காக அரசு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

இவ்வாறான மீறல்கள் தொடர்பில் இலங்கை பொறுப்புக்கூறுவதுடன், வெளிப்படைத்தன்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி, அதன் குடிமக்கள் தொடர்ந்தும் உறுதியுடன் செயற்பட வேண்டும் என்பதையே இலங்கையில் அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் சுட்டிநிற்கின்றன.

அத்துடன் இலங்கையின் தலைவர்கள் உண்மையில் மக்களுக்காகச் சேவையாற்ற விரும்புவதால் இவர்கள் குறுகிய காலப்பகுதியில் எவ்வாறான சாதனைகளை அடைந்து கொள்ள முடியும் என்பதை இது சுட்டிநிற்கிறது.

இலங்கை அரசு, தனக்கு முன்னுள்ள சவால்களை விருப்புடன் முகம்கொடுக்க முற்படுமாயின் பலவற்றைச் சாதிக்க முடியும் என்பதையே நான் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். இலங்கையும் தற்போது திறந்த அரசின் கூட்டமைப்பில் இணைந்துள்ளது.

இதனால் திறந்த அரசுகளின் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய அரசுகளிடமிருந்து சிறிசேன அரசு நிறையக் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. நாங்களும் கூட இதிலிருந்து பலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

இலங்கையின் சிவில் சமூகமானது தனது அரசின் செயற்பாடுகளை வடிவமைப்பதில் அதிகளவான பங்களிப்பை மேற்கொள்வதில் உறுதியாக உள்ளது. எனவே இலங்கை அரசும் சிவில் அமைப்புக்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதுவே இலங்கை அரசின் மிகப்பெரிய வளங்களில் ஒன் றாகும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் காணப்படாத மிகவும் அரியதொரு வளமாக இது அமைந்துள்ளது. இதுவே இலங்கை அரசின் இயங்கியல் மாற்றத்துக்கு மிகவும் அவசியமானதாகும்.

இதன் காரணமாகவே இலங்கை போன்ற நாடுகளை மட்டுமல்லாது நான் அங்கம் வகிக்கும் அமெரிக்கா போன்ற அரசுகளுக்கும் திறந்த அரசுகளின் கூட்டமைப்பு தன்னுடன் இணைவதற்கான அனுமதியை வழங்குகிறது.

அமெரிக்க அரச அதிகாரிகள் உலக நாடுகள் முழுவதற்கும் பயணம் செய்து, அந்தந்த நாடுகளில் உள்ள சிறந்த எண்ணங்களைத் தனது நாட்டுக்காகப் பயன்படுத்துவதில் ஈடுபடுகின்றனர். நாங்கள் நிறையக்கற்றுக்கொள்ளவேண்டியுள்ளது. இதன் காரணமாகவே திறந்த அரசுகளின் கூட்டமைப்பை உருவாக்குவதற்காக நாங்கள் எம்மை முழு அளவில் ஈடுபடுத்தியுள்ளோம்.

எமது அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து என்றும் விலகாது மிகவும் இன்றியமையாத, புதுமையான மற்றும் பயனுள்ள திறந்த அரசுகளின் கூட்டமைப்பை உருவாக்குவதற்காக நாங்கள் எம்மை அர்ப்பணித்துள்ளோம்-என்றார்.

(து-வ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சர் கிண்ணத்துக்கான சதுரங்கத் தொடரின் முடிவுகள்





கரணவாய், ஒக். 30
பருத்தித்துறைக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான முதலமைச்சர் கிண்ணத்துக்கான சதுரங்கத் தொடர் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றன. குறித்த தொடரில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

**ஆண்கள் பிரிவு**

8 வயது ஆண்கள் பிரிவில் மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தின் யூ.பிருத்திகன் முதலாம் இடத்தையும் வல்வெட்டித்துறை அ.த.க. பாடசாலையின் மு.பரிதியன் இரண்டாம் இடத்தையும் புற்றளை மகாவித்தியாலயத்தின் வீ.காவியன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

10 வயது ஆண்கள் பிரிவில் தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையின் அ.சாகின்ஞ்ஞை முதலாம் இடத்தையும் துன்னாலை வடக்கு மெ.மி.த.க. பாடசாலையின் இ.கஜீவன் இரண்டாம் இடத்தையும் துன்னாலை வடக்கு மெ.மி.த.க. பாடசாலையின் வி.தருண் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

12வயது ஆண்கள் பிரிவில் காட்லிக் கல்லூரியின் மு.சந்தோஸ், சி.மதுராங்கன், சி.விஸ்ணுஜன் ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றினர்.

14 வயது ஆண்கள் பிரிவில் காட்லிக் கல்லூரியின் இ.தனுஜன், கே.கரீஸ், கே.ரிசிகோபன் ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களையும் தமதாக்கினர்.

16 வயது ஆண்கள் பிரிவில் காட்லிக் கல்லூரியின் பு.நிலக்சன், த.கஜானன், ஆ.உதயதர்சன் மூவரும் முறையே முதல் மூன்று இடங்களைக் கைப்பற்றினர்.

**பெண்கள் பிரிவு**

8 வயது பெண்கள் பிரிவில் மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தின் தி.அபிசனா முதலாம் இடத்தையும் அதே வித்தியாலயத்தின் ச.ஆரணி இரண்டாம் இடத்தையும் வல்வெட்டித்துறை அ.த.க. பாடசாலையின் த.மாதங்கினி மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

10வயது பெண்கள் பிரிவில் மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தின் ர.சானுசா முதலாம் இடத்தையும் வல்வெட்டித்துறை அ.த.க. பாடசாலையின் உ.பிரதீபா இரண்டாம் இடத்தையும் தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தின் என். நிவேதா மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

12 வயது பெண்கள் பிரிவில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வைஸ்ணவி ஜொ.கானழகி, கே.மாதுமை மூவரும் முறையே முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றினர்.

14 வயது பெண்கள் பிரிவில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பி.ஜோதினி, ப.துவாரகா, பு.அர்ச்சனா மூவரும் முறையே முதல் மூன்று இடங்களை தமதாக்கினர்.

16 வயது பெண்கள் பிரிவில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஏ.ஆதித்தியா, கு.துஸ்யந்தினி, மாதங்கி மூவரும் முறையே முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றினர்.

18 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் கே. மாதுமை முதலாம் இடத்தையும் வடஇந்துமகளிர் கல்லூரியின் கே.பிரபாஜினி இரண்டாம் இடத்தையும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வி. நீர்த்திகா மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர். 18 வயதுக்கு மேற்பட்டோர் பிரிவில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வே.நிதர்னா முதலாம் இடத்தையும் வட இந்துமகளிர் கல்லூரியின் எஸ். மாதுளா இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர். (ம-108)



ஜப்பானின் தசனபே என்னும் இடத்தில் கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற 11நாடுகளுக்கு இடையிலான கராத்தே தொடரில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்த்த சின்னத்துரை விஜயராஜ் க்காட்டா போட்டியில் சிறந்த எட்டு வீரர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம-23)

## இடமாற்றம்



யாழ்ப்பாணம், ஒக். 30
மழை காரணமாக வடமாகாண விளையாட்டுவிழா இடம்மாற்றப்பட்டுள்ளதாக வடமாகாண விளையாட்டு அமைச்சின் செயலாளர் இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் வவுனியா நகரசபை மைதானத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்ட குறித்த தொடர் மழையினால் ஏற்பட்ட மைதானத்தின் சீரற்ற தன்மையின் காரணத்தினால் வவுனியா கல்வியியற் கல்லூரி மைதானத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. (ம - 108)

## மீண்டும் சமன் செய்தார் ஆனந்த்



ஸ்பெயினில் நடைபெற்று வரும் செஸ் தொடரின் இரண்டாவது சுற்றையும் சமநிலையில் முடித்துள்ளார் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த்.

ஸ்பெயின் செஸ்ஸின் நடப்புச் சம்பியனான ஆனந்த் முதல் சுற்றில் ஆலந்து வீரர் அனிஸ் கிரியுடன் டிரா செய்தார். இந்நிலையில் அவர் நேற்று சீனாவின் லைரெனிற்கு எதிரான ஆட்டத்தையும் சமநிலையில் முடித்துள்ளார். முதல் இரண்டு செற்களின் முடிவில் அமெரிக்காவின் வெல்ஸே வெஸ்லே 4 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். விஸ்வநாதன் ஆனந்த், அனிஸ் கிரி இருவரும் தலா 2 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், லைரென் டிங் 1 புள்ளியுடன் கடைசி இடத்திலும் உள்ளனர். (ம)



## திருக்குடும்ப கன்னியர் – கொக்குவில் இந்து இறுதியாட்டத்தில் இன்று பலப்பரீட்சை

யாழ். மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபையினரால் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் பொ.விபுலானந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்படும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணியும், கொக்குவில் இந்துக்கல்லூரி அணியும் இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணி மோதிக்கொண்டது. இதில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணி 48:43 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி யாழ். இந்து மகளிர் கல்லூரியை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-23)



[illegible] சனசமூக நிலையத்தின் 45 ஆவது ஆண்டு விழாவையொட்டி நடைபெற்ற 60 கிலோ மீற்றர் சைக்கிளோட்டப் போட்டியின் பதிவு. (ம-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## களமிறங்குகிறார் வேகப்பந்து வீச்சாளர் முகமது சமி

இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான முகமது சமியின் உடல்நலம் தற்பொழுது சிறந்த முறையில் இருப்பதாகவும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான இறுதி டெஸ்ட்டில் அவர் களமிறங்க வாய்ப்புக்கள் உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கணுக்காலில் ஏற்பட்ட காயத்துக்கு கடந்த மாதம் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட சமி டெல்லியில் மைதானம் ஒன்றில் சிறப்புப் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளார். 70 சதவீதம் உடல் நிலை தேறியுள்ள அவர் டிசம்பர் மாதம் தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான கடைசி டெஸ்டில் களமிறங்க வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)



## குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்படும்வரை மிஸ்ராவுக்கு விளையாட அனுமதி

அமித் மிஸ்ரா மீதான குற்றச்சாட்டு உண்மை என்று நிரூபிக்கப்படும் வரை அவர் எந்தவொரு தடங்கலும் இல்லாமல் இந்திய அணியில் தொடர்ந்தும் விளையாடுவார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 25ஆம் திகதி பெங்களூரில் உள்ள ஒரு விடுதியில் அமித் மிஸ்ராவுக்கும், அவரது நீண்டகாலத் தோழியுமான வந்தனா ஜெயனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் மிஸ்ரா தோழியை தாக்கித்திட்டியதாககூறப்படுகிறது. இது தொடர்பான முறைப்பாட்டின் அடிப்படையில் அவரை பெங்களூர்பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர். கிட்டத்தட்ட 3 மணிநேர விசாரணைக்குப் பிறகு அவர் பிணையில் விடுதலையானார். இதனால் மிஸ்ரா இந்தியாவுக்காக விளையாட அனுமதிக்கப்படுவாரா? என்ற கேள்வி எழுந்தது.

குறித்த விடயம் தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை விடுத்துள்ள அறிக்கையில் – இந்த வழக்குத் தொடர்பான விவரங்களைச் சேகரித்து வருகிறோம். இது கவலை அளிக்கக்கூடிய குற்றச்சாட்டா என்று தெரியவில்லை. இதுகுறித்து பின்னர்தான் முடிவு செய்யப்படும். அதே நேரத்தில் அமித் மிஸ்ரா மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாதவரை அவர் விளையாட அனுமதிக்கப்படுவார் – என்றுள்ளது. (ம)

# அடுத்த உலகக்கிண்ணம்வரை கப்டனாக டோனி வேண்டும்

## சேவாக் விருப்பம், விமர்சகர்களுக்கும் கடும் காட்டம்




தான் அணியில் இருந்து விலக்கப்பட்டமைக்கு டோனி காரணமல்ல என்று தெரிவித்த சேவாக், அடுத்த உலகக்கிண்ணத் தொடர் வரை டோனியே தலைவராக நீடிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய அணியின் அதிரடித் தொடக்கவீரரான சேவாக் கடந்த 20ஆம் திகதி ஓய்வை அறிவித்தார். கடந்த சில வருடங்களாக அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டவர்களில் சேவாக்கும் ஒருவராவார். சேவாக்கின் இந்தப் புறக்கணிப்புக்கு டோனிதான் காரணம் என்று பொதுவான கருத்துக் கணிப்புக்கள் நிலவின. இந்த நிலையில் தனது ஓய்வின் பின்னர் டோனி தொடர்பாக சேவாக் தெரிவித்ததாவது:– டோனியின் மீது சில மாதங்களாக பல்வேறு விதமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இது தவறானது. அவர் ஒரு சிறந்த வீரர் என்பதனைவிட அற்புதமானதலைவர் என்பதேமிகையானது. அடுத்த உலகக்கிண்ணத்தொடர்வரை அவர் தலைமைப் பொறுப்பில் நீடிக்க வேண்டும். அவர் அவ்வாறு செய்தால் நல்ல அணியை அவர் ஏற்படுத்துவார். மீண்டும் கிண்ணத்தை கொண்டுவரக் காரணமாய் இருப்பார். அவர் தலைமையை இழந்தால் சிறந்த ஒரு தலைவரை இந்தியா இழக்கும். ஓய்வு பெற்றால் 4அவது 5ஆவது 6ஆவது 7ஆவது இடங்களில் எந்த இடத்திலும் களமிறங்கி ஆடக்கூடிய நம்பிக்கையான துடுப்பாட்ட வீரரை இந்தியா இழக்கும். இதற்கு யாரும் காரணமாகி விட வேண்டாம்.

யுவி (யுவராஜ்), பஜ்ஜி (ஹர்பஜன்), கம்பீர், சகீர் (சகீர்கான்) மற்றும் நான் அணியில் இருந்து நீக்கப்படுவதுக்கு டோனிதான் காரணம் என்கிறார்கள். நிர்வாகம், அணித் தெரிவு போன்றவை தொடர்பான அடிப்படை அறிவு அற்றவர்களே இவ்வாறான கருத்துக்களை வதந்திகளாகப் பரப்புகின்றனர். எமது புறக்கணிப்புக்கு டோனி காரணம் அல்ல. எமது திறனில் ஏற்பட்ட வீழ்ச்சியே அதற்குக் காரணம். இதை யுவராஜ் எற்கனவே வலியுறுத்தி விட்டார். டோனிதான் காரணம் என்றால் தற்பொழுது ஹர்பஜன் மீண்டும் அணியில் இணைந்திருக்கிறாரே இதற்கு என்ன பதில் உங்களிடம் உண்டு. டோனி நல்ல இதயம் படைத்த மனிதர். மூத்த வீரர்களான நாங்கள் அவரை மதித்தோம். அதுவும் அவர் முதன் முதலாக தலைமைப் பொறுப்பு ஏற்றவுடன் அவரது தலைமையின் கீழ் ஆடிய மூத்த வீரர்களான நாங்கள் அவருக்கு ஆலோசனைகளை வழங்கினோம், அந்த ஆலோசனைகளை அவர் உடனடியாக நடைமுறைப்படுத்தியும் உள்ளார். வீரர்களான எங்களுக்கு டோனி பற்றியும் அவரது நுட்பங்கள் பற்றியும் நன்றாகத் தெரியும். அதனால் தான் இந்திய வீரர்களின் உடைமாற்றும் அறை மிகுந்த ஆரோக்கியமாக உள்ளது.

சுருங்கக்கூறினால் மைதானத்தில் டோனி நிற்கும் பொழுது அனைத்து கமராக்களும் அவரைப் பார்த்தபடியே நிற்கும். தொடர் முடிந்தவுடன் டோனியை பார்க்கும் கமராக்கள் மிகக்குறைவு. ஏனெனில் கிண்ணத்தை எங்களிடம் தந்துவிட்டு அவர் ஒதுங்கி விடுவார். அதுதான் டோனி' என்றார் உருக்கமாக. (ம)

## மில்லர் நண்பர் மட்டுமே



பஞ்சாப் அணியின் உரிமையாளரான பிரீத்தி ஜிந்தா, தன்னைப் பற்றியும் மில்லர் பற்றியும் ஊடகங்களில் வெளியான செய்திக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு நீண்ட தொடரில் விளையாடி வருகிறது. இந்நிலையில் அந்த அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரரான டேவிட் மில்லர், பஞ்சாப் அணியின் உரிமையாளர்களில் ஒருவரும், பிரபல நடிகையுமான பிரீத்தி ஜிந்தாவைச் சந்தித்துள்ளார். இருவரும் சேர்ந்து பல்வேறு இடங்களுக்குச் சுற்றித் திரிந்ததையடுத்து இருவரும் காதலிப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியது. இந்தச் செய்திக்கு ஜிந்தா தனது கண்டனத்தைத் தெரிவித்ததுடன் 'மில்லர் பஞ்சாப் அணியைச் சார்ந்தவர். நான் அதன் உரிமையாளர். அதனால் இருவரும் சந்தித்து கொண்டோம் – என்றார். (ம)

## ஓய்வுபெற்ற வீரர்களின் தொடரில் ஆரம்ப வீரர்களாக சச்சின், சேவாக்



சச்சின், வோர்ண் இணைந்து நடத்தத் திட்டமிட்ட ரி–20 தொடரில் சச்சின் அணியில் சேவாக் விளையாடவுள்ளார். தவிர சச்சின், சேவாக் இருவருமே ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கவும் உள்ளனராம்.

அமெரிக்காவில் நடக்கும் இந்தத் தொடர் எதிர்வரும் 7ஆம் திகதி தொடங்குகிறது. இதில் சச்சின் பிளாஸ்டர்ஸ் – வோர்னே வொரியர்ஸ் அணிகள் மோதுகின்றன. இந்த தொடரில் விளையாட கங்குலி, லக்ஸ்மன், ரிக்கி பொண்டிங், கலிஸ், லாரா, முரளிதரன், குமார் சங்கக்காரா, ஜெயவர்த்தனே ஆகியோர் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் சமீபத்தில் சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெற்ற இந்திய அதிரடி வீரர் சேவாக்கும் இணைந்துள்ளார். இதனை சச்சின் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம)



நடப்பு வருடத்தில் நடைபெற்ற [illegible] போட்டியில் புதிய சாதனைகளை நிகழ்த்திய மன்னார் கல்வி வலயத்துக்கு உட்பட்ட நானாட்டான் கல்விக் கோட்ட மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நானாட்டான் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. அமல உற்பவ கன்னி மரியாளின் சமூக மற்றும் கல்விப்பணிகளுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வுகள் நடைபெற்றன. (ம–56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவாக்கை கௌரவிக்க பி.சி.சி.ஐ. ஏற்பாடு



இந்த மாதம் 20ஆம் திகதி தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கைக்கு விடைகொடுத்த சேவாக்கை கௌரவிக்க இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை முடிவுசெய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய அணியில் முக்கிய பங்குவகித்த சேவாக்கை உரிய மரியாதையுடன்வழியனுப்பி வைக்க வேண்டும் என முன்னாள் வீரர்களும் கிரிக்கெட்விமர்சகர்களும்கோரிக்கை வைத்த வண்ணம் உள்ளனர். இந்த நிலையில் டெல்லியில் நடைபெறும் இந்தியா – தென்னாபிரிக்கா இடையிலான 4வது டெஸ்ட் ஆட்டத்தின் கடைசி நாளில் (டிசம்பர் 7ஆம் திகதி சேவாக்கிற்கு பாராட்டு விழா நடத்த பி.சி.சி.ஐ. திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது மட்டுமல்லாமல் டெல்லி யின் கோட்லா மைதானத்தின் ஏதேனும் ஒரு நுழைவு வாசலுக்கு சேவாக் பெயரை வைப்பது தொடர்பாகவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. (ம)

## மரதன் ஓட்டத்தில் மோசடி சிக்கினார் இடை நுழைந்த வீரர்

கென்யாவில் நடைபெற்ற சர்வதேச மரதன் ஓட்டத்தில் திடீரென இடையே நுழைந்து இரண்டாவதாக வந்து மோசடி செய்யப்பட்ட வீரர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மீது மோசடி மற்றும் ஏமாற்று வேலை தொடர்பான வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. கடந்த ஞாயிறன்று நடைபெற்ற இந்த ஓட்டப் போட்டியில் நஜோகு என்ற வீரர் 42 கி.மீ. தூரம் ஓடாமல், கடைசி நேரத்தில் ஓட்டத்தின் இடையே புகுந்து 2ஆவதாக வந்தார். இந்த இடத்துக்கான பரிசுத் தொகை 7,000 டொலர்கள் ஆகும். ஆனால் அவர் செய்த மோசடி அம்பலமாக, கைது செய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்ட அந்த வீரர் ஒரேயொரு கிலோ மீற்றர் மட்டுமே ஓடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (ம)

## ரட்வன்ஸ்காவிடம் வீழ்ந்தார் கெலெப் 500ஆவது வெற்றியாகவும் பதிவு



சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் முதல் 8 இடங்களிலும் உள்ள வீராங்கனைகளுக்கு மட்டுமாக தொடரொன்று நடத்தப்படுவதுண்டு. நடப்புவருடத்தின் இந்தத் தொடர் சிங்கப்பூரில் நடைபெற்று வருகிறது. குறித்த தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் ரட்வன்ஸ்காவிடம் வீழ்ந்தார் கெலெப். தரப்படுத்தலில் ரட்வன்ஸ்கா 6ஆவது இடத்திலும் கெலெப் 2ஆவது இடத்திலும் உள்ளமையால் கெலெப்பின் ஆதிக்கம் சிறிது அதிகரித்து இருக்கும் என்ற கருத்துக் கணிப்பே நிலவியது. ஆனால் முதல் செற்றை 6–5 என கைப்பற்றிய ரட்வன்ஸ்கா தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி இரண்டாவது செற்றை 6–1 என கைப்பற்றி அரையிறுதிக்கான வாய்ப்பை அதிகப்படுத்தினார். ரட்வன்ஸ்காவுக்கு இது 500ஆவது வெற்றியாகும். (ம)

# சச்சின் மீது பகில்தேவ் அதிருப்தி



சச்சின் ரெண்டுல்கர் தனது அபரிதமான திறமைகளுக்கு நியாயம் செய்யவில்லை, அவர் முச்சதம், நாற்சதங்களை எடுத்திருக்க முடியும் ஆனால் அவரால் அது முடியவில்லை என்று உலகக்கிண்ணம் வென்ற இந்திய முன்னாள் சகலதுறை வீரர் கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

சச்சின் தொடர்பாக கபில்தேவ் தெரிவித்ததாவது:– என்னை தவறாகப் புரிந்து கொள்ளவேண்டாம். தனது திறமைக்கு சச்சின் நியாயம் செய்யவில்லை. அவர் செய்ததைக் காட்டிலும் இன்னும் கூட அதிகமாக சாதித்திருக்க முடியும் என்றே நான் எப்போதும் கருதுகிறேன். கருணை காட்டாத சர்வதேச கிரிக்கெட்டிற்கு அவர் தன்னை அவரது திறமைக்கேற்ப ஈடுபடுத்திக்கொள்ளவில்லையோ என்று தோன்றுகிறது. சச்சினிடம் திறமை இருந்தது. உத்தி ரீதியாக வலிமையானவர், ஆனால் அவர் சதமெடுக்கவே இருந்ததாக தெரிகிறது.' என்றார். (ம)


வடமாகாண பரீசைகளுக்கான விசேட கருத்தரங்குகள்

ஆசிரியர் தெரிவுக்கு
பிரதி ஞாயிறு 10.00 - 2.00 மணிவரை

அலுவலக பணியாளர்
பிரதி ஞாயிறு பி.ப.1.00-5.00 மணிவரை

விளையாட்டு உத்தியோகத்தர்
ஞாயிறு 1.00 மணி

அதிபர் சேவை
ஞாயிறு 10.00 மணி

076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு.



போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
விரைவில் நடைபெறவுள்ள
வடமாகாண பட்டதாரி ஆசிரியர் போட்டிப் பரீட்சை
வடமாகாண அலுவலக உதவியாளர் போட்டிப் பரீட்சை
விரிவுரையாளர்கள்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
Sat,Sun 9.00-4.00pm
(பிரதி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்)
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி,யாழ்.நகர்.
T.P: 0774696695


# மேவதரின் புதிய கார்

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல முன்னாள் குத்துச் சண்டை வீரரான பிளாயிட் மேவதர். இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 70 கோடி பெறுமதியான கார் ஒன்றை வாங்கியுள்ளார்.



38 வயதான இவர் இந்தத்தலைமுறையின் சிறந்த வீரர் ஆவார். தான் மோதிய 49 ஆட்டத்திலும் வென்று தோல்வியை தழுவாமல் சமீபத்தில் ஓய்வு பெற்றார். குத்துச் சண்டை போட்டி மூலம் கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்து அதிக சொத்துக்களை உடைய விளையாட்டு வீரர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். மேவதரிடம் உள்ள சொத்துமதிப்பு இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 47ஆயிரம் கோடிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


பணியாளர்கள் தேவையா?
உங்கள் நிறுவனத்துக்கு வேண்டிய தகுதியான பணியாளர்களைப் பெற்றிட இன்றே
இலவச சேவை WIN STAR JOB BANK இலவச சேவை
இனை நாடுங்கள்
- எவ்விதமான கட்டணங்களும் இல்லை.
- சகலவிதமான தகைமைகளுடனும் எம்மிடம் பணியாளர்கள் உண்டு.
- உங்கள் விளம்பரச் செலவினை தவிர்த்துக் கொள்ளலாம். குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

WIN STAR JOB BANK மூலம் பணியாளர்களைப் பெற்று உங்கள் நிறுவனத்தினை வளமாக்கிடுங்கள்
WIN STAR JOB BANK
No.106, Post box Junction, Palaly Road, Thirunelvely.
021 320 9727
(64776)(10.15.17)


# மத்தி இறுதிக்கு தகுதி



யாழ். மத்திய கல்லூரியின் மாண வர் முதல்வர் சபையினால் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் பொ.விபுலானந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்படும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ்.மத்திய கல்லுஸரி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 55:48 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம–23)


## மரண அறிவித்தல்

ஆறுமுகம் குணலிங்கம் (குணலிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)



புங்குடுதீவு, 6 வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் குணலிங்கம் நேற்று (29.10. 2015) வியாழக்கிழமை காலமானார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர். 021 222 9345
298, நாவலர் வீதி, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.



அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226241
கிளிநொச்சி 0768226240
நெல்லியடி
வல்வெட்டித்துறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.